www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 11/00
දිනමුරසු වාරමලර්
மார்ச் 15–21,1998

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 248

## எ
## திர்வரும் சித்திரைப் புத்தாண்டும்
## திர்நோக்கும் நெருக்கடிகளும்

## காணமடிக்கும் அரச தரப்பு

## படையினரின் போதனைகள்



## மாணவிகள் முற்றுகை

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தி

படிப்பகம்

# முரசம்

## ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஆளும் கட்சியிடம்
இருப்பதும் சோளப்பொரி!
எதிர்க்கட்சி நீட்டுவதும்
சோளப்பொரி!
பொரிப் பொட்டலங்கள்
சுற்றப்பட்டுள்ள
காகிதங்களின் வர்ணங்கள்
மட்டும்தான் வேறுபடுகின்றன!
அரசின்
பொரிப் பொட்டலம்
நீல நிறம்!
எதிர்க்கட்சியின்
பொரிப் பொட்டலம்
பச்சை நிறம்!
மேற்கண்ட
இரண்டு தரப்புக்களும்
பேரினவாத நிலைப்பாட்டில்
இருந்து சற்றும்
இறங்கிவரவில்லை!
அரசியல் தீர்வுக்கான
அடிப்படைக் கோட்பாடுகளை
இரு தரப்புக்களும்
முற்றாக நிராகரித்துள்ளன!
வடக்கு-கிழக்கை
கூறுபோடும் விடயத்தில்
இரு தரப்புக்களுக்கும்
வேறுபாடு கிடையாது!
ஆளும் தரப்பின்
பொட்டலத்திற்குள்ளும்
கத்தி இருக்கிறது!
அன்பொழுக
சுத்திச் சுத்திப் பேசி
கத்தியை மறைக்கப் பார்க்கிறது!
எதிர்க்கட்சியின்
பொட்டலத்திலும்
பிளக்கும் கத்தி இருக்கிறது!
வடக்கு-கிழக்கை
கூறுபோட்டுவிட்டு,
அதிகாரத்தைக் கூட்டித் தரலாம்
என்று இரு தரப்பும்
ஆசை காட்டப்பார்க்கிறது!
அத்திவாரத்தைப் பற்றி
பேசவேண்டிய நேரத்தில்
மேற்கட்டுமானம் பற்றி
பேசிப் பயன் என்ன?
வடக்கு-கிழக்கு
தமிழ் பேசும் மக்களின்
பிரிக்கப்பட முடியாத
பாரம்பரியத் தாயகம்!
அதுதான் அத்திவாரம்!
அதன்மேல் எழுப்பப்படும்
மேற்கட்டுமானங்கள்தான்
அதிகாரங்கள்-
நிர்வாக முறைமைகள்!
அத்திவாரம்
பலமாக இருந்தால்தான்
அதன்மேல் கட்டப்படும்
கட்டடம் தாக்குப்பிடிக்கும்!
இன்று தரும் அதிகாரத்தை
இன்னொரு சந்தர்ப்பத்தில்
திரும்ப எடுத்துக்கொள்ளலாம்!
எழுத்தில் உள்ள
அதிகாரங்களைக்கூட
நடைமுறையில் மறுக்கலாம்!
அந்தச் சந்தர்ப்பங்களில்
எதிர்த்து நின்று
துணிந்து போராட
பலம் வேண்டும்!
தளம் வேண்டும்!
அந்தப் பலமும், தளமும்
பிரிக்கப்பட முடியாத
எமது தாயகப் பிரதேசம்தான்!
தமிழ் பேசும் மக்களின்
பாதுகாப்பு, சுயகௌரவம்
சமூக, பொருளாதார முன்னேற்றம்
என்பன வெறுமனே
அதிகாரங்களில் தங்கியிருக்கவில்லை!
தங்களுக்கென்றுள்ள
பாரம்பரியமானதும்,
தொடர்ச்சியானது பிரதேசத்தை
பாதுகாத்துக் கொள்வதிலேயே
பிரதானமாகத் தங்கியுள்ளது!
எனவே, ஆளும் தரப்பு-
எதிர்த்தரப்பு இரண்டிலும்
யாருடைய யோசனை சிறந்தது,
என்ற கேள்விக்கே இடமில்லை!
ஆராய்ச்சியும் அவசியமற்றது!
இருதரப்பும்-ஒரே குட்டையில்
ஊறிய மட்டைகளே!
எனவே- தமிழ் பேசும் தரப்பின்
உடனடிக் கடமை-
இருதரப்பின் மீதுமுள்ள
[illegible]மது நம்பிக்கையீனத்தையும்
[illegible]வை முன்வைத்துள்ள
[illegible]ரைகுறைத் தீர்வையும்
[illegible]கில உலகறிய
[illegible]பலப்படுத்துவது மட்டுமே!

■ ■

[illegible]டும் மறுமடலில்
[illegible] கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## ஜமாஅத் தொழுகையின் பலன்கள் (சிறப்புக்கள்)

ரஸூலுல்லாஹிஸெல்லல்லாஹு (அலை) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் அபூஹுரைரா (ரலி) அறிவிக்கிறார்கள்:

"ஜமாத்துடன் தொழுத தொழுகைக்கு ஒருவர் தன் வீட்டிலோ, கடையிலோ தொழுத தொழுகையைவிட, இருபத்தைந்து மடங்கு இரட்டிப்பான நன்மை கிடைக்கிறது. ஒருவர் நன்கு வுழூச் செய்து, தொழுவதைத் தவிர வேறு எண்ணமில்லாமல் பள்ளிவாசலுக்குச் சென்றால் அவருடைய ஒவ்வோர் எட்டுக்கும் ஒரு நன்மை கிடைக்கிறது.

ஒரு பாவம் மன்னிக்கப்படுகிறது. அவர் தொழுத பிறகு அதே இடத்தில் வுழுவுடன் உட்கார்ந்து இருக்கும்வரை அவருடைய பாவ மன்னிப்பிற்காகவும், ரஹ்மத்திற்காகவும் மலக்குகள் துஆச் செய்கிறார்கள். மேலும் தொழுகையை எதிர்பார்த்து உட்கார்ந்து இருக்கும்வரை அவர் தொழுகையின் நன்மையை அடைந்துகொள்வார்."

மேலும், மதீனா நகரில் 'பனூசலமா' என்று ஒரு கூட்டத்தார் இருந்தார்கள். அவர்களின் வீடுகள் பள்ளிவாசலிலிருந்து வெகு தூரத்தில் இருந்தன. ஆகவே, அவர்கள் பள்ளிவாசலுக்கு அருகில் குடியேற விரும்பினார்கள்.

இதைக் கேள்விப்பட்ட நபி(ஸல்) அவர்கள், "நீங்கள் அங்கேயே இருங்கள். நீங்கள் தொழுவதற்காக பள்ளிவாசலுக்கு எடுத்துவைக்கும் ஒவ்வோர் எட்டுக்கும் நன்மை கிடைக்கும்!" என்றும், "வீட்டில் வுழூச் செய்துவிட்டுப் பள்ளி வாசலுக்குச் செல்பவர் இஹ்ராம் கட்டிக் கொண்டு 'ஹஜ்ஜுக்குச்' செல்பவரைப் போலாவார்!" எனவும் கூறினார்கள்.

தொகுப்பு: முஹம்மது நிஸான் ஸஹான், அக்குரஸ்ஸ.

## ஆன்மீகம்

### தெய்வத்தை நம்புங்கள்! நிம்மதி கொள்ளுங்கள்!



பலாப்பழம் உரிக்காமல் உண்ண முடியாது. உரித்தால் பிசின் கட்டாயம் கையில் ஒட்டும். அதற்காக பழத்தை விட்டு விடமுடியுமா?

கையில் எண்ணெய்யைத் தடவிக் கொண்டு உரித்தால் பிசின் ஒட்டாது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லியுள்ளபடியே செய்வோம். கையில் எண்ணெய்யைத் தடவிக் கொண்டு பலாப்பழம் உரிப்பது போல இறைவனைப் பணிந்து உலக வாழ்வை நடத்துவோம். அதன் துன்பம் நம்மைத் தொடாமல் போகட்டும்.

இறைவனைப் பணிவதற்கு முதலில் தெய்வத்தை நம்ப வேண்டும். அந்த நம்பிக்கை வந்துவிட்டால் நிம்மதிக்கும் வழி பிறந்ததாகிவிடும்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்பது நல்ல பழமொழி.

இதற்காகவே "சந்நியாசியாகப் போகிறேன்!" என்று கிளம்பிய அருச்சுனனைக் கடவுளான கண்ணனும், 'என்னைப் பணிந்து கடமையைச் செய்' என்று உலக வாழ்க்கைப் போரில் ஏவினான்.

மனிதன் என்றால் குறையுள்ளவனே. ஊழின் பெரும் வலியுள் சிக்கியவனாக வேறு இருப்பதால் 'விதி' அவனை வாட்டுகின்றது. முயலுவது முடிவதில்லை. நேற்று சரியாகப் போட்ட கணக்கு இன்று தவறாகிவிடுகிறது. இதனால் பிரச்சனைகள் பல. அதனால் "தெய்வத்தை நம்புங்கள்: நிம்மதி கொள்ளுங்கள்!" அதற்கு முதலில் நமது தேவை இறைவனே!

தொகுப்பு: ஏ.அரசரத்தினம், மூதூர்.

## கவிதைப் போட்டி இல.245

### பரிசுக்குரிய கவிதை

**மலைகளில்**

சந்தேகம் ஏற்படுத்த
குறைந்தபட்ச தகுதி
'கராட்டி' பயின்றிருப்பது!!

எஸ். பிரபா- பதுளை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்.**



**வதைப்பொதி**

வதை கொடுக்கும் மனிதருக்கு
உதை கொடுக்கும் காலே!
உன் சூதியால் பொதிக்கும்
ஒரு உதை விட்டால் என்ன?

எம். சுதாகர்- தெஹிவளை.

**காலைத் தூக்கி...**

காளையே!
காலை நீ
கைது செய்யப்படப்போவது
அறியாமல்...
கராத்தே பயிற்சி
செய்கிறாயோ?

மேகவாணி-
வெள்ளவத்தை.

**கைதாகும்வரை...**

கராட்டியும் கலைதான்!
நீ
கைதாகி
காணாமல் போகும்வரை!!

இ. லலீந்திரன், செங்கலடி.

**எதிர்காலம்**

கல்லாயுதம் கணையாயுதம்
கற்காலம்!
ஷெல்லாயுதம் அணுவாயுதம்
இக்காலம்!
எதிரியில்லாக் களமொன்று
எக்காலம்?

கு. சுரேஸ்குமாரன்- தம்பிலுவில்-02.

**மறந்துவிடாதே!**

தற்பாதுகாப்பு பயிற்சி
பெற்றாலும்!
அடையாள அட்டையை
மறந்துவிடாதே!

செல்வி என். சாந்தி- நல்லூர்.

## கவிதைப் போட்டி இல.248



**கவனியுங்கள்!** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 21.03.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.248, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

**எட்டாக்கனி...!**

எம்பிக் குதித்தென்ன-
நின்று அடித்தென்ன-
எட்டாத சுதந்திரமும்
நிற்காத போருமே
நிகழ்கால நிதர்சனங்கள்!

டின்சின் டினேஷ்- பொகவந்தலாவ.

**ஒழியட்டும்...!**

கயமை நிறைந்த
தலைமைகளொழிய
உயரப் பாய்ந்து
உதைத்துத் தள்ளு!

அ. சந்தியாகோ-கண்டி.

**பு(ருஸ்)லி!**

கபடமற்ற கண்களுக்கு
புருஸ்லி!
இனவாதக் கண்களுக்கு
பு(ருஸ்)லி!

எம்.பிரகாஷ்- மூளாய், யாழ்.

**நியதி**

என்ன கட்டுடல்;
எவ்வளவு பலம்!
எப்படி என்றாலும்
எரித்தால் சாம்பல்தான்!

சுபா வரன்-கண்டி.

**தமிழரென்றால்...**

கைக் காப்புப் பூட்டியுன்னைக்,
கைது செய்து அடைத்துவைக்க
தற்காப்புக் கலைகற்ற
காரணமே குற்றமாகும்!
காப்பாற்ற உதவாது தம்பி- உன்
திறமையெல்லாம்!
வரய்ப்பூட்டு போட்டு உன்னுள்
மௌனித்து மரணமாகும்!

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன்குளம்.

## வாசக(ர்)சாலை



### காவடி எடுக்கிறார்கள்

ஆளும் கட்சிக்காக காவடி தூக்கித் திரியும் தமிழ்க் கட்சிகளுக்கு 'முரசு' இராஜதந்திரி சிறப்பாக குட்டியிருந்தார். தங்களுக்கு கிடைக்க இருப்பது என்னவென்று தெரியாமல், பிச்சைப் பாத்திரத்துடன் தவம் கிடக்கும் தமிழ்க் கட்சிகள் எதிர்க்கட்சிக்கு புத்தி சொல்ல நினைப்பது வேடிக்கை.

எஸ்.நல்லையா, கல்முனை.

### சந்திப்புக்களும் அறிவிப்புக்களும்

இனிய முரசே!

'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'அரசியல் அலசல்' மற்றும் புதியவரான 'நக்கீரன் தரும் சங்கதிகள்' அனைத்தும் முரசின் தராசுமுள் நேராக நிற்க உதவுகின்றன.

அமைச்சர்களைச் சந்திப்பதிலும், அந்தச் சந்திப்புக்களைப் பற்றி பத்திரிகைகளுக்கு தெரிவித்து புளகாங்கிப்பதிலும் நம்மவர்கள் பலே பேர் வழிகள். இவர்களுக்கு பெயர்கள் பிரபலமாகின்றன. அடுத்த தேர்தலுக்கு விருப்பு வாக்குப் பெறுவதற்கு இப்போதே கட்சிப் பெயர், தங்கள் ஆட்கள் பெயர்களை தமிழ்க் கட்சிகள் பிரசித்தம் செய்கின்றன. அந்த இரகசியம் தெரியாமல் நக்கீரன் வேதனைப் படவாமோ?

கே.ரவீந்திரன், மருதனாமடம்.

### சரியான தருணம்

சதாம் உசேனை சென்ற ஆண்டின் சிறந்த மனிதராகத் தெரிவு செய்த முரசுக்கு பாராட்டுக்களை மனதாரக் குவிக்கிறோம். 'முரசு' தன் தனித்துவத்தைக் காட்டிவிட்டது. உரிய தருணத்தில் சதாமை தட்டிக்கொடுத்து அமெரிக்காவை குத்திக் காட்டிய முரசுக்கு கோடி நன்றிகள்.

எச்.எம்.மஜீத், அம்பாறை.

### மௌனித்த தலைவர்கள்

சபாஷ் முரசே! ஈராக்கை ஆதரிக்கலாமா விடலாமா என்று இலங்கை அரசுகூட கடுமையாக யோசித்து, பின்னர் முஸ்லிம்களின் வாக்குகளை நினைத்து, அதற்காக மெல்லிய தொனியில் அமெரிக்காவை நோகாமல் கண்டித்தது. முஸ்லிம்களுக்கு தம் உயிர் மூச்சு இருப்பதாகக் கூறும் தலைவர்களும் அரசின் கோபத்தை கிளறுவானேன் என மௌனம் சாதித்தனர். தங்கள் சுயநலத்தை காண்பித்தனர். இவர்களது இன சமூக மத உணர்வின் இலட்சணம் அவ்வளவே. ஆனால், 'முரசு' சதாம் உசேனை கௌரவித்ததையும், அதன் ஆசிரியர் தலையங்கத்தையும் கண்ணுற்றபோது உண்மையாகவே என் நெஞ்சம் குளிர்ந்தது. 'முரசு' முரசுதான்!

எல்.என்.பாரூக், புத்தளம்.

### வீடுகொளுத்தும் சீமான்

முரசே!

ஆயுதமும் கொடுத்துவிட்டு, நிவாரண உதவியும் செய்யப்போவதாக அமெரிக்கா ஆடும் நாடகம் நாம் அறியாதது அல்ல. யாழ்ப்பாணத்திற்கு அபிவிருத்திக்காக உதவ அமெரிக்கப் பிரதிநிதி சென்று வந்தாராம். பத்திரிகைகளில் பார்த்தேன். கொள்கைகளை காற்றில் பறக்கவிட்ட கட்சிகள் அவரிடம் சென்று கூழைக் கும்பிடு போட்டனவாம். வீடு கொளுத்தும் சீமானிடம் போய் தீயை அணைக்க யோசனை கேட்குமளவுக்கு கெட்டுக் குட்டிச்சுவராகிப் போயினரே?! நிற்க: ஈராக் அதிபரை சென்ற ஆண்டின் சிறந்த மனிதராக பாராட்டி கௌரவித்தது சிறப்பு.

மு.மகாலிங்கம், யாழ்ப்பாணம்.

### சதாமுக்கே வெற்றி

அன்புள்ள முரசுக்கு:

நொண்டிச் சாட்டுகளைக் கூறிக் கொண்டு எப்படியாவது ஈராக்மீது ஒரு போர் நடத்தவே கிளின்ரன் துடித்தார். ஈராக் மக்களின் எழுச்சியும், எதற்கும் அஞ்சாத போக்கும், உலக நாடுகள் பலவற்றின் ஈராக் மீதான அனுதாபமுமே கிளின்ரனின் ஆசையை மண்ணாக்கியது. உலக மக்களின் அனுதாபம் முழுவதும் ஈராக் சார்பினதாகவே மாறத் தொடங்கியது. அந்த அனுதாப அலையில் நம் முரசின் அனுதாபமும், ஆதரவுக் குரலும் கலந்ததையிட்டு 'முரசு' வாசகர்களான நாம் பெருமைப்படுகிறோம். சதாமுக்கு ஆதரவான ஆசிரியர் தலையங்கமும் அருமை.

என்.பிரகாஷ், ஆ.குமரேசன், பி.எஸ்.ரவுப்கான், கொழும்பு-08.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

### முரசுக்கு மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* 'கிளியூரான்', யாழ்ப்பாணம்.
* எம்.எச்.நஸியா, மடவளை பஸார்.
* எம்.சற்குணராஜா, திருக்கோணமலை.
* நாகரத்தினம், வத்தளை.
* செ.ராஜயோகம், அப்புத்தளை.
* ஜெ.சச்சின் ஜூட் ரஞ்சன், மட்டக்களப்பு.
* ரஜனி வீரசிங்கம், திருக்கோணமலை.
* எஸ்.கோபிகிலன், பாண்டிருப்பு-01.
* அ.பஸீல், சாய்ந்தமருது-17.
* ஆ.முகுந்தன், வெள்ளவத்தை.
* சச்சிதானந்தன் அரவிந்த், புங்குடுதீவு.
* செல்வி மா.ஜெயந்தி, திருமலை.
* கோ.யோகராணி, இரத்தினபுரி.
* ரேவதி சிவானந்தம், அக்குறணை.
* எஸ்.சகாதேவன், கண்டி.
* உ.அல்ஹினா, மூதூர்.
* எஸ்.சந்திரமோகன், எல்ரோடோ.
* ஏ.செபஸ்தியன், உக்குவளை.
* எஸ்.மனோகரன், அப்புத்தளை.
* நா.இளையராஜா, முரசுமோட்டை.
* எஸ்.விஜயன், முல்லைத்தீவு.
* பா.தேவநாதன், துணுக்காய்.
* எஸ்.பத்மநாதன், அக்கரைப்பற்று-07.
* ஏ. றினோஸியா, திஹாரிய.
* எஸ்.எம்.நவ்சாத், அக்குறணை.
* வை.எம்.தாஹிர்ஸீம், கல்முனை-06.
* எஸ்.பீ.பாஷல், ஜஸ்பிறிஸ் வெளி.
* வி.வீரசிங்கம், கனடா.
* அபூபக்கர் இல்யாஸ், மட்டக்குளி.
* பீ.சிறீதரன், கினிகத்தேனை.
* எஸ்.சேகர், நமுனுகல.
* எம்.மகேஸ்வரன், ஜெர்மன்.
* தா.சிவப்பிரகாசம், அவுஸ்திரேலியா.
* பி.உதயன், சுவிற்ஸர்லாந்து.
* எல்.தினேஸ்வரன், டென்மார்க்.
* கே.ராசேந்திரம், நோர்வே.
* பி.வனஜா, சுவிற்ஸர்லாந்து.
* ஆர்.எஸ்.கண்ணன், கனடா.
* ஏ.சந்திரகுமாரன், சுவீடன்
* வி.ஜேம்ஸ், ஃபிரான்ஸ்
* ஆர்.மகேஸ் சந்திரன், நோட்டன் பிரிஜ்.
* த.தர்ஷிகா, செட்டிகுளம்.
* சி.வசந்தரூபன், யாழ்ப்பாணம்.
* மா.அருட்செல்வன், அமெரிக்கா.



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நெருக்கடி

# புலிகளின் தாக்குதல்கள் பரவலாகும்!

(அலுவலக நிருபர்)

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக வவுனியா-யாழ் தரைப்பாதையை திறக்கப் போவதாக புதிய காலக்கெடுவை அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதே வேளை புலிகளும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக பரவலான தாக்குதல்களுக்கு திட்டமிட்டுவருவதாக அறியப்படுகிறது.

வவுனியா, மட்டக்களப்பு, யாழ்குடாநாடு ஆகிய பகுதிகளில் புலிகளின் அணிகள் ஏற்கனவே ஊடுருவியுள்ளன.

யாழ் குடாநாட்டில் 07.03.98 அன்று மூன்று இடங்களில் மோதல்கள் நடைபெற்றன. யாழ் குடாநாட்டில் படையினருக்கு ஏற்படும் சேத விபரங்களை அங்குள்ள படைத்தலைமையினர் வெளியிடுவதில்லை.

கச்சாய், குடத்தனை மற்றும் குருநகர் ஆகிய பகுதிகளிலேயே படையினருக்கும் புலிகளுக்கும் இடையே மோதல்கள் நடைபெற்றுள்ளன.

யாழ் குடாநாட்டில் படை அணிகளை குறைத்து, வன்னிக் களத்துக்கு நகர்த்த படைத் தலைமை முயற்சிக்குமானால், அதனை பயன்படுத்தி யாழ் குடாநாட்டில் பாரிய தாக்குதல்களை நடத்த புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

யாழ் நகர் பகுதியிலும் புலிகள் இயக்க உறுப்பினர்களது நடமாட்டங்கள் இருப்பதாக சில தகவல்கள் கூறுகின்றன.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகள் இயக்கத்தினர் வெடிகுண்டுத் தாக்குதல்களுக்கான பாரிய பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்றும், இருநூறுபேர்வரையான புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு வெடிகுண்டுகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு-கிழக்குக்கு வெளியே படையணிகளை மேலும் குவித்து முடக்கி வைக்கக்கூடிய விதமான தாக்குதல்களை புலிகள் முடுக்கி விடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**வன்னி நிலவரம்**

வவுனியா-யாழ் சாலையில் மாங்குளம் பகுதி புலிகளின் கேந்திர முக்கியத்துவமிக்க நகர் என்று சில செய்திகளில் தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளத்தை பிடித்தால், அங்கிருந்து முல்லைத்தீவுக்கான புலிகளது போக்குவரத்து தடைப்படும் என்று கூறப்படுகிறது.

ஆனால், உண்மை நிலவரம் அதற்கு மாறாக உள்ளது. ஒருவேளை மாங்குளத்தை படையினர் கைப்பற்றினால்கூட புலிகளின் போக்குவரத்து பாதிக்கப்படமாட்டாது.

மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கு செல்லும் சாலை மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியாகும். கடந்த ஐந்து மாதத்திற்கு முன்னர் அந்த வீதியில் உள்ள கரிப்பட்ட முறிப்பில் படையினர் நிலைகொண்டனர். அதனால் அந்த வீதியை பாவிப்பதை புலிகள் கைவிட்டு, மாங்குளத்திற்கு மேலே உள்ள பாதைகள் வழியாகவே தங்கள் போக்குவரத்தை நடத்தி வருகின்றனர்.

எனவே மாங்குளம் கேந்திர முக்கியத்துமிக்க நகராக இப்போது விளங்கவில்லை. எனினும் மாங்குளம் சண்டையை பெரிதாகக் காட்டவும், அப்பகுதியை கைப்பற்ற முடியாமல் இருப்பதனாலும் கேந்திர முக்கியத்துவம் மிக்க நகர் என்று படைத்தரப்பினர் கூறிவருகின்றனர்.

வவுனியா-யாழ் சாலையில் புளியங்குளம் கேந்திரநகர் என்று முன்னர் படையினர் கூறிவந்தனர். அங்கு பலமாதமாக சண்டை தொடர்ந்து நடந்தமையால் அவ்வாறு கூறப்பட்டு வந்தது.

கிளிநொச்சிக்கு அருகில் இருக்கும் நகர் என்பதுதான் மாங்குளத்திற்கு உள்ள முக்கியத்துவமாகும்.

**மதியாமடுவில்**

இதேவேளை மாங்குளம் வரை தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் படைத்தரப்பு செய்திகள் கூறிவருகின்றன. ஆனால் புளியங்குளத்திற்கு வடகிழக்கே நயினாமடுவுக்கு அருகே அமைந்துள்ள மதியாமடுப் பகுதியில் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலால் ஒன்பது படையினர் பலியாகியுள்ளனர். 6.03.98ல் இத் தாக்குதல் நடைபெற்றது.

மதியாமடு படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியாகும். எனினும் அங்குலம் அங்குலமாக நிலைகொள்ள படைத் தொகை போதாது. அதனால் புலிகளும் அப்பகுதிகளில் நடமாடுகின்றனர்.

இதேவேளை கிளிநொச்சி நகர் பகுதியில் அடிக்கடி சிறு சிறு மோதல்கள் நடந்து வருகின்றன. கிளிநொச்சி நகரில் தமது முன்னைய நிலைகளை இதுவரை படையினரால் சென்றடைய முடியவில்லை.

சித்திரைப் புத்தாண்டின் முன்பாக தரைப்பாதை திறப்பது பற்றிய காலக்கெடு நிறைவேறக்கூடிய கள நிலவரம் காணப்படவில்லை என்றே நமது நிருபர் வன்னியில் இருந்து தகவல் தந்துள்ளார். ■

## முதன் முதலாகக் குண்டு வெடிப்பு!

## வெடிக்க வைத்தவர் மாயம்

(மட்டக்களப்பு நிருபர்)

வரலாற்றில் முதன் முறையாக ஏறாவூர் நகரத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் தமிழ்-சிங்கள-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த ஆறு பேர் பலியானதுடன் மேலும் 11 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் பெப்ரவரி 09ம் திகதி மாலை 3.55 மணிக்கு இடம்பெற்றது. பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகே கராஜ் ஒன்றில் இவ்வுழவு இயந்திர இழுவைப் பெட்டி ஏதோ திருத்த வேலைக்காக நிறுத்தப்பட்டது. அந்த இழுவைப் பெட்டியில் பொருத்தப்பட்டிருந்த குண்டு தூரத்தில் இருந்து இயக்கும் கருவி மூலம் வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது. உழவு இயந்திர இழுவைப் பெட்டியை இழுத்து வந்து அவ்விடத்தில் திருத்த வேலைக்காகக் கழற்றி விட்டுச் சென்றவர் ஒரு பொதுமகன் என்றும் ஆனால் அவர் புலி இயக்கத்தினரின் வற்புறுத்தலினாலேயே அவ்வாறு செய்தார் என்றும் கூறப்படுகிறது.

உழவு இயந்திர இழுவைப் பெட்டியின் சரியான இலக்கம் 44-5590 ஆக உள்ள போதும் அந்த இலக்கம் 44-5690 என்று கச்சிதமாக மாற்றப்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது.

வழக்கமாகப் படையினரை ஏற்றிச் செல்லும் இராணுவ வாகன அணித் தொடரைக் குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. எனினும் குறித்த குண்டு பொருத்தப்பட்டிருந்த உழவு இயந்திரப் பெட்டிக்கு முன்னால் நெல் மூட்டைகளை ஏற்றிய மற்றொரு உழவு இயந்திரம் நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் அவ்வழியால் செல்ல வேண்டிய இராணுவ வாகனத் தொடர் அணி மற்றப் பக்கமாகச் சென்றதனால் இராணுவ அணி தப்பிவிட்டதுடன் பெரும் உயிரிழப்பும் தவிர்க்கப்பட்டது. முன்னால் நிறுத்தப்பட்டிருந்த உழவு இயந்திரத்தின் சாரதி தன்னைப் பலி கொடுத்து படையினருக்கு ஏற்படவிருந்த பெரும் உயிரிழப்பைக் காப்பாற்றியிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

இதனிடையே எந்நேரமும் பொலிஸாரும், படையினரும் உலாவும் அவ்விடத்தில் அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு குண்டைத் தூரத்திலிருந்து இயக்கும் கருவி மூலம் வெடிக்கச் செய்தவர் மாயமாய் மறைந்து விட்டார்.

மணிக்கூட்டுக்கோபுரத்தின் அருகே இராணுவ தொடரணி வேகம் குறைந்தே திரும்பிச் செல்லமுடியும். அவ்வாறு திரும்பும் போதே குண்டை வெடிக்க திட்டமிட்டனர். வெடிக்க வைக்கும் கருவியை அழுத்தியவர் பதற்றம் அடைந்துள்ளார். அதனால்தான் துல்லியமாக கவனிக்காமல் அழுத்திவிட்டார்.

## சோடிக்கப்பட்ட தாக்குதல்

## அதிகாரியின் பதவி உயர்வு ஆசை?

"மருதானைக் குண்டு வெடிப்பு தொடர்பாக தேடப்படும் புலேந்திரனின் மனைவி உட்பட சிலரை ஏறாவூர் பொலிசார் கைது செய்தனர். அதன்பின்னர் அவர்களை விடுவிக்க ஏறாவூர் பொலிஸ் நிலையம்மீது புலிகள் தாக்குதல் நடத்த முற்பட்டனர். முன்னணிக் காவலரணைத் தாக்கினர். ஆனால் பொலிசார் தாக்குதை முறியடித்து கைதானவர்கள் மீட்கப்படாமல் பார்த்துக் கொண்டனர்."

மேற்கண்டவாறு ஒரு செய்தி வெளியாகியிருந்தது. பி.பி.சி.வானொலிக்கும் மேற்கண்ட செய்தி கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால், அப்படியொரு தாக்குதல் முயற்சியே நடைபெறவில்லை. காவலரண் தாக்கப்படவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

காவலரண் பகுதியில் கடமையில் உள்ளவர்கள் சில சமயங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்வது வழக்கமாகும். அவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்த சத்தங்களே 06.03.98 வெள்ளியன்றும் கேட்டன. அதனை புலிகளது தாக்குதல் முயற்சியாக பொலிஸ் அதிகாரி ஒருவர் செய்தி கொடுத்தாராம். பதவி உயர்வு கருதியே அவ்வாறான செய்தி கொடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

## 'ஈழத் தமிழருக்கு சுயாட்சி'

## பாரதிய ஜனதா குரல் கொடுக்கும்

"பாரதிய ஜனதா கட்சி இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களின் சுயாட்சியை பாதுகாக்க வலியுறுத்தும். இலங்கை அரசு இராணுவ தீர்வைக் கைவிடுமாறும் வலியுறுத்தும்" இவ்வாறு பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளர் கோவிந்தாச்சாரியா தெரிவித்துள்ளார்.

'பாரிஸ் ஈழநாடு' பத்திரிகை அவரது பேட்டியை வெளியிட்டிருந்தது. அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "ஈழத் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு நாம் ஆதரவாக இருப்போம். பாரதிய ஜனதா அரசு இலங்கை தொடர்பான கொள்கைகளில் மாற்றம் செய்யும்.

தமிழ்ப் பிரதேச சுயாட்சி பாதுகாக்கப்பட வேண்டும். வாழும் உரிமை சுதந்திரம் என்பன பேணப்படவேண்டும். அதற்கான இராஜதந்திர அழுத்தத்தை இந்தியா பிரயோகிக்க வேண்டும் என்பதே பாரதிய ஜனதாவின் கொள்கையாகும்' என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா அரசுடன் நட்புறவுகளை ஏற்படுத்த விடுதலைப் புலிகளும் முயற்சி செய்வர் என்று தெரிகிறது.

இந்தியப் பிரதமராக வாஜ்பேஜி பதவியேற்ற பின்னர் புலிகளின் தலைவர் வாழ்த்துச் செய்தி அனுப்பக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைப் பிரச்சனையில் தனது நிலைப்பாட்டை புதிய அரசு உடனடியாக கூறாவிட்டாலும்கூட, குஜ்ரால் அரசு போலன்றி, இலங்கையில் அமெரிக்கத் தலையீடுகளை பாரதிய ஜனதா அரசு விரும்பாது என்றே நம்பப்படுகிறது.

வடக்கு-கிழக்கு பிரிப்பு இல்லாத தீர்வு என்ற விடயத்திற்கு பாரதிய ஜனதா கட்சியின் ஆதரவு உண்டென்றும் கூறப்படுகிறது. ■

## மெய்ப்பாதுகாவலர் கொலை

தபால் தொலைத் தொடர்புகள் தகவல் துறைப்பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாவின் மெய்ப் பாதுகாவலரான ஹாஜா முஹைதீன் நௌஃபீர் (24) பெப்ரவரி 2ம் திகதி இரவு 9.30 மணியளவில் வாழைச்சேனையில் வைத்துப் புலிகள் இயக்கத்தினரின் நடமாடும் அணியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். தாக்குதலை முடித்துவிட்டுத் திரும்பிய புலிகள் இயக்கத்தினர் அவ்விடங்களில் பொதுமக்களுக்குச் சொந்தமான மூன்று மோட்டார் சைக்கிள்களையும், ஏழு சைக்கிள்களையும் பறித்துச் சென்றதாகப் பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். ■

## படையினர் அனுமதி—புலிகள் தடைவிதிப்பு

மட்டக்களப்பு, வாழைச்சேனைச் சந்தியிலிருந்து வாழைச்சேனை நகருக்குச் செல்லும் உள்வீதியைப் பாதுகாப்புப் படையினர் கடந்த ஒருவருடத்திற்கு மேலாகப் பொதுப்போக்குவரத்திற்குத் தடைப்படுத்தி வைத்திருந்தனர். அதனால் போக்குவரத்தில் பொதுமக்கள் எதிர்கொண்ட சொல்லொண்ணாத் துயரங்கள் காரணமாக பல தரப்பிலிருந்தும் எழுந்த கோரிக்கைகளினால் பாதுகாப்புத் தரப்பினர் மார்ச் மாத ஆரம்பத்தில் அவ்வீதியைப் பொதுமக்களின் போக்குவரத்திற்காக ஒருவாறு திறந்து விட்டனர். பொதுமக்கள் பெரு நிம்மதியடைந்தனர்.

அவ்வீதி திறக்கப்பட்டு பஸ்களும் மற்றும் வாகனங்களும் போக்குவரத்தில் ஈடுபட்டன. ஆனால் அவ்வீதியில் பொதுப்போக்குவரத்தை மேற்கொள்ள வேண்டாம் என்று புலிகள் இயக்கத்தினர் சம்பந்தப்பட்ட சகல தரப்பினருக்கும் அறிவித்து போக்குவரத்தைத் தடைசெய்துள்ளனர்.

அவ்வீதியில் தொடர்ந்து வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுமானால் தாம் நடமாடும் இடங்களில் பாதுகாப்புப் படையினர் பொதுமக்களின் வாகனங்களில் மறைந்து வந்து தம்மீது திடீர் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று கருதியே புலிகள் இயக்கத்தினர் அவ்வீதியைப் போக்குவரத்திற்கு தடை செய்திருப்பதாகப் பொதுமக்கள் கூறுகிறார்கள்.

புது வீதியொன்றை அமைக்க புலிகள் ஆலோசனை கூறியுள்ளனர்.

## மூதூர் தாக்குதல்

திருமலையில் 09.03.98 அன்று மூதூர் பச்சனூர் பொலிஸ் காவல் நிலைம்தான தாக்குதலில் நான்கு பொலிசார் பலியாகினர். எண்மர் காயமடைந்தனர். ஏனைய பொலிசார் பின்வாங்கிச் சென்றனர்.

தமது தரப்பில் எவ்வித இழப்புமில்லை என்று தெரிவித்துள்ள புலிகள், 60 எம்.எம்.மோட்டார் 01, ரி. 56 ரக துப்பாக்கிகள் 06, கைத்துப்பாக்கி 01, மோட்டார் ஷெல்கள் மற்றும் ரவைகள், ஜெனரேட்டர், தொலைக்காட்சிப் பெட்டி, தண்ணீர்க் குடுவைகள், தொலைத் தொடர்பு சாதனம்-01 ஆகியவற்றை கைப்பற்றியதாகத் தெரிவித்துள்ளனர்.

பத்து நிமிட நேரத் தாக்குதலின் பின்னர் காவல்நிலை தம்மிடம் வீழ்ச்சி அடைந்தது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர். ■

## மாகாண சபைத் தேர்தலுக்கு தயார்

## கண்டியில் நடந்த பிரசாரம்

(கண்டி நிருபர்)

அண்மையில் எதிர்பார்க்கப்படும் மாகாண சபைத் தேர்தலையொட்டி சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் கண்டி போகம்பறை மைதானத்தில் பிரசாரக் கூட்டத்தை நடத்தியது. இதன் மூலம் மலையகத்தில் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளது. ஜனாதிபதி திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அவரது அமைச்சரவையில் உள்ள எ.எச்.எம்.பௌஸி, அலவி மௌலானா உட்பட பத்துப் பேர் கலந்து கொண்டனர்.

அங்கு ஜனாதிபதி உரை நிகழ்த்துகையில் கடந்த 17 ஆண்டுகளாக இந்நாட்டை சீரழித்த ஐ.தே.கட்சியினர் ஆட்சியில் இடம்பெற்ற கொடூர சம்பவங்களை அவர் நீண்ட நேரம் விவரித்தார்.

மாலை 6.30 மணிக்கு பொது மேடைக்கு சிறிய வேன் ஒன்றின் மூலம் பிரவேசித்த ஜனாதிபதியை கால்கடுக்க நின்று கொண்டிருந்த கூட்டம் கைதட்டி வரவேற்றது. கண்டி நகரில் இதன் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

தெற்கும் வடமேல் மாகாண சபைகள் தவிர்ந்த ஏனைய 5 மாகாண சபைகளை அடுத்து இடம்பெறப்போகும் மாகாண சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வென்றெடுப்பது திண்ணம் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே மக்கள் மத்தியில் எடுத்துரைத்தார்.

இதன் அடிப்படையில் இந்த மாகாண சபைகள் எல்லாம் ஜூன் மாதம் 30ம் திகதி அளவில் கலைக்கப்பட்டுவிடும் என்ற செய்தியையும் அவர் அங்கு வெளியிட்டார்.

ஜனாதிபதி அங்கு தொடர்ந்தும் பேசுகையில் வடக்கில் 90% நிலப்பரப்பு புலிகளின் பிடியில் இருந்து மீட்கப்பட்டிருப்பதுடன் இவ்வருட முடிவுக்குள் யுத்தம் முடிவடைந்துவிடும் எனவும் சிறுபான்மை மக்கள் இந்நாட்டில் நம்பிக்கையுடன் வாழ்வதற்கான வழிவகைகளை பேணப்போவதாகவும் அவர் மேலும் கூறினார்.

மாலை 6.30 மணிக்கு தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி சுமார் இரண்டு மணி நேரம் பேசி நிறுத்திக் கொண்டார்.

# புலேந்திரனுக்கு வலை விரிப்பு!

## நான்கு வயது மகனுடன் தலைமறைவு

(நமது நிருபர்)

மருதானைக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கிழக்கு மட்டக்களப்பிலும் ஏறாவூரிலும் பலர் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். இதில் வாகனச் சொந்தக்காரரான ந.புலேந்திரன் என்பவரின் மனைவி சுபத்திராதேவி (28) பஸ் உதவியாளரான தங்கத்துரை சிறி புஸ்பகாந்தன் ஆகியோரும் மட்டக்களப்பைச் சேர்ந்த ஏ.ஆறுமுகம், கராஜ் உரிமையாளர்களும் பணியாளர்களுமான தங்கதாஸ், மகேந்திரராஜா (42), நாகமணி உதயகுமார் (32), சபாரெட்ணம், சந்திரன் (22), ராசரெட்ணம் றோஸ்மன் (16), ஆகியோரும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

குண்டு பொருத்தப்பட்டு வெடித்துச் சிதறிய இல 62-4864 கொண்ட மினி பஸ்ஸின் உரிமையாளர் ந.புலேந்திரன் (வயது30) அடையாள அட்டை இல 680102341 V கொண்ட அவர் மேலும் ஒரு அடையாள அட்டையை வைத்திருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

வெடித்துச் சிதறிய அந்த பஸ்ஸின் முன்னைய உரிமையாளரான நம்ழான் நஸீர் என்பவரும் குண்டு வெடித்துச் சில மணிநேரத்தின் பின்னர் ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். பின்னர் முறைப்படி வாகனம் விற்றதற்கான உரிமை மாறும் ஆவணங்களை அவர் வைத்திருந்ததால் ஏறாவூர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும் தினந்தோறும் பொலிஸ் நிலையம் சென்று அவர் கையொப்பமிட வேண்டும்.

ஏறாவூரைச் சேர்ந்த திருமதி. றஹூமானியா என்பவர் ஃபினான்ஸ் மூலம் கொள்வனவு செய்திருந்த இந்த பஸ்ஸை நஸீர் என்பவருக்கு விற்றிருந்தார். பஸ்ஸை வாங்கிய நஸீர் ஏறாவூரிலிருந்து கதுறுவெலைக்கும் மட்டக்களப்புக்கும் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டார். இவரால் ஃபினான்ஸ் கட்டமுடியாது போகவே குறித்த புலேந்திரனுக்கு கடந்த ஜனவரி 15ம் திகதி விற்றுவிட்டு புலேந்திரனிடமிருந்து லொறியை வாங்கியுள்ளார்.

வாகனக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான ஒப்பந்தக் கடிதம் சென்ற 01.02.98 அன்று எழுதப்பட்டிருந்தது. அதன்படி 40 நாள் தவணையில் புலேந்திரன் பஸ் கொள்வனவு செய்தமைக்காக நஸீருக்குச் செலுத்த வேண்டிய மீதித் தொகையான ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாவையும் 10.03.98ல் செலுத்தி முடிக்க வேண்டுமென்றிருந்தது.

**கில்லாடி**

பொலிஸாரைக் கைக்குள் போட்டுக் கொள்ளும் கில்லாடியான புலேந்திரன் பொலிஸாரின் விருந்துபசாரங்களிலும் கலந்து கொண்டுள்ளாராம். பொலிஸாருடனும் பாதுகாப்புத் தரப்பினருடனும் நெருக்கமாக பழகுவதற்கு இவருக்கு இன்னொரு வாய்ப்பும் இருந்திருக்கிறது.

புலேந்திரனின் சகோதரியொருவர் கொழும்பில் பொலிஸ் பரிசோதகராக உள்ள அதே வேளையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அவரது கணவரும் பொலிஸ் இன்ஸ்பெக்டராக உள்ளாராம். இப்பொழுது அவர்களும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புலேந்திரன் கொழும்பிற்குச் செல்லும் போதெல்லாம் அவரது சகோதரியின் வீட்டிலேயே தங்கி நிற்பதுதுண்டாம். புலேந்திரன் அக்கரைப்பற்று-பனங்காட்டைச் சேர்ந்தவர். தொழில் வாய்ப்புப் பெற்று சவுதி அரேபியா சென்று திரும்பிய புலேந்திரன் அப்பொழுதிருந்தே புலிகள் இயக்கத்தினரின் ஆதரவாளராக இருந்து வந்துள்ளார்.

மார்ச் 02ம் திகதி கராஜிலிருந்து புறப்பட்ட பஸ் காத்தான்குடியிலிருந்து நிறைந்த பயணிகளுடன் ஸ்பெசல் (SPECIAL) என்ற முகப்பு அறிவித்தலுடன் கொழும்புக்குச் சென்றுள்ளது. பஸ்ஸை புலேந்திரனே ஓட்டிச் சென்றிருக்கிறார். செல்லும்போது, தற்போது கைது செய்யப்பட்டிருக்கும் பஸ் உதவியாளரான சிறி புஸ்பகாந்தனும் கூடவே கொழும்பு வரை சென்றிருக்கிறார்.

கொழும்புக்குச் சென்றதும், பஸ்ஸில் மேலும் சில திருத்த வேலைகள் இருப்பதால் கராஜில் நிறுத்த வேண்டியிருப்பதாகவும் பஸ் உதவியாளரான புஸ்பகாந்தனிடம் கூறிய புலேந்திரன் அவரை மட்டக்களப்பு செல்லுமாறும் கேட்டிருக்கிறார். அதன்படி புஸ்பகாந்தன் செங்கலடிக்கு வந்து சேர்ந்து விட்டார்.

**இருவர் வந்தனர்**

இதன்பின்னர் 04ம் திகதி ஒழுங்கு முறைப்படி (TURN) மட்டக்களப்புக்கு வரவேண்டிய புலேந்திரனின் பஸ் கொழும்பில் பயணிகளை ஏற்றுமிடத்தில் தரித்து நின்றிருக்கிறது. அப்பொழுது தனக்கு மட்டக்களப்பு கொழும்பு போக்குவரத்திற்கு விருப்பமில்லையென்றும் திருக்கோணமலைக்கு சேவை நடத்தப் போவதாகவும் கூறியுள்ளார். அப்படிக் கூறிவிட்டுத் தான் வழக்கமாகத் தங்குமிடமான கொள்ளுப்பிட்டிக்குச் சென்றவர் மறுநாள் அதிகாலை 5.30 மணிக்கு வழக்கமாக பஸ் நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு ஓட்டோவில் மேலும் இருவருடன் வந்திறங்கியுள்ளார்.

ஓட்டோவில் வந்த அந்த இருவரும் பஸ்ஸில் உடனடியாக உள்ளே ஏறிக் கொண்டனர். பஸ்ஸுக்குள் ஏறிய அந்த இருவரும் பஸ்ஸை உடனடியாக எடுத்துச் சென்றுள்ளனர். பஸ் புறப்பட்டு ஒரு சில நிமிடங்களில் அங்கே காணப்பட்ட புலேந்திரன் திடீரென மாயமாக மறைந்துவிட்டாராம்.

அங்கிருந்து தப்பி வந்த புலேந்திரன் தற்சமயம் கிழக்கில் புலி இயக்கத்தினரின் வசமுள்ள பகுதிக்கு வந்துவிட்டதாக ஊர்ஜிதமற்ற தகவலொன்று கூறுகிறது. ஆனால் புலேந்திரன் கொழும்பிலேயே மறைந்திருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் நம்புகின்றனர்.

பாதுகாப்புக் கெடுபிடிகளிலிருந்து தப்புவதற்காகவே தனது 4 வயது நிரம்பிய பிள்ளையை அவர் கூட்டிச் சென்றார் என்றும் கூறப்படுகிறது.

**விபரம் தெரியுமா?**

மட்டக்களப்பு பொலன்னறுவை மாவட்டத்திற்கிடையிலுள்ள கடைசிச் சோதனைச் சாவடியான மாதுறு ஓயாச் சந்தியில் லொறிகளை மாத்திரம் 48 மணி நேரத்திற்குத் தடுத்து வைக்கும் பாதுகாப்பு நடைமுறை உள்ளது.

ஆனால் பயணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு இந்தத் தடை கிடையாது. பஸ்களை உடனடியாக சோதனை முடித்துப் பயணத்தைத் தொடரப் படையினர் அனுமதிக்கின்றனர். குறிப்பிட்ட பஸ்ஸும் மாதுறு ஓயாச் சந்தியில் கடைசியாகச் சோதனை முடித்துச் சென்றிருக்கிறது.

எனினும் புலேந்திரனுக்கு புலிகளின் இலக்குகள் மற்றும் தலைநகரில் உள்ள மறைவிடங்கள் பற்றி தெரிந்திருக்காது என்றே கருதப்படுகிறது.

குண்டுத் தாக்குதல் எப்போது நடைபெறப் போகிறது என்ற விபரத்தைக்கூட அவர் அறிந்திருக்கவில்லை. அறிந்திருந்தால் மனைவி பிள்ளைகளை முன்கூட்டியே வேறு பகுதிக்கு செல்லுமாறு கூறியிருப்பார். இரகசியம் கருதியே புலிகள் மேலதிகத் தகவல்களை அவருக்கு கூறாமல் இருந்துள்ளதாகத் தெரிகிறது. ■

## யாழில் சிங்களத்தில் பதிவுகள்

## எம்.பிக்கள் கவனிப்பார்களா?

யாழ்ப்பாணத்தில் தற்போது பொலிஸ் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு பொது மக்கள் செய்யும் முறைப்பாடுகள் சிங்களத்திலேயே பதிவு செய்யப்படுகின்றன.

முழுக்க முழுக்க தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசமான யாழ்ப்பாணத்தில் தமிழ் தெரியாத பொலிசார் கடமையில் உள்ளனர். முறைப்பாடுகளையும் சிங்களத்தில் பதிவு செய்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக யாழ் மாவட்ட பா.உக்களோ, தமிழ்க் கட்சிகளோ கவனம் செலுத்தாமல் இருப்பது மக்களிடம் அதிருப்தியை தோற்றுவித்துள்ளது.

படையினரால் விடுவிக்கப்பட்ட பகுதிகள் என்று கூறப்படும் பகுதிகளின் பெயர்கள் மட்டுமல்லாமல், சிவில் நிர்வாக நடவடிக்கைகளும் சிங்கள மயமாகிவிடுமோ என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். ■



படிப்பகம்

www.padippakam.com

# புதிய பணிப்பாளர் நாயகம்
## எரிக் பெர்னாண்டோ நியமனம்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகமாக எரிக் பெர்னாண்டோ என்ற தமிழர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நாட்டின் ஒலிபரப்புத் துறைக்கு ஒரு தமிழர் தலைவராக நியமிக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

'கொழும்பு வானொலி' என்றிருந்த போது பணிப்பாளராக இருந்தவர் ஒரு வெள்ளைக்காரர். அவருக்கு அடுத்தபடியாக இருந்தவர் திரு.சோ.சிவபாதசுந்தரம். வெள்ளைக்காரர் பதவி விலகிச் சென்றதும் திரு.சிவபாதசுந்தரத்துக்குக் கீழ்ப்படியிலிருந்த ஒரு சிங்களவருக்கே தலைமைப் பதவி வழங்கப்பட்டது.

திரு.சிவபாதசுந்தரம் திருச்சி வானொலியிலும் இலண்டன் பி.பி.சி. யிலும் பயிற்சி பெற்றவர். 'பி.பி.சி. தமிழோசை' நிகழ்ச்சியையும் தொடக்கி வைத்தவரும் அவரே. 'ஒலிபரப்புக்கலை' என்று ஒரு நூலை எழுதியமைக்காக இந்திய சாகித்திய மண்டலப் பரிசும் பெற்றவர். ஒலிபரப்புத் துறையில் தனக்குரிய பதவி கொடுக்கப்படாமல் பாரபட்சம் காட்டப்பட்டதால் வெறுப்புற்று தமிழ் நாடு சென்று பிரபல எழுத்தாளரானார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவராகவும் பல்லாண்டு காலம் தொண்டாற்றியவர்.

திரு.எரிக் பெர்னாண்டோ கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக ஒலிபரப்புத் துறையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். வானொலியிலும் ரூபவாஹினியிலும் ஆங்கிலச் செய்தி வாசிப்பாளராகத் திகழ்ந்தவர். அனுபவம் நிறைந்தவர் என்பதனால் ஒலிபரப்புக்கூட்டுத்தாபன நிகழ்ச்சிகளின் தரம் உயர்வடையும் என்பதுடன் தமிழ் நிகழ்ச்சிகளும் தனிச் சிறப்புப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் நிகழ்ச்சிகளுக்கான இயக்குநர் பதவி திரு.வி.என்.மதியழகனுக்கே தரப்பட்டிருக்கிறது. இவர் தற்காலிக இயக்குநர் பதவி வகுத்தபோது, அதற்கு அவர் தகுதியற்றவர் என்று உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதுமுண்டு. ஆறு மாதங்களுக்குள் தகுதியான ஒருவரை முறைப்படி தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம், கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபைக்கு அறிவுறுத்தியது. அதன்படி நடைபெற்ற தேர்வில் தமிழ்ச் சேவை இயக்குநர் பதவிக்கு திரு.மதியழகனே தகுதியுடையவர் என்று காணப்பட்டமையால், அவருக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

# அதே முத்திரைகள்

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மீண்டும் 250 ரூபாய் சமுர்த்தி முத்திரைகளே விநியோகத்திற்காகக் கிடைத்துள்ளன. இம் முத்திரைகள் பெப்ரவரி மாதம் முதல் ஜூலை வரையும் விநியோகிப்பதற்காகும். கடந்த ஆகஸ்ட் முதல் ஜனவரி வரை விநியோகிப்பதற்கும் 250 ரூபாய் முத்திரைகளே கிடைத்திருந்தன.

சமுர்த்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை மட்டக்களப்பு மாவட்டம் 1000, 500 ரூபாய் முத்திரைகளைக் காணவில்லை.

கொழும்பு, கம்பஹா போன்ற அபிவிருத்தியடைந்த மாவட்டங்களில் மேற்படி தொகை முத்திரைகள் விநியோகிக்கப்படுகின்ற போதிலும் வன்செயல்களால் பெரிதும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தொடர்ந்தும் 250 ரூபாய் முத்திரைகளே விநியோகிக்கப்பட்டு வருவது குறித்து பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஐ.நா.செயலாளருக்கு மகஜர்
## மணலாற்று மக்கள் முறையீடு

முல்லை மாவட்ட மணலாறு பகுதியில் முன்னாள் வசித்து வந்து, இப்பொழுது இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்து வாழும் மக்கள் சார்பாக ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்திற்கு மகஜர் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"நாங்கள் தற்போது, சற்றும் பொருந்தாத காலநிலையில் அர்த்தமுள்ள எத்தகைய பாதுகாப்புமற்றவர்களாக வாழ்ந்து வருகிறோம். அரசாங்கம் மூலமோ அல்லது அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ போதுமான உணவுவகைகள் எமக்குக் கிடைப்பதில்லை.

சிறிலங்கா அரசாங்கம், மருந்துப்பொருட்களுக்கு விதித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக எமக்கு எதுவித மருத்துவ வசதிகளும் கிடைப்பதில்லை. தமிழ் பிரதேசங்களுக்கு பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளமையினால், உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பண்டங்கள் எதுவும் அனுப்பப்படுவதில்லை.

எங்களுடைய துன்ப நிலை மிகமோசமாகியுள்ளமையினால் நாங்கள் பேரழிவையே எதிர்நோக்கியுள்ளோம்.

1997 டிசம்பர்- மனித உரிமைகளுக்கான சர்வதேசப் பிரகடனத்தின் 50வது ஆண்டின் ஆரம்பமாகும். சுதந்திரமான மக்கள் சிவில்,அரசியல் சுதந்திரம் பெற்று, அச்சம் நீங்கி தமது தேவைகளைப் பெறுவதற்கான உரிமைகளையும் ஏனைய அம்சங்களுடன் பெறுவதற்கு அப்பிரகடனம் வலியுறுத்துகின்றது.

எங்களுடைய தேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையையாவது பெற்றுத் தருமாறு தங்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம்.

பரிதாபத்துக்குரிய எமது வரலாற்றின் சுருக்கத்தை தங்களுக்கு எடுத்துக் கூறுகிறோம். தமிழர்களின் தாயகமான வடக்கு-கிழக்கில் வடக்கை கிழக்குடன் இணைக்கும் பூகோள ரீதியான இடம்தான் மணலாறு. ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி இந்தப் பிரதேசத்தில் முன்னர் வாழ்ந்தவர்கள் நாங்கள்.

'தமிழர்களின் தாயகம்' என்ற கோட்பாட்டை முறியடிக்கும் நோக்குடன் சிறிங்கா அரசாங்கம் மணலாற்றுப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த 42 தமிழ்க் கிராமங்களில் வாழ்ந்த மொத்தம் 13 ஆயிரத்து 208 குடும்பங்களை பலாத்காரமாக வெளியேற்றிவிட்டது.

கருணையற்ற இத்தகைய கொள்கையை 1984ம் ஆண்டு முதல் இராணுவத்தின் உதவியுடன் நிறைவேற்றியுள்ளனர். மணலாற்றின் அருகேயுள்ள நெடுங்கேணி மாவட்டத்திலுள்ள 18 கிராமங்களில் வாழ்ந்த மக்களையும் ஆயுதப் படையினரின் துணையுடன் வெளியேற்றி விட்டனர்." என்று மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊர்காவலர்கள் மீதும், ரெலோ மீதும் குறி

பெப்ரவரி மாத இறுதியில் கிழக்கின் எல்லைப் பகுதிகளிலுள்ள ஊர்காவற் படையினர்மீதும், படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ் இயக்கங்கள் மீதும் புலிகள் இயக்கத்தினர் பல தாக்குதல்களை நடத்திப் பலரைக் கொன்றுள்ளார்கள்.

பெப்ரவரி 20ம் திகதி அம்பாறையில் புலிகள் இயக்கத்தினர் மேற்கொண்ட ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதலில் 7 ஊர்காவற் படையினரும் ஒரு சிங்களக் குடிமகனும் கொல்லப்பட்டார்கள். பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள கட்டுவன் விலவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 ஊர்காவற் படையினரும் ஒரு பொலிஸாரும் கொல்லப்பட்டார்கள். அவர்களது ஆயுதங்களும் புலிகள் இயக்கத்தினரால் கைப்பற்றிச் செல்லப்பட்டதாக கிராம வாசிகள் தெரிவிக்கிறார்கள். இச்சம்பவம் பெப்ரவரி 24ம் திகதி நடந்தது. பொலன்னறுவை- வெலிக்கந்தையில் பெப்ரவரி 26ம் திகதி புலிகள் இயக்கத்தினர் நடத்திய தாக்குதலில் ஒரு ஊர்காவற் படைவீரர் கொல்லப்பட்டார், மேலும் 6 ஊர்காவற்படையினரும் 3 இராணுவத்தினரும், ஒரு சிங்கள மாணவியும் காயமடைந்தார்கள்.

மட்டக்களப்பு-ஆரையம்பதி மண்முனைத்துறையில் விசேட அதிரடிப் படையினரின் முகாமில் இருந்து இயங்கி வந்த புளொட் இயக்க அங்கத்தவரான இராஜலிங்கம் ஜீவரெட்ணம் (சின்னவன்) 27வயது என்பவர் புலிகள் இயக்கத்தின் பிஸ்டல் குழுவினரால் பெப்ரவரி 18ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

மகா சிவராத்திரி தினமான பெப்ரவரி 25ம் திகதியன்று ஆரையம்பதி திருநீற்றுக்கேணி விநாயகர் ஆலயத்திற்குச் சென்றிருந்த சீனித்தம்பி-விமலேந்திரன்-27வயது (அச்சுதன்) எனப்படும் ரெலோ அங்கத்தவர் புலிகள் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

04.03.98 அன்று மட்டக்களப்பு செங்கலடியில் நடைபெற்ற தாக்குதலில் ரெலோ உறுப்பினர் ஒருவர் பலியானார். புளொட் உறுப்பினர்கள் மூவர் காயமடைந்தனர்.

# ரெலோ மறுப்பு

"மன்னார் மாவட்டத்தில் ஓட்டோ உரிமையாளர்களிடம் 25 ஆயிரம் ரூபா ரெலோ இயக்கத்தினரால் வசூலிக்கப்படுகிறது." இவ்வாறு மன்னாரைச் சேர்ந்த காந்தி என்பவர் எழுதிய புகார் கடிதம் முரசில் பிரசுரமாகியிருந்தது.

"ஓட்டோ உரிமையாளர்களிடம் 25 ஆயிரம் ரூபா தமது இயக்கத்தால் வசூலிக்கப்படுகிறது என்பது உண்மையல்ல" என்று ரெலோ மன்னார் மாவட்ட அமைப்பாளர் பாஸ்கரன் முரசுக்கு மறுப்பு அனுப்பியுள்ளார்.

ஓட்டோ உரிமையாளரிடம் 25 ஆயிரம் ரூபா வாங்கப்படுகிறது என்பதை ரெலோ மறுத்துள்ளதே தவிர, அவர்களிடம் பணமே வசூலிப்பதில்லை என்று முற்றாக மறுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

விளம்பரப் பகுதி


ஏ.எஸ். மொஹமட் மவாஹிம் வழங்கும்

**வெளி நாட்டு வேலைவாய்ப்புக்கள்**

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளி நாட்டு வேலைவாய்ப்புத் துறையில் அனுபவமுள்ளவர். உங்கள் நம்பிக்கைக்கும், அன்புக்கும் பாத்திரமானவர். உங்கள் கனவை நனவாக்க அரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள்.

**சவூதி அரேபியா, குவைத், டுபாய், கட்டார், ஜோர்தான், லெபனான், சிங்கப்பூர்.**

- ஹவுஸ் மெயிட்
- ஹவுஸ் டிரைவர்
- ஹவுஸ் மெயிட்/ஹவுஸ் டிரைவர் (ஜோடி)
- ஹவுஸ் போய்
- குக்
- டெயிலர்

நிபந்தனைகளும், சலுகைகளும்

- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அங்கீகரிக்கப்பட்ட சம்பளத்திற்கு குறையாமல் பெறலாம்.
- தங்குமிட வசதி, வைத்திய வசதி என்பன இலவசம்.
- ஒப்பந்த காலம் முடிவடைந்ததும் திரும்பிவர விமான சீட்டு வழங்கப்படும்.
- ஏனைய சலுகைகள் அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய வழங்கப்படும்.

சப் ஏஜன்ட்களுக்கு விஷேட சன்மானங்கள் உண்டு

பாஸ்போட், அனுபவச்சான்றிதழ் பிரதிகள், பாஸ்போட் அளவிலான 4 புகைப்படங்கள் சகிதம் நேரடியாக வரவும்.

**அரப் விங்ஸ் டிரவல்ஸ் (Arab Wings Travels)**

இல.20/14, புளொக் 8-10, சிமொன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு-10. (சைக்கள் பஸார் / சின்ன பள்ளி அருகில்)

தொலை: 074-715557 பெக்ஸ்: 074-715557, 446535

App No. AL / 1498 / Advt / 01 / 98

GRAYON



**Metro Computer World**

17, Charlemont Road, Colombo - 06.

Tel : 074 511164

**Computer Courses**

**DIPLOMA IN COMPUTER STUDIES**

Information Technology, Ms Dos, Windows 95, Programming Techniques, Pascal, Ms Word, Ms Excel, Auto Cad.

Duration : 4 Months Course Fee : Rs. 5,500

**DIPLOMA IN PROGRAMMING**

Information Technology, Windows 95, Advanced Programming Techniques, Basic, Pascal, Visual Basic (Level 1)

Duration : 4 Months Course Fee : Rs. 5,000

**MICROSOFT OFFICE**

Information Technology, Ms Dos, Windows 95, Ms Word, Ms Excel, Ms Powerpoint

Duration : 4 Months Course Fee : Rs. 5,500

**PROGRAMMING IN VISUAL BASIC Ver 5.0**

Students can follow the first three classes free of charge and if impreseed may follow the course by paying the first instalment. Classes will be on Saturdays and Sundays

Duration : 3 months Course Fee : Rs. 7,500

**Autocad 14**

Level 1 : Rs. 2,500 Level 2 : Rs. 2,500 Level 3 : Rs. 2,500

Payments can be made in Instalments

Classes will commence on 21 - 03 - 1998



பல வருடங்களின் பின்

**அப்ஸராஸின் இன்னிசை மாலை**

மார்ச் 21 இரவு 9.00மணிக்கு

மாபெரும் இசை மழை

சங்கீதம்: மோகன் ராஜின் APSARAS உடன் சீதுவை சகுறா

நீர்கொழும்பு – கொச்சிக்கடையில்



**மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)**

வவுனியாவிலும் சந்திக்கலாம்

இளைஞர்களே! மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை. இளம் சமுதாயத்தினர் மெலிந்து, கனவில் சக்தியிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

**SEXUAL DISORDERS**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான்வீரியம் உள்ள ஆண் மகனாகிவிட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

**வெளிநாட்டில் வசிப்போருக்கு**

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான விளக்கத்துடன் கடிதத் தொடர்பு மூலம் அறிவித்தால் மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்)

**மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு கொள்ளவும்.**

மனநிலை பாதிப்புக்கள்; மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலா சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம் பயோரியா, வெள்ளைபோதல், நீரிழிவு, கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும், தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கவனத்திற்கு! புதிய செல்டெல் No. 072-609388

**கொழும்பில் மார்ச் 22 முதல் 29 வரை**

**DR.P.ARUMUGAM**

**AHAMED TOURIST INN**

BANG BANG BUILDING No. 10, Reclamation Road, (entrance: Bankshall St, Opposits Ranjanas) Colombo-11.

T.P. 436383, 436390.

கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 072-609388

கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

**ஓட்டமாவடியில் ஏப்ரல் 2. 3ம் தினங்களில்**

Dr. முகைதீன் டிஸ்பென்சரி, ஓட்டமாவடி. T.P.065-57345

**கல்முனையில் ஏப்ரல் 4.5.6ம் தினங்களில்**

T.M.M. பாமசியிலும் T.P.065-29329

**வவுனியாவில் மார்ச் 14.15.16.17ம் தினங்களில்**

வவுனியாவில் (2ம் குறுக்குத்தெரு) ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, VANNI INN இல் சந்திக்கலாம். T.P.024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

மற்றைய நாட்களில் **Dr.P.Arumugam No.33. Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa** விலும் சந்திக்கலாம்.



**முடி உதிர்தல்**

தடுப்பதற்கு

**கோர்ன்**





ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு முடி உதிர்தலைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்காவிட்டால் உங்கள் தலைமுடிகளை இழந்துவிடுவீர்கள். இயற்கையால் முடி உதிர்தலை நாங்கள் தடுக்கிறோம். கோர்ன் ஷம்பூ, கொண்டிஷனர் மற்று ம் ஹெயார் றெவிட்டலைசரைப் பாவிக்க ஆரம்பியுங்கள்.

Kolr

இலங்கையில் 50 வருடங்களாக பிரசித்தி பெற்றது.

**நேச்சர்ஸ் ஓர்கனிக்ஸ் கம்பனி**

தொலைபேசி

0722 - 42518, 01 - 237072

0722 - 53028, 01 - 237073

ஏக விநியோகத்தர்கள்:- சரஸ்வதி ஸ்டோர்ஸ், காஸ் வேர்க்ஸ் சந்தி, புறக்கோட்டை.



**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06. TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை




படிப்பகம்

www.padippakam.com

# குண்டு பஸ் எங்கே? எவரால்? எவருக்கு?

**போ**யா தினங்களில் கொழும்பில் வெடித்த குண்டுகள் 'போயா பீதியை' ஏற்படுத்தி இருந்தன.

அதனையடுத்து போயா தினங்களில் தலைநகரில் பாதுகாப்புத் தரப்பினர் மிக விழிப்பாக இருப்பது வழக்கமாகிவிட்டது.

இப்போதெல்லாம் குண்டுகள் வெடித்தால் இன்று என்ன போயா தினமா, விடுமுறை தினமா? என்று மக்களே நாள் பார்க்கப் பழகிவிட்டனர்.

போயாதினத் தாக்குதல்களும் மற்றும் விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமை கண்டியில் நடத்திய தலதாமாளிகை தாக்குதல் போன்றவையும் புலிகள் பொதுமக்களின் இழப்பை தவிர்க்க விரும்புகிறார்கள் என்பதை சிங்கள மக்களிடம் மட்டுமல்லாமல், சர்வதேச அளவிலும் தெரியப்படுத்தியுள்ளன.

அதனால்தான் மருதானைக் குண்டு வெடிப்பின் நோக்கத்தையும், இலக்கு தவறிய வெடிப்பு என்பதையும் அரச பிரசார சாதனங்கள் பெரியளவில் கூறாமல் அடக்கி வாசித்தன.

புலிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களை அரசு நழுவவிடாது என்பது எதிர்ப்பார்க்கக்கூடியதுதான்.

கொழும்பில் அடுத்தடுத்து குறிப்பிட்ட நாட்களில் இரண்டு குண்டு வெடிப்புக்கள் நடந்துள்ளன.

அது என்ன நாள்?

**அவசரகால சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் நாளைத்தான் தங்கள் தாக்குதலுக்கு உரிய நாளாக அடுத்தடுத்து இரு தடவைகளும் புலிகள் தெரிவு செய்துள்ளனர்.**

கொழும்பு கொம்பனிவீதியில் வாகனத் தொடரில் வரும் விமானப்படைத் தளபதியை குறிவைத்து கரும்புலி காத்திருந்ததும், பின்னர் சோதனை அரணில் மாட்டிக் கொண்ட நிலையில் குண்டு தாக்குதல் நடத்தி பலியானதும் பெப்ரவரி 05ம் திகதி.

**அன்றும் பாராளுமன்றத்தில் அவசர கால சட்ட நீடிப்பு பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது.**

மார்ச் 05ம் திகதி மருதானையில் குண்டுவெடித்த தினத்தன்றும் அவசரகால நீடிப்பு பிரேரணை பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருந்தது.

**அவசரகால சட்டப் பிரேரணை மாதாந்தம் கொண்டுவரப்பட்டு நீடிக்கப்பட வேண்டியதாகும். எனவே, பாராளுமன்றத்தில் அவசரகால பிரேரணை கொண்டு வரப்படும் நாட்களில் இனிமேல் நாடெங்கும் பாதுகாப்புத் தரப்பு உஷாராக இருக்க வேண்டியதாகிவிட்டது.**

அவசரகால சட்ட பிரேரணை கொண்டு வரப்படும் தினத்தன்றோ, அல்லது அதற்கு முதல் நாளன்றோ வன்னியில் படை நடவடிக்கையை முடுக்கிவிடுவது கடந்த சில மாதங்களாக நடந்து வந்தது.

'போர் தொடருகிறது. எப்படியும் வெற்றி பெற்றே தீருவோம்' என்று பிரதி பாதுகாப்பு அமைச்சர் பாராளுமன்றத்தில் சூளுரைக்கத் தோதாகவே அவசரகால சட்ட நீடிப்பு தினங்களை அண்டியதாக படை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டு வந்தன.

பிரபாகரன் அடிக்கடி கூறும் வாசகம் என்று இதனைச் சொல்வர்: **"எங்களுக்கு எந்த ரூபத்தில் அழிவு தரப்படுகிறதோ அந்த ரூபத்தில் திருப்பிக் கொடுக்க வேண்டும். எங்களிடம் அழிவைத் தருபவர்களுக்கு அதனையே திருப்பிக் கொடுக்க வேண்டும். எதிரி எங்களை தேடிவர முன்னர் நாங்கள் அவனைத் தேடிச் செல்லவேண்டும்."**

அவசரகால சட்ட நீடிப்பு நாளை புலிகள் தெரிவு செய்தது ஏன்? புலிகளின் இலக்குகள் யார்? என்பதற்கான பதில்கள் பிரபாகரனின் மேற்கண்ட கருத்துக்குள் அடங்கியுள்ளன.

பெப்ரவரி 05ம் திகதி குறிவைக்கப்பட்டவர் விமானப்படைத் தளபதி. அவசரகால நீடிப்பு நாளை அண்டிய தாக்குதல்களில் விமானப்படைதான் பிரதான பாத்திரம் வகித்து குண்டுகளை பொழிவதுண்டு.

அதுதவிர, நவாலி தேவாலய பகுதியில் நடந்த குண்டுத் தாக்குதலுக்கு பழிவாங்கவே விமானப்படைத் தளபதிக்கு புலிகள் குறி வைத்தனர் என்றும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பில் அவசரகால நீடிப்புத் தின தாக்குதல்களுக்கு புலிகள் தீர்மானித்த போது இரண்டு பேர் பிரதான இலக்குகளாக குறிக்கப்பட்டனராம்.

**ஒருவர், பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அநுருத்த ரத்வத்தை. இன்னொருவர் விமானப்படைத் தளபதி ஒலிவர்.**

விமானப்படைத் தளபதி ஒலிவர் விரைவில் பணியில் இருந்து ஓய்வு பெறப்போகும் செய்தி புலிகளுக்கு எட்டியதால், முதல் இலக்காக அவரை குறிவைத்தனராம்.

**ஓய்வு பெற்றுவிட்டால் அவரது நடமாட்டங்களை அறியமுடியாது என்பது முதல் காரணம். பதவியில் இருக்கும்போது குறிவைத்தால்தான் சவாலாக இருக்கும் என்பது இரண்டாவது காரணம்.**

எனினும் ஒலிவர் குறியில் இருந்து தப்பியதுடன், பணியில் இருந்தும் இம்மாதம் ஓய்வு பெற்றுவிட்டார்.

அடுத்த குறிதான் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை.

அவசரகால சட்ட நீடிப்பு தினத்தன்று பாராளுமன்றத்துக்கு அவர் சமூகமளிப்பது வழக்கம். எப்போதாவது ஒருசில தடவைகள் அதுகூட போர் நடக்கும் பகுதிகளுக்கு அவசரமாக சென்றால் மட்டுமே அவர் சமூகமளிக்காமல் இருந்திருக்கிறார்.

**வாகனத் தொடரணியாகவே அவர் பாராளுமன்றம் சென்று திரும்புவது வழக்கம். அவரது காரின் இருபுறமும் வாகனங்கள் நெருங்க விடாதவாறு விசேஷ அதிரடிப்படையினர் பாதுகாப்பு வழங்கிச் செல்ல, தொடரணி துரித வேகத்தில் செல்லும்.**

அவசரகால சட்ட நீடிப்பு நாட்கள் அன்று பாராளுமன்ற பாதையில் பலமாதமாக காத்திருந்து பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணியின் பலம், பலவீனத்தை கூர்ந்து கவனித்து, அதற்கேற்ற நுட்பமான திட்டம் ஒன்றை புலிகள் வகுத்தனர்.

லொறியைக் கண்டாலே உஷாராகி விடுகிறார்கள். வேன் என்றால்கூட சந்தேகம் வரக்கூடும். தவிர தொடரணியின் அருகில் செல்ல முடியாது என்பதால் எட்டத்தில் நின்று வெடித்தாலும் பாரிய சேதத்தை ஏற்படுத்துமளவுக்கு விரிவான பரப்பில் குண்டுகளையும் சன்னங்களையும் பொருத்த வேனை விட பெரிய வாகனம்தான் வசதி.

**அதனால்தான் இதுவரை எந்தக் குண்டுத் தாக்குதலிலும் உபயோகிக்கப்படாத வாகனமான மினிபஸ்ஸை குண்டுவாகனமாக உபயோகிக்க புலிகள் தீர்மானித்தனர்.**

தாக்குதல் வாகனம் மட்டுமல்ல, தாக்குதல் உத்தியும் புதியதுதான். இதுவரை காலமும் வாகனத் தொடரணிக்குள் குண்டு வாகனம் மோதி வெடித்துத்தான், தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அல்லது, வாகனத் தொடரணி செல்லும் பாதையில் வாகனத்தை நிறுத்தி வைத்து, தொடரணி வரும்போது வெடிக்கச் செய்ய வேண்டும்.

**இந்த இரண்டு தாக்குதல் முறைகளும் பாதுகாப்பு தரப்புக்கும் பரிச்சயமானவையே. அதனால் இத் தாக்குதல் தந்திரங்களில் சிக்காமல் இருப்பதற்கு ஏற்ப, தொடரணி செல்லும் பாதைகளில் ஏனைய வாகனங்களை படையினர் நெருங்க விடுவதில்லை. தொடரணி வரும் பாதையோரங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க பொலிஸார் அனுமதிப்பதில்லை.**

பொரளையில் இருந்து பாராளுமன்றம் இருக்கும் ஸ்ரீஜெயவர்த்தனேபுரம்வரை பாதையின் இருமருங்கிலும் ஆயுதம் தாங்கிய பொலிசார் பாராளுமன்றம் கூடும் நாட்களில் பணியில் ஈடுபட்டிருப்பர். அவசரகால சட்ட நீடிப்பு தினங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கூடுதலாக இருக்கும்.

ஆனால், இத்தகைய கண்காணிப்பில் உள்ள உளவியல் ரீதியான பலவீனங்களை புலிகள் துல்லியமாக அவதானித்துள்ளனர். லொறி அல்லது வேன் போன்றவற்றின்மீது தான் பொலிசாரின் கவனம் கூடுதலாக இருக்கும்.

பாராளுமன்றப் பாதையில் லொறிகள் செல்லத் தடை இருப்பதால், வேன், கார் போன்ற வாகனங்களைத்தான் அவதானிப்பர்.

பயணிகள் வாகனமான மினிபஸ்ஸில் குண்டுவரும் என்று நினைத்தே பார்க்க மாட்டார்கள். சந்தேகப் பார்வைக்கு இரையாகாமல் இருக்க ஏற்ற வாகனம் மினிபஸ்தான்.

அடுத்தது தாக்குதல் உத்தியும் புதிது. வாகனத் தொடரணி செல்லும் திசையில் தொடரணிக்கு முன்பாக சென்று கொண்டிருக்கும் வாகனங்களை ஓரத்தில் ஒதுங்கச் செய்தல், பின்னால் வரும் வாகனங்களை கண்காணித்தல் என்பவற்றைத்தான் தொடரணியில் செல்லும் பாதுகாப்பு படையினர் இதுவரை செய்து வந்தனர்.

**இந்த பாதுகாப்பு வியூகத்திற்கும் ஒரு ஓட்டை இருப்பதை புலிகள் கண்டு கொண்டனர். குறிப்பிட்ட தொடரணி செல்லும் திசைக்கு எதிர்ப்புறம் இருந்து வரும் வாகனங்களை கவனிப்பதில்லை.**



அந்தப் பலவீனத்தை வைத்துத்தான் புலிகள் தங்கள் உத்தியை வகுத்தனர்.

பாராளுமன்றக் கூட்டம் முடிந்ததும் அங்கிருந்து புறப்பட்டு பொரளை நோக்கி பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணி வந்து கொண்டிருக்கும். பாராளுமன்றத்தை நோக்கிய திசையில் குண்டு வாகனம் சென்று கொண்டிருக்கும்.

**சாலையில் எதிரும் புதிருமான திசையில் அருகருகே வரும்போது குண்டுவாகனத்தை கரும்புலி வெடிக்க வைப்பார்.**

சாலையின் மத்தியில் உள்ள சீமெந்து தளப் பகுதியின் அருகாக சென்று கொண்டிருக்கும் குண்டுவாகனத்தை சீமெந்து கட்டில் சடுதியாக ஏற்றியும் வாகனத் தொடரை சமீபித்து வெடிக்க முடியும்.

எப்படி வெடித்தாலும் குறிப்பிட்டளவான தூரத்தை எட்டக்கூடியதும், பாரிய சேதத்தை விளைவிக்கக்கூடியதுமான முறையிலேயே குண்டு பொருத்தப்பட்டிருந்தது.

**வாகனம் சடுதியாக ஒரு திரும்புத் திரும்பி வெடித்தாலும்சரி, அப்படியே நேராக நின்று வெடித்தாலும் சரி மறுபுறம் செல்லும் வாகனத் தொடரணியை தகர்க்கக்கூடிய விதமாகவே குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன.**

வாகனத்தின் இருபுறமும் பக்கவாட்டுப் பகுதிகளிலேயே பிளாஸ்டிக் வெடி பொருட்கள் நிரப்பப்பட்டிருந்தன. நீண்டதூரம் சிதறிப் பறக்கக் கூடிய அளவுக்கு சன்னங்களும் வைக்கப்பட்டிருந்தன.

அதனால்தான் மருதானையில் பலநூற்றுக் கணக்கானோர் காயமடைந்தனர். பலவாகனங்கள் சேதமடைந்தன.

**சேதங்களை பார்க்கையில் திட்டமிடப் பட்டபடி தாக்குதல் நடந்திருந்தால் நினைத்த இலக்கை புலிகள் அடைந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.**

எனவே, விபத்தான ஜீப்புக்கும், பதற்றம் காரணமாக விபத்துக்குள்ளாக்கிய மினிபஸ் சாரதிக்கும்தான் அரசாங்கம் நன்றி சொல்ல வேண்டும்.

பொலிஸ்காரர் ஒருவருக்கு சன்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. துணிச்சலாக செயற்பட்டார் என்றும் பாராட்டப்பட்டுள்ளது.

உண்மையாக பார்க்கப்போனால், குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை வேலைநீக்கம் செய்ய வேண்டும். மினிபஸ்ஸை மருதானை பொலிஸ் நிலையத்துக்குள் கொண்டு செல்லுமாறு இரண்டு பொலிசாருக்கு கட்டளையிட்டாராம். அதன்படி நடந்திருந்தால் மருதானை பொலிஸ் நிலையம் தகர்ந்திருக்கும். அப்படி நடந்திருந்தால் குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரியை மறுபேச்சே இல்லாமல் வேலை நீக்கம் செய்திருப்பர்.

பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்போகிறார்கள் என்று தெரிந்திருந்தால், வாகனச் சாரதி தப்பியோட முயலாமல், அங்கேயே கொண்டு சென்று வெடிக்க வைத்திருப்பார்.

**மினிபஸ்சுக்குள் பொலிசார் இருவர் ஏறியதாக கூறுவதும் தவறு. பின்னால் சென்ற ஜீப் ஒன்றில்தான் துரத்திச் சென்றனர். குண்டு வெடிப்பில் அந்த ஜீப்பும் சேதமானது. அதில் சென்ற பொலிசார் இருவரும் பலியாகினர்.**

குண்டு வாகனம் என்று தெரிந்து துரத்தியிருந்தால் அதனை வீரச் செயல் என்று பாராட்டுவதில் தவறில்லை.

வாகனம் ஒன்று பிறிதொரு வாகனத்தில் மோதிவிட்டு நிற்காமல் சென்றால் துரத்திப் பிடிப்பது வழக்கமாக போக்குவரத்துப் பொலிசார் செய்யும் காரியம்தான். இது காகம் இருக்க பனம் பழம் விழுந்ததுபோலாகிவிட்டது. அவ்வளவுதான்.

**எனவே, குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிக்கு கொடுக்கப்பட்ட சன்மானம் வீரச் செயலுக்கானதல்ல, பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் உயிர் பாதுகாக்கப்பட தன்னையறியாமல் உதவி செய்தமைக்காக வழங்கப்பட்ட சந்தோச வெகுமதி.**

கொலன்னாவ எண்ணெய் குதத்தை தாக்கிவிட்டு வந்த புலிகளில் ஒருவரை சுட்டு வீழ்த்திய பொலிசாரின் நடவடிக்கையை வீரச் செயல் என்று அழைக்கலாம். அதனுடன் ஒப்பிட்டால் இது சாதாரணம்.

மருதானையில் நடைபெற்ற குண்டு வெடிப்பு மினிபஸ்ஸை செலுத்தியவரின் அஜாக்கிரதையாலும் பதற்றத்தாலுமே ஏற்பட்டது.

> **அவசரகால நீடிப்பு நாட்களில் அடுத்தடுத்து வைக்கப்பட்ட குறிகள்!**
> **அவசரகால சட்டத்திற்கு எதிர்ப்பு காட்டவும், வி.வி.ஐ.பிக்களைத் தாக்கவும் புலிகள் போட்ட திட்டம்!**

அந்த மினிபஸ்ஸை செலுத்தியவர் **கரும்புலியா? அல்லது குறிப்பிட்ட ஒரு இடத்தில் தயாராக நின்ற கரும்புலியிடம் மினிபஸ்ஸை ஒப்படைக்கச் சென்றவரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.**

ஏனெனில் குண்டு வாகனத்தை ஓட்டிச் செல்லும் கரும்புலியும் தனது உடலில் குண்டு பொருத்திய ஆடையை அணிந்திருப்பதுண்டு. வாகனம் தப்பித்தவறி வெடிக்காதுவிட்டு, மாட்டுப்படும் கட்டம் வந்தால், தன்னைத்தானே வெடிக்க வைத்துவிடுவார்.

மினிபஸ்ஸை செலுத்திய சாரதி குண்டு உடை எதுவும் அணிந்திருக்கவில்லை என்றே அறியப்பட்டுள்ளது.

**அடுத்த சந்தேகம்தான் பெரிதாக உள்ளது. மினிபஸ்சுக்குள் தொலைத் தொடர்பு கருவிகளோ அல்லது செல்போன் எதுவுமோ இருக்கவில்லை.**

பாராளுமன்றம் செல்லும் பாதையில் நீண்டநேரம் மினிபஸ்ஸை நிறுத்தி வைத்திருக்க முடியாது. சுற்றி சுற்றி திரியவும் இயலாது. பொலிசாருக்கு சந்தேகம் வந்துவிடும். எனவே பாராளுமன்ற நாளுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளுக்குள் உள்ளடங்காத பகுதி ஒன்றில் மினி பஸ்ஸை நிறுத்திவிட்டு காத்திருக்க வேண்டும்.

**வழக்கமாக வாகனக் குண்டுத் தாக்குதல்களின்போது வாகனத்தை செலுத்துபவரை வழிநடத்த வெளியே ஒரு பொறுப்பாளர் இருப்பார்.**

குண்டு வாகனத்தை புறப்பட்டு வர

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

உத்தரவிடுவது, திடீரென்று எதிர்பாராதகள மாற்றம் நிகழ்ந்தால் அதற்கேற்ப திட்டத்தை மாற்றுவது என்பது அந்தப் பொறுப்பாளரின் வேலை.

தலதா மாளிகை தாக்குதல், கலதாரி ஹோட்டல் மீதான தாக்குதல்களின்போது தொலைத் தொடர்பு கருவிகள் குண்டு வாகனங்களுக்குள் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**அதுபோல பிரதியமைச்சரின் வாகனத் தொடரணியை தாக்குவது என்றால், பாராளுமன்றத்தில் இருந்து வாகனத் தொடரணி புறப்பட்டு வருவதை கவனிக்கக் கூடிய ஒரு இடத்தில் நின்று நோட்டமிட்டு, குண்டுவாகனத்திற்கு தகவல் கொடுத்தே ஆக வேண்டும்.**

தகவல் தொடர்புகள், கட்டளை பரிமாற்றங்கள் என்பவைதான் புலிகள் இயக்கத்தினரின் தாக்குதல்களின் துல்லியத்துக்கு உறுதுணையாக அமைவதுண்டு.

**தனி நபர்களாக செல்லும் கரும்புலிகளுக்கு தொலைத் தொடர்பு கருவிகள் தேவைப்படாது. அவர்களது தாக்குதல் முறையில் அவற்றைப் பயன்படுத்தவும் சந்தர்ப்பம் இருக்காது. வாகனக் குண்டுத் தாக்குதல்களுக்கு அதுவும் பாரிய இலக்கு மீதான தாக்குதல் என்பதால் தொடர்பு சாதனம் மட்டுமல்லாமல், இன்னொரு அணியும் களத்தில் இறங்கத் தயாராகவே இருந்திருக்கும்.**

குறைந்தது இரண்டு கரும்புலிகளாவது குண்டு வாகனத்தில் சென்றிருப்பர். ஒருவர் வாகனத்தை செலுத்த இன்னொருவர் ஆயுதத்துடனும், தொடர்பு சாதனத்துடனும் அருகில் இருப்பார்.

இலக்கின் பாரிய தன்மை காரணமாக பல கரும்புலிகளை களத்தில் இறக்க புலிகள் தயங்கியிருக்க மாட்டார்கள்.

அதுதவிர குண்டு வாகனம் வெடித்தது மதியம் 12.30 மணிக்கு. பாராளுமன்றத்தில் மாலை ஆறுமணிவரை அவசரகால சட்ட விவாதம் நடக்கும்.

ஆனால், பெப்ரவரி 05ம் திகதி ஐ.தே.கட்சி பாராளுமன்றத்தை பகிஷ்கரித்தமையால் முன்கூட்டியே விவாதங்கள் முடிந்தன. பாராளுமன்ற பகிஷ்கரிப்பு முடிவு திடீரென்று செய்யப்பட்டது என்பதால் அதற்கேற்ப தமது திட்டத்தை புலிகள் வகுத்திருக்க முடியாது. கால அவகாசம் போதாது.

எனவே, மாலை ஆறுமணிக்கு மேல் தாக்குதல் நடத்தக்கூடியதாகவே திட்டமிடப்பட்டிருக்கும். அதற்கிடையே வேறு ஒரு பகுதியில் தயாராய் காத்திருந்த புலிகளின் கரும்புலிகளிடம் வாகனத்தை ஒப்படைக்கத்தான் குறிப்பிட்ட சாரதி கொண்டு சென்றுள்ளார்.

கொழும்பு நகருக்குள் பழக்கப்பட்ட சிங்களம் தெரிந்த ஒருவரை குண்டு

**நாரதர்**

வாகனத்தை குறிப்பிட்ட தூரம் வரை கொண்டு சென்று ஒப்படைக்க புலிகள் பயன்படுத்தி இருக்கலாம்.

புலிகள் வாகனத்தை ஒப்படைக்குமாறு கூறிய நேரத்துக்குள் செல்லும் அவசரத்திலும், வாகனத்தை ஒப்படைக்கும் வரை ஏற்படக்கூடிய இயல்பான பதற்றத்தாலுமே விபத்தும் நேர்ந்திருக்கிறது.

**குண்டுத் தாக்குதலுக்கு தெரிவு செய்யப்படும் கரும்புலிகள் இலக்குக்கு அண்மையில் வைத்துத்தான் வாகனத்தை பொறுப்பேற்பது வழக்கமாகும்.**

இரகசியம் காக்கும் தேவைக்காகவும், சில அனுகூலங்கள் கருதியுமே அவ்வாறு செய்யப்படுவதுண்டு.

**எனவே, குறித்த தாக்குதலுக்கு தயாரான கரும்புலிகள் அணியினர் தலைநகரிலேயே தங்கள் அடுத்த நகர்வுக்காக காத்திருக்கின்றனர் என்று நம்பவேண்டியுள்ளது.**

மினி பஸ் விவகாரத்தில் கைதானவர்களுக்கு மினி பஸ் உரிமையாளர் புலேந்திரன் புலிகளின் ஆதரவாளர் என்பதைத் தவிர, வேறு விடயங்கள் எதுவும் தெரிந்திருக்காது.

குண்டு எங்கிருந்து பொருத்தப்பட்டது? கொழும்பில் புலிகளின் வலைப் பின்னல் என்ன? போன்ற விபரங்களை அவர்கள் அறியார்கள். ■

## அதிரடி அய்யாத்துரை



**மருதானையில் குண்டு வெடித்ததல்லோ?** சனம் யாரும் பதற்றப்படவேயில்லை. சகோதர இன நண்பர் ஒருவர் செய்தியைக் கேள்விப்பட்டதும் "ராக்கெட் மிஸ்ஸிங்!" எண்டு சொல்லிப்போட்டார். போயா நாள் பார்த்தும், லீவு நாள் பார்த்தும் ரெண்டு எழுத்தார் தாக்குதல் தொடங்கியபிறகு, சகோதர இனத்தார் மத்தியிலும் ஒரு நம்பிக்கை ஏற்பட்டிருக்குது. ஆனால் அதிகாரமுடைய ஒருவர், மக்கள் கோபப்படாமலிருக்குமாறு வேண்டுகோள் விடுத்ததாக வானொலி அறிவித்தது. சனம் சும்மா இருந்தாலும் தூண்டிவிடுறமாதிரி அல்லோ கிடக்குது! யாரும் செத்தால் "ஆழ்ந்த அதிர்ச்சியடைந்தோம்!" என்று கூறுவது, குண்டுகள் வெடித்தால் "யாரும் கோபப்படாதர்!" என்று கூறுவது: இதெல்லாம் அரசியல்வாதிகளுடன் இரண்டறக் கலந்து போச்சது. சூழ்நிலை கவனித்து கருத்துக்களைக் கூறினால் என்ன குறைஞ்சோ போவினம்?!

**கிழக்கின் தனித்துவத்** தலைவருக்கும் தென்னிலங்கையில் செல்வாக்கானவரான போக்குவரத்துக்குப் பொறுப்பானவருக்கும் இடையே பனிப்போர் முடிந்து, இப்போது நேரடி அனல் போர் தொடங்கியிருக்குது. சவாலுக்குச் சவால்! தென்கிழக்கு மாகாண சபை நடக்காத கதை, என்று உறுதியாகச் சொல்கிறாராம் போக்குவரத்துக்குப் பொறுப்பானவர்.

**ஜனாதிபதி சட்டத்தரணியாக** நியமிக்கப்பட்டுள்ளார் கலாநிதி அல்லது டாக்டர் நீலன் திருச்செல்வம். அண்ணருக்கு மகாகுஷி. சந்தோசத்தை கொண்டாட தனது வீட்டிலேயே தடபுடலான விருந்து வைத்து அசத்திப்போட்டார். முக்கிய பிரமுகர்கள் யாவரும் கலந்துகொண்டு சிறப்பித்தவையாம். ஆஹா... விவேகத்திற்கு கிடைத்த பரிசு! இன்னமும் அவரது விவேகத்தைப் பயன்படுத்த கொடுத்த ஊக்குவிப்பு என்று பலவாறாகப் பாராட்டுவோமாக!

**தலைநகரில் பைகளுடன்** நடமாடும் தமிழ் பேசுவோரைக் கண்டால், அருகில் நிற்போர் ஒருமாதிரியாகத்தான் பார்க்கினம். தப்பித்தவறி ஞாபக மறதியாக கடைகளுக்கு முன்னால் பையை வைத்துவிட்டுப் போனால் ஏடாகூடமாகிவிடும். முதலில் தமிழ் பையன்களில் ஒரு கண் இருந்தது. பின்னர் யுவதிகளிலும் கண். இப்போது தமிழ்ப் பையர்களிலும் ஒரு கண் வைக்க வேண்டிக்கிடக்கு. நல்ல திடகாத்திரமான தீர்வுப்பொதியை செய்தாப்போதும்; பிறகு எந்தப் பொதிக்கும் பயப்பிடத் தேவையில்லையல்லோ?

**யாழில் துரையப்பா** விளையாட்டரங்கின் திறப்புவிழா நிகழ்ச்சிக்கு அம்மணியாரையும் கூப்பிட்டவையாம். வம்பு வேண்டாம் என்று பகிஷ்கரித்துப் போட்டாவாம். அம்மணியாரின் செய்திகளுக்கு வானொலியும் முதலிடம் கொடுக்குதுங்கோ. எனக்கொரு சந்தேகம்! துரையப்பாவுக்கு பெண்பால் என்ன? 'துரையம்மா!'

**கிளிநொச்சி முரசுமோட்டையில்** மாதா கோயில் மீது சமீபத்தில் முட்டை போடப்பட்டதாம். அதைப்பற்றி பெருமதிப்புக்குரிய தமிழ்க் கட்சிகள்கூட மூச்! "கோபி அன்னாரின் காதுகளிலும் இதெல்லாம் விழாதோ?" என்று ஒருத்தர் கேட்டார்.

**இந்தியாவுக்குத்தான் முந்திச்** செல்லத் திட்டமிட்டிருக்கிறாராம் எதிரணித் தலைவர். அடிக்கடி வெளிநாடு சென்று வந்தால்தானே, ஏதோ முக்கிய விஷயம் இருக்குதாக்கும் என்று பத்திரிகைகள் விமர்சனங்கள் எழுதும்! எதைப் போய் மூட்டி வைத்தாரோ என்று அதிகாரத்தரப்பும் தலையைப் பிய்க்கும்!

**இந்தியாவில் பாரதிய ஜனதா** பதவிக்கு வரும் என்று கணிப்புத் தெரிந்தவுடன் யாழ் கோவில்களை புனரமைக்க அவசர அவசரமாக நிதி ஒதுக்கீடு நடந்திருக்குதாம். 'சோழியன் குடுமி சும்மா ஆடுமோ?'

**யாழ்ப்பாணம் கீரிமலை** நகுலேஸ்வரத்தில் முன்னாள் போராளி ஒருவர் துண்டு விரித்து அமர்ந்திருந்து சாத்திரம் சொன்னவராம். இளம்பராய பெண் பிள்ளைகளுக்கு என்றால் சிறப்புத் தள்ளுபடியுடன் குறி சொல்லப்பட்டதாம். போகிறபோக்கில் உலகத்தின் ஒட்டுமொத்தமான பிற்போக்கு சமாச்சாரங்களும் முன்னாள் 'புரட்சிகர' இயக்கங்களுக்குள்ளும் அவர்தம் உறுப்பினர்களுக்கும் தொற்றிக்கொண்டு வருகுதுங்கோ!

**இவ்வாரப் பொன்மொழி:**

"மகிழ்ச்சியான நேரத்தில்
நண்பனை நினைத்துப்பார்!
சோர்வான நேரத்தில்
காதலை நினைத்துப் பார்!
அதிஷ்டம் வரும் நேரத்தில்
எல்லோரையும் நினைத்துப்பார்!" ■



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

172

இலங்கையில் இருந்து இந்தியப் படையினரை படிப்படியாக வெளியேற்றும் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

இக்கட்டத்தில் இந்தியப்படை அதிகாரிகள் சிலருடன் பழகி, அவர்களது மனநிலைகளை கட்டுரையாக எழுதியிருந்தார் இந்திரானில் மனோர்ஜி.

அவரது கட்டுரை அன்றைய வன்னி யுத்தத்தின் தன்மையையும் விளக்குவதாக அமைந்துள்ளன. அக் கட்டுரையில் முக்கிய பகுதிகள் இங்கு தரப்படுகின்றன.

"ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேறியபோது நிகழ்ந்த ஆரவாரங்களோ, வியட்நாமிலிருந்து அமெரிக்க படைகள் வெளியேறிய போது அமெரிக்க மக்கள் வெளிப்படுத்திய குதூகலமோ இல்லாமல் இந்தியா தனது படைகளை வாபஸ் பெறத் தொடங்கியுள்ளது.

படாது என்றே தெரிகிறது.

காரணம், மக்கள் ஆதரவுள்ள ஒரு கெரில்லாப் போராட்ட இயக்கத்தை தோற்கடிப்பது என்பது கஷ்டமே.

ஆனால் இந்தியப் படை அனுபவிக்கும் துன்பம், அமெரிக்கப்படைகள் வியட்நாமில் அனுபவிக்கும் கஷ்டங்களையோ, சோவியத் துருப்புக்கள் ஆப்கானிஸ்தானில் எதிர்கொண்ட இடர்களையோவிட குறைவானதே என்றாலும், இலங்கையில்

இயக்க வேலைகளைக் கவனிப்பதற்காகவும் பிரிட்டனுக்கு அனுப்ப முடிவு செய்தார் பிரபாகரன்.

மணலாற்றுக் காட்டில் இருந்து புறப்பட முன்னர் கிட்டுவின் மனம் எப்படியிருந்தது என்று பொட்டம்மான் நினைவு கூர்ந்திருந்தார்.

"கிட்டண்ணை இறுதியாக நாட்டைவிட்டுப் புறப்படும் காலத்தில் மிகவும் நொந்து போயிருந்தார். இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட தன்னையும் சக போராளிகளையும் விடுவிக்கும்படி சிறையில் உண்ணாவிரதம் இருந்ததும், அதனைத் தொடர்ந்து யாழ் நகரில் விடுவிக்கப்பட்டதும், அதன் பின்னர் அவர் மணலாற்றுக் காட்டுக்குச் சென்று தலைவருடன் இணைந்து கொண்டதும் தெரிந்ததுதான்.

இந்தியர்கள் தன்னை மட்டும் விடுவித்து விட்டு, தன் தோழர்களை சிறையில் வைத்திருப்பதை சொல்லி வெதும்புவார். "என்ரை

வேண்டும். எனக்கு என்ன வேலை கொடுத்தாலும் செய்வேன். பெடியளின் உடுப்பை தோய்த்து மடிக்கும் வேலை எண்டாலும், அதை எப்படி வெள்ளையாய் தோய்ப்பது என்று தான் ஆராய்ச்சி செய்வேன். எனக்கு இது பிரச்சனை இல்லை" என்று கூறினார்.



## தாகத்தில் தவித்த படையினர்

கடந்த மாதம் எட்டாயிரம் துருப்புக்களை இந்தியாவுக்கு திருப்பி அழைத்துள்ளதாகவும், இன்னும் சில மாதங்களில் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட துருப்புக்கள் வாபஸ் பெறப்படும் என்றும் இவ்வருட (1989) முடிவில் ஒரு சிறு படை மட்டுமே இங்கு அடையாளமாக நிலை கொண்டிருக்கும்.

அண்மையில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு திரும்பிய இராணுவத் தளபதி ஒருவர் பின்வருமாறு கூறினார்.

"நாங்கள் இன்று இலங்கை அரசாங்கத்தாலும் வேண்டப்படாதவர்கள், அங்குள்ள பெரும்பான்மை மக்களும் எங்களை வெறுக்கிறார்கள். அத்தோடு நம் நாட்டவரே நாங்கள் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை.

இவ்வாறு அவர் கூறியதற்கு காரணம் என்ன? இன்று இலங்கையில் சிக்கல் மிக்க அரசியல் சூழ்நிலை காணப்படுகிறது.

### தளபதி கருத்து

இலங்கையில் அமைதிப் படைக்கு தலைமை தாங்கும் தளபதி கல்கட் பி.ரி.ஐ. நிறுவனத்திற்கு பேட்டி அளித்தபோது, "இலங்கைக்கு அனுப்பப்பட்ட அமைதிப் படையின் இராணுவரீதியான நடவடிக்கை முடிந்துவிட்டது. ஆனால் இலங்கைத் தமிழரின் பிரச்சனை அரசியல், இராணுவம் சம்பந்தப்பட்டது.

இலங்கையில் இருந்து இந்திய அமைதிப்படை வெளியேறுவது என்பது கூட இலங்கை, இந்திய உயர்மட்ட அரசியல் செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது" என்றார்.

இராணுவரீதியாக பல இழப்புகள் இந்தியப் படைகளுக்கு நேர்ந்துள்ளது. ஆயினும் அவர்கள் தமக்குக் 'கொடுக்கப்பட்ட பணிகளை அச்சமின்றி நிறைவேற்றி வருகின்றனர். அவர்களுடைய வீரம் உயர்ந்த கட்டுப்பாடுடையதாக உள்ளது" என்றும் அவர் கூறினார்.

ஆனால், அமெரிக்க படைகளுக்கு வியட்நாமில் நேர்ந்ததோ, சோவியத் படைகளுக்கு ஆப்கானிஸ்தானில் நேர்ந்ததோ இந்தியப் படைகளுக்கு நேரக்கூடாது.

அதற்குரிய ஒரே வழி காடுகளில் மறைந்துள்ள புலிகள் இயக்கத்தினர் மேலும் தலையெடுக்க முடியாதபடி அமைதிப்படையினர் தமது முழுப்பலத்தையும் ஒன்று குவித்து, அவர்களைத் தாக்கி அழிக்க வேண்டும்.

ஆனால் இது சாத்தியமா? என்பதே அடுத்த கேள்வி.

இந்தியாவில் உள்ள மிசோராம், மணிப்பூர், நாகலாந்து, திரிபுரா போன்ற இடங்களில் இந்தியப் படை எதிர்கொண்ட அனுபவங்களில் இருந்து இது சாத்தியப்

அவர்களது நிலை குரூரமானதும், தனிமைப்பட்டதாகவும் இருக்கிறது.

இன்று அநேகமாக வன்னிக் காடுகளிலேயே சண்டைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இந்தக் காடுகளில் நிலவும் உஷ்ணமும், அதைச் சுமந்துவரும் காற்றும் ஒவ்வொரு இராணுவ வீரனையும் தாகவிடாயால் தவிக்க வைக்கிறது.

எதிரியின் தாக்குதலைவிட தண்ணீர் தாகமே மிகக் கொடியதாய் உள்ளது. எல்லாத் தண்ணீர் குழிகளும் வரண்டிருப்பதே இதற்கு காரணம்.

இந்த நிலையில் தண்ணீருக்கு அலையும் போது கெரில்லாவால் இவர்களே முதலில் தாக்கப்படுகின்றனர்.

### கண்ணி வெடிகள்

இந்திய இராணுவத்தினருக்கு அதிகமான அழிவுகள் கண்ணிவெடிகளாலேயே ஏற்படுகின்றன.

கண்ணிவெடிகளால் அங்கங்களை இழக்கும் இராணுவவீரர்கள் பலவித மனச்சிக்கலுக்கு உள்ளாகின்றனர்.

கூர்க்கா பிரிவைச் சேர்ந்த சுரேந்திர கேசர்ராய்க்கு இருபது வயது. தேடுதல் வேட்டை ஒன்றின்பின்னர் காட்டிலிருந்து திரும்பிய முன்னிரவில் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கினார்.

அவரது கால் முழங்காலுக்கு கீழே கழற்றப்பட்டது. இதுபற்றி அவர் குறிப்பிட்ட போது; "நான் ஒரு துரதிர்ஷ்டசாலி" என்று வருந்தினார்.

கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் கருவிகள்கூடப் பயனற்றவையாகிவிட்டன என்று தளபதி கரோச் என்பவர் கூறினார்.

கெரில்லாக்கள் இப்போது லோகத்தாலான சுவிட்சுகளை கைவிட்டு, மரத்தாலானவற்றையே பாவிக்கின்றனர்.

வெடிபொருட்கள் இப்போது மரங்களிலும் தொங்கத் தொடங்கியுள்ளன.

தளபதி கரோச் மேலும் தெரிவிக்கையில்; "கெரில்லாக்கள் பாவிக்கும் ஆயுதங்களோடு ஒப்பிடும்போது நாம் பாவிக்கும் ஆயுதங்கள் மிகப் பின் தங்கியவை" என்றும் குறிப்பிட்டார்.

மற்றொரு இந்திய இராணுவ உத்தியோகத்தர் கருத்துத் தெரிவிக்கையில்; "இலங்கையில் ஒவ்வொரு குழுவும், ஒன்றையொன்று அழிக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. இது தவிர்க்க முடியாதது. இதற்கு நாம் ஒன்றும் செய்ய முடியாது" என்று கூறினார்.

மேற்கண்டவாறு அக் கட்டுரை தெரிவித்திருந்தது.

### கிட்டு கொழும்பில்

வன்னியில் மணலாற்றுக் காட்டுப்பகுதியில் தங்கியிருந்த கிட்டுவை கால் சிகிச்சைக்காகவும், வெளிநாடுகளில் புலிகள்



வெளிநாட்டில் கிட்டு

பொட்டம்மான் கிட்டுவின் மறைவின் பின்னர் நினைவு கூர்ந்த சம்பவங்களுள் ஒன்றுதான் மேற்கண்ட கூற்றாகும்.

கொழும்பில் கடவுச் சீட்டுக்கு கிட்டு விண்ணப்பம் செய்தார். கிட்டுவுக்காக கடவுச் சீட்டுக்கு பொன்சர் செய்தவர் இராணுவ அதிகாரி கொத்தலாவல.

கிட்டு யாழ்மாவட்ட தளபதியாக இருந்தபோது நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தின்போது கிட்டுவின் நண்பரானவர் கொத்தலாவல.

கால் சிகிச்சைக்காக செல்வதற்கு என்றே பிரிட்டிஷ் விசாவும் பெறப்பட்டது.

கால் சிகிச்சை என்பது முழுக் காரணமல்ல. இலங்கை அரசுடன் போர் தொடங்குவது உறுதி என்பதை உணர்ந்திருந்த பிரபாகரன், சர்வதேச அளவில் நிதி திரட்டல் மற்றும் பிரசார நடவடிக்கைகளின் தேவை கருதியே கிட்டுவை வெளி

வெளிவரத் தொடங்கின.

கிட்டு இராணுவரீதியான செயற்பாடுகளில் மட்டுமன்றி, பத்திரிகைத் துறை விடயங்களிலும் திறமையானவர்தான்.

தமிழ்நாட்டில் சிறையில் இருந்த போது 'தேவி' வார இதழில் கிட்டு தொடர்ச்சியாக தன் அனுபவங்களை எழுதி வந்தார்.

பிரஞ்சு, டொச்சு, டேனிஷ், நோர்வேஜியன் ஆகிய மொழிகளிலும் சஞ்சிகைகள் வெளியாகின.

ஓவியக் கண்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் போன்றவற்றையும் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகள் மூலமாக நடத்தினார். கருத்தரங்குகளில் உரையாற்றினார்.

## கிட்டுவின் இலண்டன் பயணம்

கோஷ்டி எல்லாத்தையும் என்னட்டை இருந்து பிரிச்சுப் போட்டாங்கள் மச்சான்" என்று கூறுவார்.

கிட்டண்ணை சர்வதேச தொடர்பாளராக நாட்டைவிட்டு புறப்படுவது என்பது முடிவு செய்யப்பட்டுவிட்டது.

எந்த வேலையாக இருந்தாலும் பொறுப்பேற்க வேண்டும் என்று அவரது வழமையான நடைமுறைக்கு சோதனையாக வந்தது இம் முடிவு.

நான் அப்போது யாழ் மாவட்ட நிர்வாகத்தை பானுவிடம் ஒப்படைப்பதற்காக யாழ்ப்பாணம் புறப்பட இருந்தேன். எம்மிடையே நீண்ட பிரிவு வரப்போகிறது என்பது தெரிகிறது.

சிறிய வட்டக் கொட்டிலில் வைத்து கதைக்கத் தொடங்கினார். இயக்கத்தில் ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி, தலைவரின் எண்ணங்களுக்கு நாம் எப்படி செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்பது பற்றி, கூறினார். "எமது போராட்டத்திற்காக என்ன வேலை ஒப்படைக்கப்பட்டாலும் அதில் தீவிரமாக ஈடுபட வேண்டும். எமது கடமையை மேலும் சிறப்பாகச் செய்ய

நாட்டுக்கு அனுப்ப முடிவு செய்திருந்தார்.

கிட்டு பிரிட்டனுக்கு சென்ற பின்னர் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளது செயற்பாடுகள் புதியவேகம் பெறத்தொடங்கின.

அதே சமயம் இலண்டனில் இருந்த கிட்டுவுடன் நட்பு வைத்திருக்க 'றோ' உளவுப் பிரிவும் விரும்பியது.

புலிகளுடன் போர் நடந்தாலும், புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடிய, தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு உறவை வைத்திருக்கவே 'றோ' விரும்பியது.

கிட்டுவும் 'றோ'வுடன் தந்திரோபாய உறவை வைத்திருந்தார். அத் தகவலை தலைமைப் பீடத்திற்கும் அவ்வப்போது தெரிவித்தார்.

கிட்டு இலண்டன் சென்றபின்னர் அங்கிருந்து மாதம் இருமுறையாக 'களத்தில்' என்னும் பத்திரிகை வெளிவரத் தொடங்கியது.

ஃபிரான்சில் இருந்து 'எரிமலை' என்னும் சஞ்சிகை வெளிவந்தது. கனடாவில் இருந்து மாதம் இருமுறை வெளியாகும் 'உலகத் தமிழர்'. நோர்வேயில் இருந்து வருடத்திற்கு மூன்றுமுறை வெளியாகும் 'சுதந்திர தாகம்' என்னும் சஞ்சிகையும் புதிய மெருகுடன்

இயக்கங்களில் இருப்பவர்களுக்கு ஆயுதங்களைத் தூக்குவதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாது. அரசியல் கதைக்க மெத்தப் படித்த மேதாவிகள்தான் இலாய்க்கு என்று சிலர் கருதுவதுண்டு,


சில இயக்கங்களின் தலைவர்கள்கூட தங்கள் உறுப்பினர்கள் எடுபிடி வேலைக்கும், ஆயுதம் தூக்கிக் கொண்டு நிற்கவுமே இலாய்க்கு என்று கருதி, இயக்கங்களுக்கு அப்பாற்பட்ட ஆட்களை அந்த உறுப்பினர்களின் தோளில் ஏறி சவாரி செய்ய அனுமதித்ததும் உண்டு.

ஆனால், புலிகள் இயக்கத்தில் எந்த வேலையையும் எவரும் செய்யக்கூடிய நிலைக்கு தம் உறுப்பினர்களை பயிற்றுவிக்கும் முறை இருக்கிறது. அதனால் தான் உறுப்பினர்களும் தலைமைக்கு விசுவாசமாக இருக்கிறார்கள்.

கிட்டு ஒன்றும் படித்த மேதாவியல்ல. ஆனால், வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரை சந்தித்து கிட்டு மேற்கொண்ட பிரசாரங்களுக்கும் சுறுசுறுப்புக்கும் நிகராக வேறெந்த மேதாவிகளும் ஈடுகொடுக்கவும் முடியாது.

(தொடர்ந்து வரும்)





## கிளிநொச்சி சமர்

கிளிநொச்சி சமரின் பின்னர் புலிகளின் அணிகள் கிளிநொச்சி நகரில் நிலைகொண்ட காப்பரண்கள். படையினரால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலிகளுடன் கூடிய காவலரண் பகுதிகளிலும் புலிகளின் அணிகள் காணப்படுகின்றன. கிளிநொச்சி சமர் தளபதி ஜெயம் தலைமையில் மேற்கொள்ளப்பட்டதாக புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது- இராஜதந்திரி

# புதிய பேரினவாதத்தின் புத்திசாலித்தனம்!





இன்றைய ஆட்சியாளர்கள் பேச்சில் வல்லவர்களாக உள்ளனர். செயற்பாடுகள் மட்டும் அப் பேச்சுக்களுக்கு முற்றிலும் மாறானதாக அமைந்து வருகின்றன.

ஐ.தே.கட்சியின் ஒத்துழைப்புடன் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண மிகுந்த அக்கறை காட்டுவதாக ஆட்சியாளர்கள் அடிக்கடி கூறி வருகின்றனர்.

அதே சமயம், ஐ.தே.கட்சிக்கு எதிரான அரசியல் யுத்தம் ஒன்றையும் ஆட்சியாளர்கள் மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுஜன முன்னணிக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் நடைபெற்றுவரும் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான அரசியல் போட்டி நாகரீக வரம்புகளைக் கடந்து அநாகரிகமானதாக மாறியுள்ளது.

**முன்னர் ஆட்சியில் இருந்தபோது ஐ.தே.கட்சியினர் எவ்வாறு நடந்து கொண்டனரோ. அதே விதமாக இப்போது அவர்களை நடத்துவதற்கு பொதுஜன முன்னணியினர் முனைப்புக் காட்டி வருகின்றனர்.**

ஐ.தே.கட்சியின் கூட்டங்களை குழப்புதல், அக் கட்சியின் சிரேஷ்ட தலைவரான விஜயபால மெண்டிசின் குடியுரிமையை பறிக்க எத்தனித்தல், தமது கட்டுப்பாட்டில் உள்ள பிரசார சாதனங்களின் ஊடாக அக் கட்சிமீது சேற்றைவாரியிறைத்தல் என்பவற்றை இன்றைய ஆட்சியாளர்கள் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றனர்.

தாம் எதிர்க்கட்சியாக இருந்தபோது, எதிர்க்கட்சியின் கருத்துக்களையும், அரசியல் செயற்பாடுகளையும் ஆளும்கட்சி எவ்வாறெல்லாம் மதிக்க வேண்டும் என்பதைப் பற்றி பொதுஜன முன்னணியினர் எடுத்துக்கூறிவந்தனர்.

**அதே பொதுஜன முன்னணியினர் இன்று பதவியில் இருக்கும் நிலையில், தாம் முன்னர் கூறிய விதமான அணுகுமுறைகளை பின்பற்றி முன்னுதாரணமாக நடந்து காட்ட முடியும்.**

ஆனால், எதிர்க்கட்சியை நசுக்கும் ஐ.தே.கட்சியின் முன்னைய வழிமுறைகளை அடியொற்றி நடப்பவர்களாக பொதுஜன முன்னணியில் மாறி நிற்கின்றனர்.

பிரேமதாசா தனது அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்கு அடிதடி வன்முறைகளை ஆயுதமாகக் கொண்டிருந்தார். அதற்காக என்று தனியாக குண்டர் படையும் வைத்திருந்தார். சொத்தி உபாலி போன்றோர் அந்தப் படைகளின் தளபதிகளாக இருந்தனர்.

பிரேமதாசாவை காரசாரமாக விமர்சித்த பொதுஜன முன்னணியினரும், பிரேமதாசாவின் அதிரடி அரசியல் வன்முறைப் பாணிமீது மறைமுகமான காதல் கொண்டோராகவே விளங்கி வருகின்றனர்.

**அன்று ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சியும் சரி, இன்று ஆட்சியிலிருக்கும் பொதுஜன முன்னணியினரும் சரி எதிர்க்கட்சியை எதிரிக்கட்சியாக நினைத்தே தம் அணுகுமுறைகளை மேற்கொள்கின்றன.**

தற்போதும் அத்தகைய அணுகுமுறையில் சிறிதளவு மாற்றத்தைக்கூட காணமுடியாதுள்ளது. இவ்வாறான நிலையில் இரு தரப்பும் பொதுப் பிரச்சனையைத் தீர்க்க ஒத்துழைப்பது நடக்கக்கூடிய காரியமல்ல.

**வெளிச்சக்தி ஒன்றின் நிர்ப்பந்தம் இன்றி ஆளும் தரப்பும், எதிர்த்தரப்பும் நியாயமான தீர்வொன்றுக்காக முன்வரப்போவதில்லை என்பதே திட்டவட்டமான உண்மையாகும்.**

அது மட்டுமல்லாமல் அரைகுறைத் தீர்வுகளுக்கு மேலாக சிந்திக்கவே முன்வராத இரு தரப்பும் இணக்கம் கண்டுவிட்டால், தமிழ் பேசும் தரப்பே பாரிய பின்னடைவை சந்திக்க நேரும்.

இன்னொரு விடயத்தையும் கவனித்தாக வேண்டும். ஐ.தே.கட்சி முன்வைத்துள்ள மாற்று யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு கொண்டு செல்ல நீதியமைச்சர் பீரிஸ் விரும்பவில்லை.

வெளியே வைத்து விவாதிக்கலாம் என்று விரும்புகிறார். தனது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக பாராளுமன்றத்தில் உள்ள தமிழ்க் கட்சிகளது ஆதரவைப் பெறவும் முயன்றுள்ளார்.

ஐ.தே.கட்சியின் யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கொண்டு செல்ல ஆளும்தரப்பு தயங்குவதற்கு கூறப்படும் காரணம் உண்மையானதாகத் தெரியவில்லை.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவில்

விவாதிப்பது காலத்தை இழுத்தடிக்கும் முயற்சி என்றும், அதனால்தான் வெளியே வைத்து ஆராய விரும்புவதாகவும், நீதியமைச்சர் கூறியிருக்கிறார்.

**உள்ளே வைத்து விவாதித்தால் என்ன, வெளியே வைத்து விவாதித்தால் என்ன, அதற்கென்று ஒரு கால அவகாசம் நிச்சயம் தேவைப்படும்.**

எதிர்க்கட்சியின் யோசனை தேவையில்லை, நாம் சாதித்துக் காட்டுகிறோம் என்று ஆட்சியாளர்கள் இறங்கினால் மட்டும்தான் இழுத்தடிப்பை இல்லாதொழிக்கலாம்.

**ஐ.தே.கட்சியின் யோசனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், அதனால் அக் கட்சிக்கு செல்வாக்கு வளர்ந்துவிடுமோ என்ற தயக்கம் காரணமாகவே, அக் கட்சியின்**

**யோசனைகளை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு கொண்டு செல்ல ஆட்சியாளர்கள் விரும்பவில்லை.**

காலத்தை இழுத்தடிப்பதிலும், ஒருவர்மீது ஒருவர் குற்றம் சொல்லி கால இழுத்தடிப்புக்கு பழி போடுவதிலும் இரு தரப்புமே சளைத்ததில்லை. எனவே பாராளுமன்ற தெரிவுக் குழுவில் ஐ.தே.கட்சியின் யோசனையை ஆராய்ந்தால் காலம் விரயமாகும் என்று ஆளும்தரப்பு கூறுவது உண்மையானதாக அமையவில்லை.

கால விரயத்தை விரும்பவில்லை என்றால், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எதிர்க்கட்சியிடம் யோசனை கேட்டு ஆட்சியாளர்கள் காலத்தை இழுத்தடித்தது ஏன் என்ற கேள்விக்கு பதில் கூறியாக வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஐ.தே.கட்சி தனது முழு யோசனையையும் முன்வைக்க முன்னரே, அக் கட்சியின் யோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது எப்படி என்று ஆளும் தரப்பு ஆராயத் தொடங்கிவிட்டது.

ஐ.தே.கட்சி தனது முழுமையான

யோசனைகளை முன்வைக்க முன்பாகவே அக்கட்சியின் யோசனைகளை பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராய விரும்பவில்லை என்று நீதியமைச்சர் பத்திரிகைகளுக்கும் கூறிவிட்டார்.

எனவே, அக் கட்சியின் யோசனைகளது தரம், கனம் பார்த்து ஆளும் தரப்பு செய்த முடிவல்ல என்பது புலனாகின்றது.

**ஆக, தங்கள் சாதனைகள் என்று உரிமை கோரத்தக்க நிலைப்பாடுகளுக்கு மறுதரப்பின் ஆதரவைப் பெறுவதுதான் ஆளும் தரப்பின் தந்திரமாகும். அதுதான் எதிர்க்கட்சியின் தந்திரமுமாக இருக்கிறது.**

இத்தந்திரமே இலங்கை சுதந்திரமடைந்த நாள் தொட்டு மாறாது தொடருகின்றன. இருதரப்பும் தாமாக மாற்றிக் கொள்ளவும்

விரும்பாத தந்திரமே அதுவாகும்.

இனப்பிரச்சனையில் நியாயமான தீர்வைக் காண விரும்புவதாக இரு தரப்புகளும் கூறுவதெல்லாம், இன்றைய கால கட்டத்திற்கு ஏற்ப பேரினவாதம் மிகப் புத்திசாலித்தனமாக தன் முகத்தை மாற்றிக் கொண்டுள்ளதன் வெளிப்பாடுகளேயாகும்.

**'தமிழ் பேசும் மக்களை கடலில் தள்ள வேண்டும். இந்த நாடு சிங்கள பௌத்த மக்களுக்குரிய நாடு' என்று பட்டவர்த்தனமாக பேசியது ஒரு காலம். அது முட்டாள் தனமான பேரினவாதம்.**

அதனால்தான் உலக ஆதரவையும், அனுதாபத்தையும் அதனால்பெற முடியவில்லை.

தமிழ் பேசும் கட்சிகளையும்

முட்டாள்தனமான பேரினவாதம் பகிரங்கமாக பகைத்துக் கொண்டது. 'போர் என்றால் போர்' என்று கொக்கரித்தது. வெளிநாட்டு இராஜதந்திரிகளைப் பார்த்து 'உனது வேலையை நீ பார்' என்று திமிரோடு எடுத்தெறிந்து பேசியுமிருந்தது.

அக் கால கட்டத்தில் ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே தமிழர் உரிமைகளை பறிப்பது யார் என்பதில் பகிரங்கமாகவே போட்டி நிலவியது.

**ஆனால், இன்றுள்ள பேரினவாதம் மிகவும் புத்திசாலித்தனமாக காட்சியளிக்கிறது. இனவாத முழக்கங்களோ, தமிழ்மக்களை நோக்கிய வெறுப்பான பார்வைகளோ அதனிடம் காணப்படவில்லை. புன்னகைத்தபடியும், தர்மத்தைப் பற்றி போதித்தபடியும் கட்டியணைத்து முதுகில் குத்துவதுதான் புதிய பேரினவாதத்தின் பிரதான குணாம்சமாகும்.**

ஆளும்தரப்பு, எதிர்த்தரப்பு இரண்டுமே புதிய பேரினவாதத்தை பிரதிபலிக்கத் தவறவில்லை. அதனால்தான் இரு தரப்புமே இனப்பிரச்சனைத் தீர்வுக்கு தாம் தயாராக இருப்பதாக காட்டிக் கொள்ள முற்படுகின்றன.

இரு தரப்புமே தமிழ்க் கட்சிகளையும் தங்கள் நிலைப்பாடுகளுக்கு ஆதரவானவையாகக் காட்டுவதற்கு பகீரத பிரயத்தனம் செய்து வருகின்றன.

**விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ அழுத்தங்களும், வளர்ச்சியுமே பேரினவாதத்தைப் புதிய அவதாரம் எடுக்க வைத்திருக்கிறது.**

தமது பழைய முகத்தோடும், இனவாத முழக்கங்களோடும், போரா சமாதானமா? என்ற சவாலோடும் இனிமேல் செயற்பட்டால், விடுதலைப் புலிகளுக்கு உலக அனுதாபமும் உயர்ந்துவிடும். அதன் காரணமாக பாரிய விளைவுகளை தாம் எதிர்நோக்க வேண்டி ஏற்படும், நாடே பிரிந்து விடவும்கூடும் என்ற அச்சமும் பிரதான காரணமாகும்.

விடுதலைப் புலிகள் தொடுத்துவரும் தாக்குதல்கள் காரணமாக இனப்பிரச்சனையே இங்கில்லை என்ற கூற்றும் இனிமேல் எடுபடமாட்டாது

## ஒரு எச்சரிக்கை ரிப்போர்ட்

என்பதை இன்றைய ஆளும் தரப்பும், எதிர்த் தரப்பும் நன்குணர்ந்துள்ளன.

இன்றைய ஆளும் தரப்புக்கும், நாளை ஆளும் தரப்பாக மாறும் கனவுகளோடு இருக்கின்ற எதிர்க் கட்சிக்கும் உலக அனுதாபம், ஆதரவு என்பவை பிரதான தேவைகளாக உள்ளன.

அவை இல்லாவிட்டால், விடுதலைப் புலிகளின் இராணுவ ஆற்றல் முன்பாக தாக்குப் பிடிப்பதோ, வடக்கு-கிழக்கில் தமது பிடியை தக்கவைப்பதோ சாத்தியமில்லை என்பதை அவை உணர்ந்தேயுள்ளன.

**அதனால்தான், முகத்தில் புன்னகையுடன் பேச்சில் இனிமையுடன், இனப்பிரச்சனைத் தீர்வு பற்றிய உரத்த கூச்சல்கள், தீர்வு யோசனைகள் என்ற புதிய உத்திகளுடன் இன்றைய பேரினவாதம் தனது ஒவ்வொரு அடியையும் புத்திசாலித்தனமாக எடுத்துவைக்கிறது.**

எனினும், தமது சொந்த அரசியல் அதிகார ஆசைகள் காரணமாக புதிய பேரினவாதத்தின் பிரதிநிதிகளான ஆளும் தரப்பும், எதிர்க்கட்சியும் தமக்குள் ஒன்றுபட முடியாதவையாகவும் உள்ளன.

அதனால்தான் தமிழ்பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளை கணக்கில் எடுக்காது உருவாக்கப்பட்ட அரசின் தீர்வுப் பொதியைக்கூட எதிர்க்கட்சியால் ஆதரிக்க முடியாதுள்ளது.

அரசின் தீர்வுப் பொதியில் தமிழ்பேசும் மக்களுக்கு பெரிதாக எதுவும் கிடைக்கப்போவதில்லை, தமிழ் பேசும் மக்களை ஏமாற்றும் பொதிதான் அது என்பது ஐ.தே.கட்சிக்கு தெரியாத

விடயமல்ல.

எனவே, அப்பொதியை எதிர்க்கட்சி ஆதரிக்காமல் இருப்பது தமிழ் பேசும் மக்களுக்கு அதிகமாக ஏதோ கிடைக்கப்போகிறது என்ற அச்சத்தினால் அல்ல என்பதை நாம் உணர்ந்தாக வேண்டும்.

எதிர்க்கட்சியும், அதனால் தூண்டிவிடப்படும் பௌத்த மதகுருமார் சிலரும், சிங்கள ஆணைக்குழு போன்றவையும் எதிர்ப்பதால், அரசின் தீர்வுப் பொதி சிறந்தது என்று ஒருபோதும் கருதிவிடலாகாது.

புதிய பேரினவாதத்தின் இரண்டு தலைமைச் சக்திகளான பொதுஜன முன்னணிக்கும், ஐ.தே.கட்சிக்கும் இடையேயான அதிகாரப் போட்டியின் காரணமான முரண்பாடுகளே அவையாகும். இரு கட்சிகளில் ஒரு கட்சி முன்வைக்கும் எந்தவொரு திட்டத்தையும் மறு கட்சி ஏற்காமல் இருப்பது அவற்றின் சொந்த அரசியல் நோக்கங்கள் சார்ந்த, போட்டிகள் காரணமான நிலைப்பாடுகளாகும்.

எனவே, பழைய பேரினவாதத்தைவிட புதிய பேரினவாதமே மிக அபாயகரமானதாகும். தடம் புரண்டு சமரசப் பாதையில் செல்லும் தமிழ்க் கட்சிகளும் புதிய பேரினவாதத்தால் நன்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் பகிரங்க அரசியல் களத்தில் புதிய பேரினவாதத்தை எதிர்கொள்ளும் வல்லமையை தமிழ் பேசும் தரப்பு இழந்துள்ளது.

**மிகப் புத்திசாலித்தனமாக, தமிழ் பேசும் தரப்பை வெற்றிகொள்ளும் திசையில் புதிய பேரினவாதம் முன்னேறிக் கொண்டிருக்கிறது.**

இந்நிலையில் அதனை எதிர்கொள்ள வேண்டுமானால், அதன் பலவீனமான இடம் அறிந்து தமிழ் பேசும் தரப்பு தாக்க வேண்டும்.

ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு முரண்பாடுதான் புதிய பேரினவாதத்திற்குள் உள்ள பலவீனமான பகுதியாகும். இருதரப்பின் பூசல்களும் தொடர்வதுதான் அப் பலவீனம் பெரிதாக இடமளிக்கும்.

**இல்லையெனில், இரு தரப்பும் இணைந்து நின்று, அரை குறைத் தீர்வொன்றை தமிழ் பேசும் தரப்பு ஏற்கும் நிர்ப்பந்தத்தை உலக ஆசிர்வாதத்துடன் செய்து முடித்துவிடலாம்.**

எனவே, இருதரப்புக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்த முனைவது புதிய பேரினவாதம் மேலும் பலமடைய துணைபோவதாகவே அமையும்.

இந்த அபாயத்தை உணராமல் வீடுகொளுத்தும் ராசாவுக்கு கொள்ளிக்கட்டை எடுத்து கொடுக்கும் காரியத்தை செய்கின்றன சில தமிழ்க்கட்சிகள்.

இருதரப்புமே நியாயமான தீர்வை எமக்குத் தரவில்லை என்று உலகின் முன்பாக கூறுவதற்கு பதிலாக, இரு தரப்பில் ஒருதரப்புக்கு சட்டத்தரணி வேலை செய்வது தமிழ்க் கட்சிகள் தமிழ்பேசும் மக்களுக்கு செய்யும் மிகப் பாரிய துரோகமாகும்.

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

**நக்கீரன்**

யாழ்ப்பாணத்திற்கு அமெரிக்கப் பிரதிநிதி திக்விஜயம் மேற்கொண்டார். இடிந்து போன யாழ்ப்பாணத்தை கட்டியெழுப்ப நோட்டம் பார்க்க சென்றதாக அவரது விஜயத்துக்கு சாயம் பூசப்பட்டது.

பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுவிப்பது என்பது இதுதான்.

அரச படைகளுக்கு பயிற்சி, ஆயுதம் பெற உதவி. தன் கூட்டாளி நாடான இஸ்ரேல் ஊடாக குண்டுபோடும் விமானங்கள் விநியோகம் என்று இங்கு போர் சூடுபிடிக்கத் தேவையான சகல ஒத்தாசைகளையும் செய்வது அமெரிக்காதான்.

தனது அபாரமான ஒத்தாசையோடு அரச படைகளால் கைப்பற்றப்பட்ட யாழ் குடாநாட்டின் நிலவரத்தை கண்டு களிக்கத் தான் அமெரிக்க பிரதிநிதி விஜயம் செய்தார்.

இலங்கை அரசுக்கு உதவுவது இங்குள்ள தமிழ் மக்களுக்கு தம்மீது வெறுப்பை ஏற்படுத்தியிருப்பதை அமெரிக்கா அறிந்திருக்கலாம்.

அதனால்தான் யாழ்ப்பாணதிற்காக கொஞ்சம் வெள்ளிக்காசுகளை வீசியெறிய நினைக்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவின் இந்த விஷமம் புதியதல்ல. வியட்நாமில் நாசகார குண்டுகளை போட்ட அமெரிக்கா, அந்த மக்களை முட்டாள்களாக எண்ணி விளையாட்டுப் பொம்மைகளையும் விமானங்களில் இருந்து போட்டது.

அடடே... எங்கள் குழந்தைகள்மீது என்னவொரு பரிவு, அக்கறை என்று புல்லரித்து நிற்கவில்லை வியட்நாம் மக்கள். ஒரு கையால் குடியழிக்கும் குண்டுகளைப் போட்டபடி, மறுகையால் குடிமக்களை ஏய்க்கும் பொம்மைகளை வீசிய பம்மாத்தை புரிந்துகொண்டனர்.

பொம்மைகளை தூக்கி நெருப்பிலே வீசியெறிந்தனர். அந்த விழிப்புணர்வும் தன்மான உணர்ச்சியும் இருந்ததால்தான் இறுதியாக அமெரிக்காவையே தம் மண்ணிலிருந்து தூக்கி எறிந்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு சென்ற அமெரிக்கப் பிரதிநிதியை அங்குள்ள தமிழ்க்கட்சிகள் (ரெலோ தவிர) விழுந்தடித்து சந்தித்தன.

அதுகூட சுதந்திரமான சந்திப்பல்ல. யாழ் படையினர்தான் சந்திப்புக்கான ஒழுங்குகளை செய்திருந்தனர்.

'அமெரிக்க பிரதிநிதி வந்திருக்கிறார். உடன் வந்து சந்திக்கவும்' என்று தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளும் படைத்தரப்பிடம் இருந்து பறந்தது உத்தரவு.

ஏன் வந்திருக்கிறார்? எதற்கு வந்திருக்கிறார்? ஏன் படையினர் ஊடாக சந்திப்பு ஏற்பாடு நடக்க வேண்டும்? விருப்பம் எனில் நேரடியாக தொடர்பு கொண்டிருக்கலாமே? தொடர்புகொள்ள தொலைபேசி வசதிகள்கூட உண்டே? ஏன் படை முகாமில் சந்திக்க வேண்டும்? என்று பல்வேறு நியாயமான கேள்விகள் எழுந்திருக்க வேண்டும். ஆனால் எழவில்லை.

தர்மவான் வந்திருக்கும் செய்திகேட்டு பிச்சைப் பாத்திரத்துடன் விழுந்தடித்து ஓடுவதுபோல் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள் ஓடினார்கள்.

சந்திப்பின்போது யாழ்ப்பாண படை அதிகாரி ஒருவரும் சமுகமளித்திருந்தார்.

### படைமுகாமில் அடக்கமான சந்திப்பு



ஆகவே படையினர் தொடர்பாகவும் பாராட்டிக் கூற வேண்டிய கட்டாயம் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டது.

அபிவிருத்திக்கு உதவப் போவதாக அமெரிக்க பிரதிநிதி கூறினாராம். "உங்களைப் போன்ற நாடுகள் உதவினால்தான் யாழ்ப்பாணம் செழிக்கும்" என்று தமிழ்க் கட்சிப் பிரமுகர் ஒருவர் ஐஸ் வைத்தாராம்.

"இலங்கை இனப்பிரச்சனையில் மத்தியஸ்தம் வகிக்க விரும்பவில்லை." என்று அமெரிக்க பிரதிநிதி கூறினாராம். அவர் சொன்னதை யெல்லாம் வாய்மூடிக் கேட்டனர்.

தமிழ்க் கட்சிகளின் யாராவது ஒரு பிரதிநிதிகூட "இலங்கை அரசுக்கு பயிற்சி கொடுக்கிறீர்கள். பின்பலம் கொடுக்கிறீர்கள். இது மட்டும் தலையீடு இல்லையா?" என்று கேட்கத் துணியவில்லை.

புலிகளை பயங்கரவாதிகள் என்று பிரகடனம் செய்தீர்கள். அது கிடக்கட்டும். ஐயன்மீர்! அரச படைகள் குடிமனைகள், தேவாலயங்களில் குண்டுகள் போடும்போது ஏன் நீவீர் குரல் கொடுப்பதில்லை?' என்றாவது ஒரு பிரதிநிதி அல்லது பிரகிருதியாவது கேட்டார்களா?

தமிழ் மக்களின் மனங்களில் அமெரிக்காவின் நிலைப்பாடுகள் தொடர்பாக இன்று எழுந்துள்ள நியாயமான கேள்விகளை ஒரு பிரதிநிதிகூட பிரதிபலிக்கவில்லையே?

இலங்கைப் படைமுகாமில், படை அதிகாரி முன்பாக, படையினருக்கு பயிற்சி கொடுக்கும் நாடான அமெரிக்காவின் பிரதிநிதியை சந்தித்துவிட்டு, யாழ்ப்பாணத்தை புனரமைக்க வந்த புண்ணியவான் என்று மக்களை நம்பவைக்கும் விதமாக, சந்திப்புப் பற்றிச் செய்திகள் கொடுத்த தமிழ்க் கட்சிகளை நினைத்தால்... உங்களுக்கு என்ன வருகிறது?

☆ ☆ ☆

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு யோசனை கொடுத்திருப்பதாக தொண்டமான் கூறியிருக்கிறார்.

யோசனைகள் கொடுப்பது தொண்டமானுக்குப் புதுமையான விடயமல்ல. அவரது யோசனைகளை யாரும் கவனிப்பதேயில்லை என்பதும் புதியதல்ல.

"தொண்டா முதலில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளட்டும். பின்னர் வடக்கு-கிழக்கு பிரச்சனைக்கு தாவலாம்" என்று தமிழ்க் கட்சி பிரமுகர் ஒருவர் கூறியது ஓரளவு சரிதான்.

இனப்பிரச்சனைத் தீர்வு விடயத்திலும் இ.தொ.கா.வுக்கு இரண்டு முகங்கள்.

தொண்டா புலிகளை ஆதரித்து பேசிக் கொண்டிருப்பார். போரை நடத்த திடசங்கற்பம் பூண்டுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் வாய் திறக்க மாட்டார்.

மறுபுறம் முன்னாள் அமைச்சரும், இ.தொ.கா. முக்கியஸ்தர்களில் ஒருவருமான தேவராஜ் நீதியமைச்சர் பீரிசுக்கு மிக வேண்டப்பட்டவராக மாறியிருக்கிறார்.

அரை குறையான தீர்வுப் பொதியை தமிழ் பேசும் மக்களின் தலையில் கட்டியடிக்கும் அரசின் முயற்சிகளுக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளைத் தோள் கொடுக்க வைப்பதில் நீலனும், தேவராஜும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் போல செயற்படுகிறார்கள்.

புலிகளைத் தொண்டா போற்றுகிறார். தேவராஜ் புலிகளை ஓரம் கட்டும்வரை அரங்கேற்றப்படும் பொதி நாடகத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கிறார்.

கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகளை தன்னால் கையாளமுடியாது என்பதால், தேவராஜின் உதவியை நாடியிருக்கிறார் நீலன். இரண்டு பேரும் பொதி வியாபாரத்திற்கு நல்ல புரோக்கர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான் தேவி

46

தருவது ரசிகன்

கடந்த வாரம்

பூலான் தேவி
பொலிசில் சரணடைய
முன்வருகிறாள்.
பொலிஸ் அதிகாரி சதுர்வேதி
அதற்கான ஏற்பாடுகளை
செய்கிறார்.
1983 பெப்ரவரி 10ம் திகதி
பூலான் சரணடைவதற்கான
நாளாக அறிவிக்கப்படுகிறது.

இனி...

பூலான் தேவி சரணடையப் போகிறாள் என்ற தகவலை அரசல் புரசலாக அறிந்தன சில பத்திரிகைகள்.

'கொள்ளை ராணி கூண்டுக் கிளியாகப் போகிறாள்!' என்று பத்திரிகை ஒன்று கேலியாகக் குறிப்பிட்டிருந்தது.

பூலான் தேவியை தங்கள் காவல் தெய்வம் என்று பல்லாயிரக் கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் கொண்டாடினார்கள்.

தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் கிராமங்களில் நடைபெறும் கொண்டாட்டங்கள், திருவிழாக்கள் போன்றவற்றில் பூலானின் உருவத்தை களிமண்ணால் செய்து வைத்திருப்பர். கையில் துப்பாக்கியுடன் காட்சிதரும் அச் சிலை ஒன்றின் விலை பதினாறு ரூபா.

கடவுள் சிலைகள், காந்தி, நேரு போன்ற தலைவர்களின் சிலைகளுடன், தனது சிலைகளும் சரிசமமாக வைத்து விற்பனை செய்யப்படுவதை பூலானே நேரில் கண்டுமிருக்கிறாள்.

சம்பல் பள்ளத்தாக்கு மக்கள் காளியைத்தான் வழிபடுவார்கள். காளியின் மறு அவதாரமாக பூலானை வழிபடத் தொடங்கினர்.

பூலான் சரணடைவதை பத்திரிகைகள் கேலி செய்ததைப் பற்றி அறிந்த பூலான் கொதித்துப்போய் கெட்ட வார்த்தைகளால் பத்திரிகைகளைத் திட்டித் தீர்த்தாள்.

தன்னை கடவுளாக கருதும் மக்கள் பயந்தாங்கொள்ளியாக நினைத்துவிடுவார்களோ என்றும் குழம்பிப் போனாள்.

தான் செய்த முடிவு தவறானதோ என்று பூலான் கலங்கி நின்றாள். அவளுக்கு மான் சிங்கின் மீதும் இப்போது வெறுப்பு ஏற்பட்டது. பொலிஸ் அதிகாரி சதுர்வேதியை நினைக்க ஆத்திரமாக இருந்தது.

எல்லோருமாகச் சேர்ந்து தன்னைத் தவறான முடிவுக்கு இழுத்துச் சென்றுவிட்டார்களே என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

சரணடையும் நாளாக ஒப்புக்கொண்ட திகதி நெருங்க நெருங்க பூலான் நிலை கொள்ளாமல் தவித்தாள். சரியாகச் சாப்பிடவில்லை. எடுத்து வைத்த உணவை வெளியே கொட்டினாள். மூன்று நாள் கொலைப் பட்டினி.

சரணடையும் நாளுக்கு முன்தினம் பூலானுக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. மான் சிங் அவளை தொட்டுப்பார்த்த போது எரிந்து விழுந்தாள். சாப்பாட்டு பாத்திரத்தை தூக்கி எறிந்தாள்.

மான் சிங் பயந்துபோனான். "நெருப்பாக கொதிக்கிறதே!" என்றான்.

"உடம்பு மட்டுமா கொதிக்கிறது? மனமும்தான் கொதிக்கிறது. நாய்ப்பிறவிகள் பொலிஸ் நாய்களுக்கு ஏன்தான் பயந்து சாகிறீர்களோ?" கத்தினாள். குரல் பலவீனமாக இருந்தது.

கிராம வைத்தியரை அழைத்து வந்தார்கள். மான் சிங் சதுர்வேதிக்கு தகவல் அனுப்பினான். "பத்தாம் திகதி சரணடையும் அளவுக்கு பூலானின் உடல்நிலை ஒத்துழைக்காது!"

பன்னிரண்டாம் திகதிக்கு மாற்றினார் சதுர்வேதி. அதற்கிடையே 'பூலானை எப்படி அழைத்து வருவது, எங்கு முதலில் தங்கவைப்பது' போன்ற ஏற்பாடுகள் துரித வேகத்தில் நடந்தன.

பிரதமர் இந்திராவின் சம்மதமும் இருந்தமையால் சதுர்வேதிக்கு சில முடிவுகளை சுதந்திரமாக எடுக்கக் கூடியதாக இருந்தது.

இரண்டு பஸ்சுகளில் பூலான் குழுவினரை பாதுகாப்பாக அழைத்து வரவேண்டும். 'இங்குயி' என்ற சிறு நகரத்தில் நீர்பாசன இலாகாவுக்குச் சொந்தமான விடுதி ஒன்று இருந்தது. அந்த விடுதியில் தங்கவைத்துவிட்டு அடுத்த கட்ட ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று சதுர்வேதி முடிவெடுத்தார்.

அடிக்கடி தன்முடிவுகளை மாற்றக்கூடியவள் பூலான் என்பதை சதுர்வேதி கணித்திருந்தார். அதனால் பூலானின் மனம் மாறுவதற்கு இடையில் சரணடையும் ஏற்பாடுகளை செய்து முடிக்கப் பரபரத்தார்.

பன்னிரண்டாம் திகதி காலையில் பூலானிடம் சதுர்வேதி செல்லும்போது, பூலான் ஓரளவு குணமடைந்திருந்தாள்.

சதுர்வேதியைக் கண்டதும்: "வாரும் ஐயா, உமது மனதில் என்னதான் நினைத்துக்கொண்டிருக்கிறீர்? நான் சொன்ன நிபந்தனையெல்லாம் என்னாச்சு?" என்றாள் குரலை உயர்த்தி.

சதுர்வேதி அவள் அப்படிக் கேட்பாள் என்று எதிர்பார்த்தார். அவளை ஆச்சரியப்படுத்தும் விதமாக பல காரியங்களைச் செய்திருந்தார்.

பூலானின் குடும்பத்தினரை பத்திரமாக மத்திய பிரதேசத்திற்கு அழைத்து வந்துவிட்டார். பூலானின் நிபந்தனைகளை மாநில அரசும், மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளவும் வைத்திருந்தார்.

அனைத்தையும் கேட்ட பூலானுக்கு அவர்மீது அனுதாபம் ஏற்பட்டுவிட்டது. தன்னை நம்பி இத்தனை ஏற்பாடுகளைச் செய்துள்ள இந்த நல்ல மனிதரை ஏமாற்றக்கூடாது என்ற முடிவுக்கு வந்தாள்.

பஸ்கள் வந்தன. பூலான் குழுவினர் பஸ்களில் ஏறினர். தன் துப்பாக்கியுடன் தான் பூலான் சென்றாள்.

இங்குயி கிராமத்திற்கு பூலான் சென்றபோது, அவளும் குழுவினரும் தங்க வசதியாக விடுதியில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பூலானுக்கு தனியறை தரப்பட்டது. அந்த விடுதியையும் அறையையும் பார்த்ததும் பூலானுக்கு புதிய உலகம், ஒன்றுக்குள் புகுந்துவிட்டது போலிருந்தது.

தன் அறையில் இருந்த மெத்தென்ற கட்டில்களும் குஷன் இருக்கைகளும் பூலானுக்கு புதுமையாக இருந்தன.

காட்டு வாழ்க்கையின் கரடு முரடான தன்மைக்குப் பழகிப்போன பூலானுக்கு, பஞ்சு மெத்தையும், மெத்தென்ற இருக்கைகளும் என்னதான் சுகமாக இருந்தாலும், மனதுக்கு பிடித்தமானதாக இருக்கவில்லை.

அங்கிருந்து ஓடிவிடலாமா என்று அவள் மனம் பரபரத்தது. சன்னலைத் திறந்து பார்த்தாள். சில்லென்று காற்று முகத்தில் அறைந்தது. வெளியே ஆயுதம் ஏந்திய பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்.

சொகுசான சிறையில் தான் வைக்கப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டாள். மான் சிங் அவள் அறைப்பக்கமே



பூலான்



பூலான் அழைத்துச் செல்லப்படும் காட்சி

எட்டிப்பார்க்கவில்லை. நீண்டநேரம் தனிமையில் இருந்தாள். மனப்போராட்டம் தீவிரமாகிக் கொண்டிருந்தது.

பூலான் சரணடையும் செய்திதான் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக கொட்டை எழுத்துக்களில் வெளியாகி இருந்தது.

பத்திரிகையாளர்கள் பூலானை பேட்டி காணப் படையெடுத்தனர். பூலானை மதிக்கும் மக்கள் அவள் சரணடையும் காட்சியைக் காண பெருவாரியாகத் திரளத் தொடங்கினார்கள்.

'பூலான் விரைவில் விடுதலையாவாள் என்றும், தன் மக்களுக்காக பகிரங்கமாக நின்று சேவை செய்ய விரும்பியே சரணடைய விரும்பினாள்' என்றும் சதுர்வேதி கொடுத்த செய்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தன.

அதனால் பூலான்மீது கிராம மக்கள் வைத்திருந்த பக்தி மேலும் அதிகமானது. தங்கள் தலைவியைக் காண்பதற்கு புறப்பட்டனர்.

இத்தனையும் வெளியே நடந்து கொண்டிருக்க பூலான் மட்டும் தன் அறைக்குள் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தாள்.

அப்போதுதான் மான் சிங் அந்த அறைக்குள் வந்தான். அவனைக் கண்டதும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவனது சட்டையைக் கொத்தாகப் பற்றி, "ஏன் என்னை இப்படி மாட்டிவைத்தாய்? சொல்லு! சொல்லு!" அவனது கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள்.

மான் சிங் கல்லு மாதிரி நின்றான். முன்னர் ஒருமுறை விக்ரம் மல்லாவும் இப்படித்தானே நின்றான் என்ற நினைப்பு பூலானுக்கு ஏற்பட்டது.

அடிப்பதை நிறுத்தினாள். இப்போது மனது பாரத்தை இழந்தது போலிருந்தது.

"மான் சிங்!" என்று அழைத்தபடி அவனின் கழுத்தை தன் கைகளால் கட்டிக்கொண்டு வளைத்தாள்.

அவன் குனிய, அவனது உதடுகளை ஆவேசமாகக் கவ்வினாள். மூச்சுத் திணறுமளவுக்கு அவனை இறுகத் தழுவிக்கொண்டு, "நான் இப்படியே செத்துப் போகட்டுமா? சொல்லு.... சொல்லடா?" என்றாள்.

மான் சிங் அவள் முதுகை தன் கரங்களால் இதமாக வருடி, அவளின் பின்புற இடுப்புக்குக்கீழே கைகளை இறக்கினான்.

பூலானுக்கு தன் மன இறுக்கம் எல்லாம் தளர அவனது இறுக்கமும், நெருக்கமும் தேவைப்பட்டது.

அவனிடம் இருந்து விடுபட்டுச் சென்று கட்டிலில் மல்லாந்து படுத்துக்கொண்டு அவனையே பார்த்தாள். பார்வைக்குள் அழைப்பு இருந்தது. ஏக்கம் இருந்தது.

'கதவை மூடிவிட்டு வா' என்று கட்டளை இடுவதுபோல, அவள் கண்கள் கதவை நோக்கிச் சென்றன. மான் சிங் புரிந்துகொண்டான். கதவைத் தாழ் போட்டான்.

மெத்தென்ற கட்டிலில் பூலான்மேல் மான் சிங் பரவ, பூலான் தன் கால்களால் அவனை வளைத்துக்கொண்டு, கைகளின் அவசரத்துக்கு ஒத்துழைத்தாள்.

மறுநாள் விடிந்தபோது பூலானின் மனமும் வெளுத்திருந்தது. சதுர்வேதி அவளைக் காணவந்திருந்தார்.

"உன்னை முதலமைச்சர் வரவேற்க வருவார். நாங்கள் பிந்த் நகருக்கு போகிறோம். உனக்கு ஒரு மனத்தாங்கலும் இல்லையல்லவா?"

"இல்லை." என்ற பூலான் "நான் ரைபிளை எந்த தனிமனிதனிடமும் தரமாட்டேன். துர்க்கையம்மன் படமும், மகாத்மா காந்தி படமும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவற்றின் முன்பாகத் தான் ரைபிளை வைப்பேன்!" என்றாள்.

ஏதோ அதற்காவது உடன்பட்டாளே என்ற நிம்மதியுடன், "ஆமாம் அதுதான் சரி," என்றார் சதுர்வேதி.

"உனக்காக பெரிய மேடை போடப்பட்டிருக்கிறது. சரணடைய முன்னர் உன் மக்களை சந்தித்து விடைபெறலாம்," என்றார் சதுர்வேதி.

மறுபடி பஸ் பயணம். வெளியே பத்திரிகையாளர்கள் கமராக்களுடன் காத்திருந்தனர்.

கமராக்காரர்களைக் கண்டதும் "யாரும் என்னை படம் எடுக்க வேண்டாம். சொல்லுங்கள்!" என்றாள் சதுர்வேதியிடம்.

சதுர்வேதி கமராக்காரர்களை விலகிப்போகுமாறு கூறினார். அப்படியிருந்தும் ஒன்றிரண்டு கமராக்காரர்கள் படம் எடுத்துவிட்டனர்.

அவர்களில் ஒருவரை பூலான் கண்டுவிட்டாள். சட்டென்று அந்தக் கமராக்காரனை நோக்கித் தாவி, கண் இமைக்கும் நேரத்திற்குள் கமராவை உருவி எடுத்துவிட்டாள்.

"என்ன தம்பி, ஒழுங்காக சொன்னால் புரியாதா?" என்று பூலான் முறைக்க, மான் சிங் கமராவை வாங்கி அதற்குள் இருந்த பிலிமை உருவினான்.

அதற்கிடையே சதுர்வேதி தலையிட்டு வெற்றுக் கமராவை வாங்கி கமராக்காரனிடம் ஒப்படைத்தார்.

இந்தச்சம்பவம் பூலான்மீது பத்திரிகையாளர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

பஸ் புறப்பட்டது. பிந்த் நகரில் உள்ள கல்லூரி மைதானத்தை பஸ் சமீபித்தபோது பல்லாயிரக் கணக்கான மக்கள் அங்கு கூடியிருப்பதைக் கண்டாள் பூலான் தேவி.

மக்கள் கூட்டத்தின் நடுவே மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

பஸ்சுகளைக் கண்டதும் அங்கு கூடியிருந்த மக்களுக்கு, பூலான் வருகிறாள் என்பது தெரிந்துவிட்டது.

'பூலான் தேவிக்கு ஜே!' என்று ஆரவாரம் செய்யத் தொடங்கிவிட்டனர்.

அதேசமயம் மேலே ஒரு ஹெலிகொப்டர் பறந்து வரும் சத்தம் கேட்டது.

"சி.எம். உங்களை வரவேற்க வருகிறார்" என்றார் சதுர்வேதி.

பூலானுக்கு கெட்ட கோபம் வந்துவிட்டது.

"பஸ்ஸை நிறுத்து! வந்த பாதையில் திருப்பு!" என்று தன் ரைபிளை கையில் எடுத்துக் கொண்டாள்.

பஸ் சாரதியின் முகம் வெளிறிவிட்டது.

சதுர்வேதி எழ, "ம்ஹூம்...அப்படியே இரும். அசைந்தால் உயிர் மிஞ்சாது!" பூலானிடம் இருந்து கண்டிப்பான குரல் எழுந்தது.

(தொடர்ந்து வரும்)

## காதலர்தின கல்யாணம்

மும்பாய் பட உலகில் முதலிடத்தை பிடித்துக்கொண்டிருக்கையில், அவரைப் பொலிஸ் பிடித்துக்கொண்டு போய்விட்டது. அவர்தான் சஞ்சய் தத். பயங்கர ஆயுதங்களை வீட்டில் பத்திரமாக வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் நீண்டகாலம் சிறையில் இருந்தார்.



சஞ்சய் தத்

அவரது முதல் மனைவி நிரந்தர நோயாளி. ஓடி ஓடி காதலித்த நடிகை மாதுரி டிக்ஷித். சஞ்சய் தத் மாட்டிக்கொண்டதும் கையைவிரித்துவிட்டார்.

ரியாப்பிள்ளை என்னும் இளம்பெண்தான் சஞ்சய் தத்தை சிறையில் அடிக்கடி சந்தித்து தைரியம் கொடுத்து வந்தார்.

'ஊரும் சதமல்ல, உற்றாரும் சதமல்ல என்று பாடாத குறையாக சிறைக்குள் முடங்கிக்கிடந்தவருக்கு, ரியாப்பிள்ளை தைரியமான வார்த்தைகளில் விற்றமின் கொடுத்தார். கூடவே காதலும் வளரத் தொடங்கியது.



ரியா

சிறையில் இருந்து விடு தலையான பின்னர் மாதுரி டிக்ஷித், ஊர்மிளா போன்ற நடிகைகள் சஞ்சய்தத்துடன் நெருக்கமாகினர். அதனால் ரியாப் பிள்ளையை காய் வெட்டப் போகிறாரோ என்று பலரும் சந்தேகப்பட்டனர்.

ஆனால், சஞ்சய் தத் ஏமாற்றவில்லை. காதலர் தினமான பெப்ரவரி 14ம் திகதி ரியாப்பிள்ளையை கைப்பிடித்திருக்கிறார். நள்ளிரவு மூன்று மணிக்கு நண்பர்கள் புடைசூழ மாலை மாற்றிக் கொண்டனர். இருவருக்கும் இது இரண்டாவது திருமணம்.

## சோனியாவும் சீதையும்

சோனியா காந்தி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டபோது, அவரை இத்தாலிப் பெண்மணி என்றும், அந்நியர் என்றும் கிண்டலடித்தனர்.



அதற்கு பதிலடி கொடுக்கக்கூடிய வாதங்களை காங்கிரஸ் தலைவர்கள் சிரத்தையாக தேடித் தேடிக் கண்டுபிடித்தனர்.

மும்பாய் முன்னாள் முதல்வரும், முன்னாள் இந்திய மத்திய அமைச்சருமான சரத்பவாரின் கண்டுபிடிப்பு பிரமாதம்.

"சோனியா ராஜீவின் கைப்பிடித்த அன்றே இந்தியப் பெண்ணாகி விட்டார். ஏன், நாம் வழிபடும் அன்னை சீதாவும் நேபாள தேசத்தின் பெண்தானே. அவர் நேபாளத்தில் பிறந்து வளர்ந்தாலும் இராமனை மணந்த காரணத்தால் நாம் அவரை இந்தியராக ஏற்றுக்கொள்ள வில்லையா? சீதைக்கு ஒரு நியாயம், சோனியாவுக்கு ஒரு நியாயமா?" என்று சரத்பவார் அடுக்கிய வாதங்கள்தான் மக்களைக் கவர்ந்ததாம். ஆனால் சோனியாவுக்கு அவரைப் பிடிக்காது. எதை அடுக்கியென்ன தனித்து ஆட்சியைப் பிடிக்க முடியவில்லையே!

## ஐந்து வினாடியில் மூன்று கோடி



சொன்னால் நம்ப மாட்டீர்கள். ஆனால் உண்மை. பணத்தை கரியாக்கி படம் எடுப்பதில் ஹொலிவூட் சினிமாக்காரர்களை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்?!

கடைசியாக வெளியாகியுள்ள ஜேம்ஸ் பொண்ட் திரைப்படம் 'டுமாரோ நெவர் டைய்ஸ்'.

அப்படத்தில் ஒரு காட்சி: வில்லன்களிடம் இருந்து தப்புவதற்காக ஒரு மாடியின் உச்சியில் இருந்து இன்னொரு மாடிக்கு காரில் தாவி, அம்மாடியின் கீழ் தளத்தில் உள்ள ஷோரூம் கண்ணாடியை உடைத்துக் கொண்டு சென்று காரை நிறுத்துகிறார் ஜேம்ஸ் பொண்ட்.

படத்தில் ஐந்தே வினாடி மட்டும் இடம்பெறும் இக்காட்சிக்கு எவ்வளவு செலவு தெரியுமா? மூன்று கோடி ரூபாய்கள்.

உலகில் மிக விலை உயர்ந்த கார்களில் ஒன்றான பி.எம். டபிள்யூ கார்கள் 17 இக் காட்சிக்காக பயன்படுத்தப்பட்டன. ஏழு கமிராக்கள் அக் காட்சியை படமாக்கின. ஷோரூம் கண்ணாடிகள் நாசமாகின.

ஐந்து வினாடிக் காட்சிக்கே மூன்று கோடி என்றால் முழுப்படமும் எடுத்து முடிக்க எவ்வளவு செலவாகும்? அதுதான் ஹொலிவூட் பிரமாண்டம் செய்த செலவைவிட இரட்டிப்பாக இலாபம் குவித்துக் கொண்டிருக்கிறது அப்படம்.

## மடோனாவின் கோபம்

பொப் இசைப் புயல் கவர்ச்சி சூறாவளி மடோனா இப்போது அடக்கமாகி விட்டார்.



நிர்வாணமாக போஸ் கொடுத்து, காதல் லீலைகளின் கோணங்களைப் பற்றி விளக்கம் கொடுத்தவர் மடோனா. அவரது அபாரமான நடன அசைவுகளால் தூக்கத்தை தொலைத்த இரசிகர்கள் ஏராளம்.

'எத்தனை நாள் தான் தனிமையில் இருப்பது? தனக்கு ஒரு குழந்தை வேண்டும்' என்று முடிவு செய்தார். கோடிக்கணக்கான சொத்துக்களுக்கு வாரிசு வேண்டாமா? 'எனக்கு குழந்தை வேண்டும். சிறந்த ஆண்மகன் தேவை. குழந்தை பிறந்ததும் அவர் போய்விடலாம்!' என்று அதிரடி அறிவிப்பு வெளியிட்டார். அப்படியே செய்தும் முடித்தார்.

பெண் குழந்தை பிறந்தது. லோதர்ஸ் என்று பெயர் சூட்டி மிக ஜாக்கிரதையாக வளர்த்து வருகிறார். மடோனாவுக்குத் தெரியாமல் அவரும் குழந்தையும் சேர்ந்திருக்கும் போது படம் எடுத்து சுடச்சுட பிரசுரித்து விட்டார்கள்.

புகைப்படங்கள் வெளியானால் தன் குழந்தைமீது கண்பட்டுவிடும், அவளது சுதந்திரமும் பாதிக்கப்படும் என்பதால் பத்திரிகையாளர்களை பிடித்துச் சாப்பிடும் ஆத்திரத்தில் இருக்கிறார் மடோனா.

## வா! மோதலாம்



அமெரிக்காவின் ஆணவம் கொஞ்சம் ' அடங்கியிருக்கிறது. எதிர்பார்த்தபடி அமெரிக்கா சொல்வதெல்லாம் வேதம், அது செய்வதெல்லாம் நியாயம் என்று உலக நாடுகள் பிற்பாட்டுப் பாடவில்லை.

ஈராக்குடன் ஒப்பிட்டால் அமெரிக்காவின் பலம் மலைதான். போதாக்குறைக்கு அமெரிக்காவின் கூட்டாளி நாடுகள் சிலவும் படை பலத்துடன் அமெரிக்காவின் பின்னால் நின்றன.

அப்படியிருந்தும் ஈராக் மக்கள் காட்டிய உறுதியும், சதாம் பின்னால் திரண்டு நின்ற வீரமும் உலகை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

'பர்த்தாவுக்குள் அடங்கிக் கிடப்பவர்கள்' என்ற இளக்காரமான பேச்சுக்களுக்கு முடிவு கட்டிவிட்டு, ஈராக் பெண்கள் ஆயுதங்களுடன் எழுச்சி கண்டனர்.

வெடிகுண்டுகளை எப்படிக் கையாள்வது, எதிரி இலக்குகளை எப்படி மோதித் தகர்ப்பது போன்ற பயிற்சிகளிலும் ஈடுபட்டனர்.

தற்போது அமெரிக்காவின் போர் முஸ்தீபு சற்றுத் தணிந்திருந்தாலும்கூட அமெரிக்க கழுகுகளை நம்பத் தயாராக இல்லை. போர்ப்பயிற்சிகளில் பெண்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

பெண் புத்தி பின்புத்திதான். பின்னர் வரக்கூடிய அபாயத்தை இப்போதே உணர்ந்து தயாராகும் புத்தி.



படிப்பகம்

www.padippakam.com




## தெருவெங்கும் நடனம்

↑ தேவையான பொருட்களையெல்லாம் ஒரே கடையில் வாங்குவது என்றால் முடியுமா? நம் நாட்டிலுள்ள சூப்பர் மார்க்கெட்டுக்களில்கூட சாத்தியமில்லை.

ஆனால் அமெரிக்க நியூயோர்க் நகரில் இருக்கும் மக்கி பல்பொருள் அங்காடியில் இல்லாத பொருட்களே கிடையாது. உலகில் உள்ள சகல பொருட்களையும் ஒரே கூரையின்கீழ் வாங்கக் கூடிய ஒரே இடம் மக்கி பல்பொருள் அங்காடி. விளம்பர வாசகம் போல் இருக்கலாம். ஆனால் உண்மை அதுதான். மக்கி அங்காடியில் வாடிக்கையாளர்களை மகிழ்விக்க ஆண்டுதோறும் மாபெரும் விழா நடப்பதுண்டு. அந்த விழாக்காட்சியை சொன்னால் புரியாது. அத்தனை அமர்க்களம். பல்லாயிரம் மக்கள் குழுமிவிடுவர். எள் போட்டால் எண்ணெயாகும் என்பார்களே அப்படியொரு கூட்டம். இதுவரை பல பெருவிழாக்கள் அங்கு நடைபெற்றுள்ளன. ஆயினும் 1996 ஆகஸ்ட் 18ம் திகதி நடைபெற்ற விழாவில் உலக சாதனை ஒன்று படைக்கப்பட்டது.

மக்கி அங்காடி உள்ள தெருமுழுவதும் ஒரே வகையான உடை அணிந்த 6 ஆயிரத்தி 657 நடனக் கலைஞர்கள் நிரம்பிவழிந்தனர். அவர்கள் வேகமான தாளத்திற்கு ஏற்ப தங்கள் பாதங்களைத் தரையில் தட்டி ஆடினார்கள். இவர்களை 'ரப் டான்சர்ஸ்' என்று அழைப்பர்.

மிக அதிகமான ரப் டான்சர்கள் ஒரே இடத்தில் கூடியதும் ஆடியதும் மக்கி விழாவில்தான். இக் கண்கொள்ளாக் காட்சியை பல்லாயிரம் மக்கள் கண்டுகளித்தனர். நிரம்பி வழியும் நடனக் காரர்களை 'கிளிக்' செய்த புகைப்படம்தான் இது.

## நகருக்குள் வெள்ளம்


↓ நம்நாட்டில் பல பகுதிகளில் 'மழை வா வெய்யில் போ' என்று ஏங்க வேண்டிய கட்டம் வந்தாச்சு. வெப்பம் வறுத்தெடுக்கிறது.

மழைக்கு ஏங்கும் இந்நாளில் மழைக்காட்சி ஒன்று. இது கனடாவில் எடுக்கப்பட்டது. கனடாவில் நோவா ஸ்கொட்டிய பிரதேசத்தில் உள்ள ட்றுறோ நகரில் பேய் மழை கொட்டியது. அங்கு கடந்த 25 வருட காலத்தின் பின்னர் இப்படியொரு பேய் மழை கொட்டியிருக்கிறதாம். நகரின் பிரதான தெருக்கள் வெள்ளத்தில் மூழ்கியதால், வாகனங்கள் கடலில் மிதந்தோடும் படகுகள் போலாகிவிட்டன. (காலநிலை மாறினால் வாகனங்களும் மாறுமோ?)

வாகனங்கள் வெள்ளத்தில் சிக்குண்டுபோய் விடுமோ என்று சொந்தக்காரர்கள் புலம்பிக் கொண்டிருக்க, பாரம் தூக்கும் வண்டிகளின் உதவியோடு வாகனமீட்பு முயற்சிகள் நடந்து கொண்டிருக்கும் காட்சிதான் இது. மழை பெய்யாவிட்டாலும் தொல்லை, பெய்தாலும் தொல்லை. அளவோடு பெய்தால் பிரச்சனையில்லை. இயற்கைக்கு யார் எடுத்துச் சொல்வது?




## யாருடைய கொம்பு?



↙ இது யாருடைய கொம்பு? ஆராய்ச்சியாளர்கள் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கொம்புகள், எலும்புகள், பற்கள் என்று விலங்குகளின் உறுப்புக்கள் உலகின் பலபாகங்களில் ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைத்து வருகின்றன. அவற்றை வைத்து அந்த உறுப்புக்கள் எந்த விலங்குக்கு உரியவை என்று கண்டுபிடித்துவிடுவர். டைனோசரின் எலும்புகள், பற்கள்கூட கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்தக் கொம்புக்குரிய விலங்கு எது என்றுமட்டும் இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. 'ரிங் வொவார்' என்று அழைக்கப்படும் தெய்வீக ஆட்டின் கொம்புதான் இது என்று வியட்நாம் மக்கள் கூறு கின்றனர். அந்த ஆடு, கரும் வெப்பு நிற மாட்டின் சாயலை ஒத்திருக்கும், வியட்நாம் காடுகளில் அவை திரிகின்றன என்று கூறுகின்றனர்.

கண்டதாகக் கூறுகிறார்களே தவிர அப்படியொரு ஆடு உண்டா என்பதை ஆதாரபூர்வமாக யாரும் கொண்டுவந்து காட்டவில்லை. நம் கண்களுக்கும் தென்படவில்லை. எப்படி நம்புவது? என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

கொம்பு இருக்கிறது. உரிய விலங்கை கண்டுபிடிப்பதுதான் பெரிய வம்பாக இருக்கிறது. தடயம் கிடைத்தும்கூட அதற்குரிய விலங்கு எப்படி இருக்கும் என்பது கண்டறியப்படாதது இதுமட்டும்தான். அதனால் இந்தக் கொம்பு உலக அதிசயமாகிவிட்டது.



## பயமறியாத பாலகி

↑ படையும் நடுங்கும் பாம்பைக் கண்டு சற்றும் கலங்காத பச்சிளம் சிறுமி. பயமறியாத இந்த இளங்கன்றின் வயது 13. சீனாவைச் சேர்ந்தவள்.

மொத்தமாக 888 நாட்கள் கொடும் விஷப்பாம்புகளுடன் குடியிருந்திருக்கிறார். கண்ணாடி அறைக்குள் பாம்பு நண்பர்களுடன் பயமின்றி இருநத்து மூலமாக, மிகக் குறைந்த வயதில் விஷப்பாம்புகளுடன் அதிக நாட்கள் இருந்தவர் என்று உலக சாதனை படைத்துள்ளார்.

சிறுமியின் பெயர்; பூமா ஸாமியா. பாம்புகளை பூங்கொத்து மாதிரி சுமக்கிறார் பாருங்கள். பார்வையாளர்கள்தான் பயந்து பயந்து பார்த்தனராம்.





## தரையிறக்கம்

போர்க் கப்பல், போக்குவரத்துக் கப்பல் என்பவை ஆழம் குறைந்த கடல் பகுதிக்குள் செல்ல இயலாது. அவற்றில் உள்ள ஆட்களையும், பொருட்களையும் படகுகள் மூலம் அல்லது தரையிறக்க கப்பல்கள். மூலமே கரைக்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஆழமற்ற கடற்பகுதியில் கரையை சமீபித்து நிற்கக்கூடியவை தரையிறக்கக் கப்பல்கள்.

படத்தில் உள்ளது பிரிட்டனின் தரையிறக்க கப்பல். போர்க் காலங்களில் படையணிகள் ஒரு பகுதியில் இருந்து இன்னொரு பகுதிக்கு தரையிறக்க கப்பல்கள் மூலமே அதிகமாகக் கொண்டு செல்லப்பட்டு தரையிறக்கப்படுவர். இரண்டாம் உலகப்போரின் போது சிசிலி தீவின் கரையோரத்தில் பிரிட்டிஷ் படையணி தரையிறங்கும் காட்சியே இதுவாகும். இரண்டாம் உலகப் போரில் பலநூறு தரையிறக்க கப்பல்கள் அழிந்தன.

இரண்டாவது படத்திலுள்ளது இலங்கை கடற்படையின் 'பவதா' தரையிறக்க கப்பல். 22.02.98 அன்று பருத்தித்துறைக் கடலில் கடற்கரும் புலிகளால் தகர்க்கப்பட்டது இதுதான். 'பவதா' தரையிறக்க கப்பல் படை வீரர்களை ஏற்றிக் கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படம் இது. பல நூறுபேரை காவிச் செல்லக்கூடியது. ■

**தகவல் பெட்டி**



படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

பூப்போன்ற நடிகையின் மணியான காதலரான இயக்குநர் அரசியல் படங்களையே சுட்டுத் தள்ளிக்கொண்டிருந்தார். அதனால் அரசியல்வாதிகள் அன்னாரில் கடுப்பில் இருக்கிறார்களாம். முதலில் மிரட்டல் தொடுக்கப்பட்டதாம். மசியவில்லை. இறுதியில் பயங்கரமான எச்சரிக்கை பறந்து வந்திருக்கிறதாம். "உன் பூப்போன்ற காதலியைக் கடத்திக் கொண்டு போய்விடுவோம்" என்றனராம். இனிமேல் அரசியல் படமே வேண்டாம் என்று முடிவு கட்டிவிட்டார் இயக்குநர். எல்லாம் காதலிக்காக.

கிருஷ்ணனின் பெயரை தன்பெயரில் இணைத்து வைத்துள்ள ரம்யமான நடிகை அவர். ஆட்டமா பாட்டமா தேரோட்டமா? என்று தெலுங்குப்பட இயக்குநரோடு ராசியாக இருந்தவர். அந்த வயதான இயக்குநருடன் ஆட்டம், பாட்டம், தேரோட்டம் முடிந்துவிட்டது. இயக்குநர் வேறு மலர் தாவிவிட்டார். நடிகை பின்னர் வேறு புது நண்பர்களுடன் சுற்றினார். தற்சமயம் தெலுங்கில் சீனியரும், தமிழில் சூப்பர் ஸ்டாராக இருப்பவரின் நண்பருமான நடிகரின் அன்புப் பிடியில் சிக்கிவிட்டாராம். அந்த நடிகர் புதிய படம் ஒன்றை இயக்கப்போகிறார். நாயகி ரம்யமானவர்தானாம்.

ரமில் 'ரா' நடிகைக்கு வெள்ளைக்கார கணவருடன் தகராறு ஏற்பட்டதை முன்னரே சொல்லியிருந்தோம். பின்னர் சில நண்பர்களது தலையீட்டால் தற்காலிக சமரசம் ஏற்பட்டது. தற்போது பெரிய பிளவு. முதலீடு செய்யப் போகிறேன் என்று சில கோடிகளையும் கிளப்பிக்கொண்டு பறந்துவிட்டாராம் வெள்ளைக்கார கணவர். தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபட்டதுகூட கோடிகள் போன துக்கத்தை மறக்கத்தானாம்.

தனது மகனை காதல் சின்னத்தின் பெயர்கொண்ட படத்தில் நாயகனாக அறிமுகம் செய்கிறார் அந்த இயக்குநர். மண்வாசனை இயக்குநர் என்று பெயரெடுத்தவர். மண், பெண், பொன் மூன்று வாசனையும் தாராளமாக அறிந்தவர். அவரது மகனோ நடிக்க வந்த உடனேயே பதினாறடி பாய்ந்திருக்கிறார். புதிய அறிமுக நாயகி தாராளமானவராம். அவருடன் நான்கு நாட்கள் தனியாக ஒரு ரவுண்ட் அடித்துவிட்டு திரும்பி வந்திருக்கிறாராம்.

வேட்டி கட்டி நடிக்கும் நடிகர் ராஜமான கிரனார் தன் அடுத்த படத்திற்காக காதலுக்கு மரியாதை தரும் அந்த நாயகியை நாடிப் போனார். பேபியாக இருந்து நாயகியாகியுள்ளவர் அந்த நடிகை. நடிகரிடம், "மன்னியுங்கள் அங்கிள், நீங்கள் என் அப்பாவைவிடப் பெரியவர். நான் இளைஞர்களோட மட்டும்தான் நடிக்க ஆசைப்படுகிறேன்" என்று கூறிவிட்டாராம்.

## கவர்ச்சி மழை

சோனாலி பந்த்ரேயின் வரவால் தமிழ்த் திரையுலகில் மீண்டும் ஒருதரம் கவர்ச்சி மழை கொட்டப்போகிறது. முதலில் 'பம்மாய்' படத்தில் 'ஹம்மா ஹம்மா' பாடலுக்கு கவர்ச்சி புயலாக துள்ளி விட்டுப் போனவரை, படம் முழுக்க துள்ளவிடப் போகிறார்கள்.

'காதலர் தினம்' படத்தில் புதுமுகம் ராகுலுடன் சோனாலி புகுந்து விளையாடுகிறார். பெப்ரவரி 14 காதலர் தினத்தன்றே படத்தை வெளியிட திட்டமிட்டும் படப்பிடிப்புக்கள் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. சில காட்சிகளை மட்டுமே சுட்டு வைத்திருக்கிறார்கள்.

மும்பாயில் சோனாலி படு பிஸி. விளம்பரப் படங்களுக்கு தூள்கிளப்பும் போசுகள் கொடுத்துக் கொண்டிருக்கிறார். சுளையாக பணம் வருகிறது. மாலையானால் தனது பிரியமான ஆண் நண்பர் ஒருவருடன் கிளப்புக்களில் காணப்படுகிறார். தினம் ஒரு நண்பருடன் ஆஜராகிறார்.

## கமல...

இந்தித் தி... பிரியதர்சன். இது:

"இந்தித் ... தென்னிந்திய ... கொண்டதில்...

மோகன்ல... தோற்றத்தைப் ... நடிகர்கள் ... மலையாளி ... யாளம் கா... பொருந்தக் ... வர். ஒரேயொ... கமலஹாசன்.

## 'புர...

'நாளைய... போன்... பிரபாக... இயக்கி... தார்.

வே... இயக்கப்... என்று ...

சாத... தாயத்... போராட... காரன்'.

## கா...

கவ... கலக்கி... சமீபகா... அல்ல... வில்லை...

இர... போடுகி... தகவல், ... தனது உ... ளாராம்.



சினிவிசிட்

விஸிங்ஸ்டன்-சொர்ணா

படம்: உனக்கும் எனக்கும் கல்யாணம்

## 'ஆர்' நாயகி தாராளம்

ராதா, ராதிகா, ரத்தி, ரேவதி என்று பாரதிராஜா அறிமுகப்படுத்திய பல நடிகைகளின் பெயர்கள் ஆங்கில எழுத்தான 'ஆர்' என்பதில் ஆரம்பிக்கும்.

அதே வரிசையில் மற்றொரு கிளு கிளு கதாநாயகி அறிமுகமாகிறார். பெயர் ரியா. பாரதிராஜாவின் இந்த புதிய கண்டுபிடிப்பை காண்பவர்கள் அசருகிறார்கள்.

'தாஜ்மஹால்' படப்பூஜையில் கவர்ச்சியை காண்பிக்கும் கட்டாய ஆசையோடு காணப்பட்டார் ரியா. பாரதிராஜாவின் மகன் மனோஜ்குமாருடன் ஒட்டி ஒட்டிப் பேசிக்கொண்டிருந்ததை பொறாமையோடு கவனித்தன பல கண்கள்.

'தாஜ்மஹால்' படத்தில் மனோஜ்குமாரும், ரியாவும் சம்பந்தப்பட்ட படு நெருக்கமான காட்சிகளை படமாக்கினார்கள். மகனுக்கு கட்டித் தழுவும் கலையை சங்கடமே இல்லாமல் சொல்லித் தந்தார் அப்பா பாரதிராஜா.

படப்பிடிப்பில் நான் இயக்குநர், அவன் நடிகன். அதனால் தர்மசங்கடம் என்ன கிடக்கிறது? என்கிறார் பாரதிராஜா.

## திரையுலக மறுபக்கம் 46

# நண்பிகளிடம் போட்ட சவால்

## கைப்படாத அமெரிக்க கனவு

மூன்றெழுத்து பெயர் கொண்ட நடிகை அவர். தமிழ்த் திரையுலகின் 'முன்னணி நடிகர்கள் அனைவருடனும் நடித்துக் காட்டுகிறேன் பாருங்கள்' என்று தன் நண்பிகளிடம் சவால் விட்டிருந்தார்.

அவரது சவாலை நிறைவேற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. இன்றைய முன்னணி முதல் கதாநாயகனுடன் ஜோடி சேர்ந்தார். அதற்காக அப்பட இயக்குநரை தனியாக கவனித்ததும், அந்த இயக்குநருடன் ஒட்டிக்கொண்டு திரிந்ததும் தனிக்கதை.

முன்னணி சூப்பர் நட்சத்திரத்துடன் நடித்தபோது அவரையும் தன் கைக்குள் போட்டுக்கொள்ள எத்தனையோ முயற்சி செய்தார் நடிகை. மேற்படி விஷயங்களில் நன்கு பழக்கப்பட்டு வேதாந்தியாக மாறியிருந்த நடிகர் அத்தனை ஆர்வம் காட்டவில்லை.

அதன்பின்னர் நடிகரின் மனைவியை தாஜா பண்ண தொடங்கினார். நடிகரின் வீட்டுக்கு அடிக்கடி சென்று அவரது மனைவியை தோழியாக்கிக் கொண்டதோடு, பிள்ளைகளுடனும் 'அன்ரி'யாக நடந்து கொண்டார்.

ஆனால் நடிகரின் மனைவிக்கு இந்தத் தோழியை அவ்வளவாகப் பிடிக்கவில்லை. அதனால் நட்பு நீடிக்கவில்லை. இக்காலகட்டத்தில்தான் நடிப்பில் சூப்பரான நடிகரின் பழக்கம் ஏற்பட்டது.

நடிகை தனது உடலை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதை மனம் திறந்து பாராட்டினார் நடிகர்.

கட்டுக்கோப்பான உடல் கொண்ட நடிகைகள்மீது நடிகருக்கு தனியான பிடிப்பு எப்போதும் உண்டு.

உடலை ஸ்லிம்மாக வைத்திருக்க நடிகைக்கு சில பயிற்சிகளையும் சொல்லிக் கொடுத்தார். நடிகையும் பயிற்சியோடு பயிற்சியாக நடிகரை வளைத்துப்போடும் முயற்சியையும் மேற்கொண்டார்.

நடிகர் 'அதெல்லாம் சகஜம்' என்ற கொள்கையுடையவர் என்றாலும், மனைவியிடம் உள்ள பயம் காரணமாக தன் கருத்துக்களை அடக்கி வாசிப்பவர்.

அந்த நடிகைக்கு தன் படங்களில் தொடர்ந்து இடம் கொடுத்தார். முத்தமும் கொடுத்தார். முத்த ஒத்திகையின் போது நடிகை நடிகரை கதிகலங்க வைத்துவிட்டார். கமராவுக்கு முன்னாள் மட்டும்தான் நடிகர் அசத்தினார்.

### மனைவி கட்டளை

ஏற்கனவே சில நடிகைகளுடன் நடிகருக்கு இருந்த தொடர்பை துப்பறிந்து கண்டுபிடித்தவர் நடிகரின் மனைவி. ஒரே நடிகைக்கு தொடர்ந்து தன் கணவர் வாய்ப்புக் கொடுப்பது என்றால், அதன் பின்னணியில் என்ன காரணம் இருக்கும் என்பது அவருக்கு தெரியாததல்ல.

'இனிமேல் அந்த நடிகையை உபயோகிக்க வேண்டாம்' என்று கண்டிப்பாக கூறி விட்டார் மனைவி. அதனால் ஆஸ்தான நடிகைக்கு கவலையோடு பிரியாவிடை கொடுத்தார் நடிகர். அதன்பின்னர் தமிழில் நல்ல வாய்ப்புக்கள் நடிகைக்கு கிடைக்கவில்லை.

நேராக மும்பாய்க்குச் சென்றார் அங்குள்ள உயரமான நடிகரும் தன்பெயரிலேயே சக்கரவர்த்தியான நடிகருமானவரின் நட்பை தன் திறமையால் ஏற்படுத்திக் கொண்டார்.

அந்த நடிகருடன் ஒரு படத்தில் உருண்டும், புரண்டும் அதிரடி கவர்ச்சிக் காட்டி நடித்தார். அவருடனேயே சில நாட்கள் தங்கியும் இருந்தார்.

அந்த நடிகரும் திருமணமானவர். எனினும் தன் உடன் நடிக்கும் நடிகைகளுடன் சில காலம் நட்பாக இருப்பது அவரது பொழுதுபோக்கு.

பொழுதுபோக்கு முடிந்ததும் நடிகைக்கு டாட்டா காட்டிவிட்டார். தன் சொந்த முயற்சியால் மேலும் சில காலம் மும்பாயில் நங்கூரமிட்டுவிட்டு மறுபடி தமிழ்ப் பட உலகுக்கு திரும்பி வந்தார்.

### மீண்டும்

மீண்டும் தன் முன்னாள் நண்பரான நடிகரை தொடர்பு கொண்டார். "உரிய சந்தர்ப்பத்தில் உன்னை பயன்படுத்திக் கொள்கிறேன் பொறுத்திரு" என்று ஆறுதல் கூறியிருக்கிறாராம் நடிகர்.

இதற்கிடையே பிரபல தொழிலதிபர் ஒருவருடன் நடிகைக்கு ஆழமான நட்பு மலர்ந்திருந்தது. 'உன்னையே கல்யாணம் பண்ணப்போகிறேன்' என்று அவர் உத்தரவாதம் கொடுத்திருந்தார். அமெரிக்கா சென்று அவருடன் செட்டிலாகும் கனவில் இருந்தார் நடிகை.

யார் கண்பட்டதோ, அந்தத் தொழிலதிபரும் நடிகைக்கு 'அல்வா' கொடுத்துவிட்டு சொல்லிக் கொள்ளாமல் அமெரிக்கா போய்விட்டார்.



சோனாலி பாந்த்ரே

படம்: காதலர் தினம்

"கண்ணிரண்டில் வெண்ணிலா கதைகள் சொல்லும் பெண்ணிலா நாணிருந்தும் நீயிலா

## பிரபுவும் ஐந்து நாயகிகளு...

பிரபுவும் சுரே... கோபியும் நடிக்க இரு... படம் 'அமைதிப் பூங்... பின்னர் 'நண்பா நண்... என்று பெயர் மாற்றப்பட்ட... நீங்கள் அறிந்ததே. இப்பே... கதாநாயகர்களில் ஒருவரா... சுரேஷ் கோபியையும் மாற்றிவி...னர். ஜெயராம் நடிக்கிறார்.

பிரபு ஜோடியாக மலையா... படவுலக நடிகை மஞ்சுவாரிய... நடிக்கிறார். அவர் தவிர மே... நான்கு நாயகிகள் உண்டாம். வச... கிரேஸி மோகன். மலையாளப்... உலக முன்னணி இயக்குநர் சிபிமல... இயக்குகிறார். இசை: வித்யாசா... பாடல்கள்: வைரமுத்து.



படிப்பகம்

www.padippakam.com

## பொருத்தம்

உலகின் பிரபலமான இயக்குநர் கமலஹாசன் பற்றிக் கூறியது

கம் இதுவரை எந்தவொரு ரயும் பெரியளவில் ஏற்றுக்

ம்முட்டி ஆகியோரது முகத் தாலே அவர்கள் மலையாள தெரிந்துவிடும். அப்படி தமிழன் என்றோ அடை ாத, எல்லா மொழிக்கும் முகத்தோற்றத்தைக் கொண்ட ன் இருக்கிறார். அவர்தான்

## க்காரன்'

', 'அரசன்', 'அதிசய மனிதன்' களை இயக்கியவர் வேலு மீபத்தில் கடவுள் படத்தை நாத்திகராகவும் நடித்திருந்

பாகரன் அடுத்து நடித்து படத்திற்கு 'புரட்சிக்காரன்' ுள்ளார்.

பேதமற்ற ஒரு சமதர்ம சமு ுவாக்கும் இலட்சியத்துடன் மனிதனின் கதைதான், 'புரட்சிக்

## நடிகை

குலுக்கலில் இரசிகர்களை டிருந்தவர் ஜோதிமீனா. படங்களில் அவர் தலையை தன் கலையைக் காட்ட

ா இப்படி ஏன் பட்டினி ன்று விசாரித்ததில் கிடைத்த ா கர்ப்பிணியாக இருக்கிறார். ஒருவரை திருமணம் செய்துள்



விஜயகாந்த்
படம்: உளவுத்துறை

## மினி சினி

* நடிகர் திலகத்துடன் 'தேவர்மகன்' படத்தில் இணைந்து நடித்த வைகைப்புயல் வடிவேலு, தற்போது தயாராகி வரும் 'என் ஆச ராசாவே' படத்தில் மறுபடியும் நடிகர் திலகத்துடன் இணைந்து நடிக்கிறார்.

* மம்முட்டி-சாய்குமார் இணைந்து நடிக்கும் 'இந்தியா டுடே' படத்தில் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக மகேஸ்வரி நடிக்கிறார். இன்னொரு கதாநாயகியாக நடிக்க மீனாவை அணுகியுள்ளனர்.

* 'மகாபிரபு' படத்திற்கு வசனம் எழுதியவர் பிரபல எழுத்தாளர் பட்டுக் கோட்டை பிரபாகர். தற்போது விஜய் நடிக்கும் 'ப்ரியமுடன்' படத்திற்கு வசனம் எழுதிவரும் இவர், அப்படத்தில் முக்கிய வேடமொன்றிலும் நடித்து வருகிறார்.

* தமிழில் 'சுந்தரபாண்டியன்', 'அண்ணன்', 'கண்டக்டர் மாப்ளே' போன்ற படங்களில் நடித்து வரும் சுவாதி, மலையாளத்தில் ஜெயசுவாதி என்ற பெயரில் ஓரிரு படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

* கார்த்திக் நடித்த 'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' போன்ற படங்களைத் தயாரித்த கங்கா-கவுரி புரடக்ஷன்ஸ் நிறுவனம் மீண்டும் கார்த்திக் நடிக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளது.

* இப்ராஹிம் ராவுத்தர் தயாரிப்பில் லிவிங்ஸ்டன் நடிக்கும் 'உனக்கும் எனக்கும் கல்யாணம்' படத்தில் தேவயாணி, இந்து, சொர்ணா ஆகிய மூவரும் நாயகிகளாக நடிக்கிறார்கள். இதில் தேவயாணிக்கு விதவை வேடம்.

* பாலசேகரன் இயக்கிய 'லவ்டுடே' படம் தெலுங்கில் 'சுஸ்வாகதம்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு பெருவெற்றி பெற்றுள்ளது. இதைத் தொடர்ந்து பாலசேகரனுக்கு இரண்டு தெலுங்குப் படங்களை இயக்கும் வாய்ப்புக்கிட்டியுள்ளது.

* சேரன் இயக்கத்தில் முரளி நடிக்கும் 'பாரசீகரோஜா' படத்தின் பெரும்பாலான படப்பிடிப்புக்கள் டுபாய் நாட்டில் படமாக்கப்படவுள்ளன. பாடல் காட்சிகள் சுவிற்ஸர்லாந்திலும், லண்டனிலும் படமாக்கப்படவுள்ளன.

* வினீத்-ப்ரீதா நடித்த 'ருக்மணி கல்யாணம்' என்ற தெலுங்குப்படம் 'காதல் சங்கமம்' என்ற பெயரில் தமிழில் மொழிமாற்றப்பட்டு வருவது தெரிந்ததே. இப்படத்திற்காக முன்னாள் நடிகை சரிதாவின் தங்கை பிரவீணா பாடலொன்றைப் பாடியுள்ளார்.

* 'ஜீன்ஸ்' படத்தில் இரட்டை வேடத்திலும், 'மருதநாயகம்' படத்தில் மருதநாயகத்துக்கு நண்பனாகவும் நடித்து வரும் நாசர், மலையாளத்தில் மோகன்லால் கதாநாயகனாக நடிக்கும் 'ரத்த சாட்சிகளுக்கு ஒரு சவால்' என்ற படத்தில் வில்லனாக நடிக்கிறார்.

## ஒத்துழைக்கும் நடிகை

எப்படி எப்படி பெயர் வைப்பது என்றே விவஸ்தை இல்லாமல் போய்விட்டது. புதிய படம் ஒன்றுக்கு, 'லவ் பண்ணுங்க சார்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள்.

கதாநாயகனாக லிவிங்ஸ்டன் நடிக்கிறார். கதாநாயகி ப்ரீதா விஜயகுமார். ப்ரீதா விஜயகுமார் நடித்து ஒரு படம்கூட வெளியாகவில்லை. அதற்குள் கைவசம் பல படங்கள்.

தன் தாயார் மஞ்சுளா மாதிரியே ப்ரீதா விஜயகுமாரும் இயக்குநர்கள் மற்றும் கூடநடிக்கும் நடிகர்களோடு பயங்கரமாக ஒத்துழைக்கிறாராம். தாராளமான நடிப்புக்கும் ஓ.கே. ஓ.கே. இப் புகழ் எங்கும் பரவுவதால் இயக்குநர்கள் தேடி ஓடுகிறார்களாம்.

'லவ் பண்ணுங்க சார்' படத்தின் இசை: தேவா. இயக்கம்: சி. ரங்கநாதன். 'டாட்டா பிர்லா', 'ஆஹா என்ன பொருத்தம்' ஆகிய படங்களை இயக்கியவர்.


## தர்ம அடி

நடிகை சிம்ரான்தான் தற்போது படு படு படு பிஸி நடிகை. கேட்பவர்கள் அனைவருக்கும் திகதி கொடுத்துவிட்டு, பணத்தை வாங்கி பெட்டிக்குள் பூட்டுகிறார்.

ஒரே சமயத்தில் மூன்று பட அதிபர்களுக்கு திகதி கொடுத்திருந்தாராம். மூன்று பேரும் வந்து காத்திருந்தனர். நடிகை வேறெங்கோ போய்விட்டார்.

நடிகையின் நிர்வாகிதான் வீட்டில் இருந்தார். பொறுத்துப் பார்த்துவிட்டு, பொங்கியெழுந்த மூவரும் நிர்வாகியை பின்னி எடுத்துவிட்டார்கள்.

ாண்டியராஜன்-புதுமுகம் மயூரி
படம்: கும்பகோணம் கோபாலு



## முத்தமிடத் தடை

சிவகுமாரின் மகன் சூர்யாவும், ப்ரீதா விஜயகுமாரும் இணைந்து நடிக்கும் படம் 'சந்திப்போமா'. இருவரும் கட்டித் தழுவி முத்தமிடும் காட்சி ஒன்றை எடுக்கத் திட்டமிட்டார் இயக்குநர். இந்த சமாச்சாரம் சிவகுமார் காதுக்கு எட்டிவிட்டது. 'முத்தக் காட்சியில் நடிக்க வேண்டாம்' என்று மகனுக்கு கடும் தடை உத்தரவு பிறப்பித்து விட்டாராம். இளசுகள் அல்லவா. தீ பற்றிக் கொண்டால் என்ன செய்வது? அதுதான் முன்னெச்சரிக்கை.



ராதிகா-பேபி பஞ்ஜீதா
படம்: சித்திரச் சோலை

## 'அன்பே'

'உள்ளத்தை அள்ளித்தா', 'மேட்டுக்குடி' போன்ற படங்களை தயாரித்த பட நிறுவனம் புதிதாக தயாரிக்கும் படம், 'அன்பே'. கதாநாயகன், கதாநாயகி புதுமுகம்.

பல விளம்பரப் படங்களில் நடித்து முன் அனுபவம் உள்ள அஸ்வத்தம்மா என்பவர் கதாநாயகனாக நடிக்கிறார். மும்பை அழகி மீனாட்சி குப்தா கதாநாயகி. இவருக்கு போதிய முன் அனுபவம் கிடையாது.

இயக்குநரும் புதியவர். அமர்நாத். இசை: சிற்பி. பாடல்கள்: பழனி பாரதி.

## ல்லூரி மாணவிகளின் நாயகன் மூன்றாமிடத்தில் விஜய்

அஜித்குமார், அப்பாஸ், பிரசாந்த் என்று இளம் ஹீரோக்களின் மார்க்கெட் வீழ்ச்சி கண்டிருக்கிறது.

தனது சகாக்களான இளம் ஹீரோக்களையும், கமல், ரஜினி தவிர்ந்த ஏனைய முன்னணி ஹீரோக்களையும் ஓரம்கட்டிவிட்டு முன்னுக்கு வந்திருக்கிறார் விஜய்.

கமல், ரஜினி படங்களுக்கு அடுத்தபடியாக, விநியோகஸ்தர்கள் நம்பிக்கையோடு வாங்கும் படங்கள் விஜய் நடிக்கும் படங்கள்தான்.

'பூவே உனக்காக' படத்துடன் ஆரம்பமான விஜய் அலை 'காதலுக்கு மரியாதை' மூலம் வீசியடிக்கிறது.

தமிழ் நாட்டு கல்லூரி மாணவிகளிடம் அப்பாஸ், அஜித்குமார் காய்ச்சல் போயே போச்! இப்போது அவர்கள் விஜய் விசிறிகள். விஜய்யின் படப்பிடிப்பு நடப்பதாகத் தெரிந்தால், படையெடுத்து முற்றுகையிடுகிறார்கள்.

விஜய் போல அடக்கமான (காதலுக்கு மரியாதை பாணியிலான) காதலன் வேண்டும் என்கிறார்கள்.

கல்லூரி மாணவிகளின் கனவுக் கன்னியன் (கனவுக் கன்னிக்கு ஆண்பால்) விஜய்தான். ஆனால் விஜய் தனது இன்றைய உச்சம் பற்றி என்ன நினைக்கிறார்?

தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு விஜய் அளித்த பேட்டியில் இருந்து கொஞ்சம்.

**கே: இன்றைய முன்னணி ஹீரோக்கள் வரிசையில் நீங்களும் வந்துவிட்டீர்கள். என்ன நினைக்கிறீர்கள்?**

வி: இருபது வீதம் சந்தோசம். எண்பது வீதம் பயமாகவும் இருக்கு.

**கே: எதுக்குப் பயம்?**

வி: இன்றைய நிலையை தக்க வெச்சுக்கணுமேங்கிற பயம்தான்.

**கே: தன்னம்பிக்கை இல்லையா என்ன?**

வி: ஷ்யூர். பயம் ஒரு பக்கம் இருந்தாக்கூட, இன்னொரு பக்கம் இந்த நிலையை நிச்சயமாக தக்க வைச்சுக்க முடியும் என்று உள்ளுணர்வு சொல்லிக்கொண்டே இருக்கிறது!

**கே: உண்மையை மறைக்காமல் சொல்லுங்கள் விஜய், உங்களுக்கு கேர்ள் ஃபிரண்ட்ஸ் இருக்காங்களா?**

வி: ஷ்யூர்.

**கே: யாரு?**

வி: என்னோட கிராண்ட்மா. தொண்ணூறு வயசாகுது. என்னோட பேரண்ட்ஸைவிட அந்த ஓல்ட் லேடியைத்தான் எனக்கு ரொம்பவும் பிடிக்கும்!

விஜய் பேட்டியில் மறைத்தாலும் அவரது பெண் நண்பிகள் பட்டியல் நீளம்தான்.

## அதிரடித் தோல்வி

சரத்குமார் எதிர்பார்க்கவே இல்லை. அதிரடியாகத் தோற்றுப் போனார். ஆனாலும் சில ஆயிரம் வாக்குகளால் தோற்றதால் சற்று நிம்மதி.

முதல் ஏழு ஹீரோக்களில் ஒருவரான சரத்குமார் தோற்றுப் போனார் மார்க்கெட் இல்லாத ராமராஜன் ஜெயலலிதா உபயத்தில் வென்றுவிட்டார்.

சரத் தோல்வி கண்டதால் ஜெயலலிதாவுக்கு இரட்டிப்பு சந்தோசம். கட்-அவுட் கெட்-அவுட் வசனம் பேசி நடித்தவராச்சே! அதுதான் சரத் என்றால் படு கோபம் அம்மணிக்கு.

தேர்தல் தோல்வி சரத்குமாரின் சினிமா மார்க்கெட்டையும் பாதிக்குமா? என்று தெரியவில்லை. தயாரிப்பாளர்கள் வட்டாரம் தலையைப் பிய்த்துக்கொள்கிறது.

சரத் நடித்துவரும் படம் 'சிம்மராசி' இப்படம் வெளியான பின்னர்தான் சரத் மார்க்கெட் நிலவரம் தெளிவாகும்.

முகப்பில் | விஜய் (நினைத்தேன் வந்தாய்) | ரம்பா



படிப்பகம்

www.padippakam.com

## வெகுளி மீனவன்

எனது வலையில்
மீன்களோடு
மனித எலும்புகளும்–
எத்தனையோ
ஆற்றுப் பொருட்களும் சிக்கும்!
ஆனால்–
ஒரு நாளும் இது சிக்கியதில்லை!
•••
அந்த முந்திரியடி ஆற்றில்
எங்கே ஆழம்,
எங்கே கரை,
எப்போது வந்தும்–
பெருக்கெடுக்கும்
கண்ணாவுக்குள்–
இறால் பிடிக்கலாம்;
அதற்குள்ளேதான்
நண்டு இடுக்குவதும் அதிகம்!
கெழுத்தி பிடிக்க
நீரின் அடியில்
தூண்டில் போட வேண்டும்!
முரல் பிடிக்க
நீரின்மேல் தூண்டில்போட வேண்டும்!
எல்லாமே தெரியும்!
•••
தோணி தொடுக்கத் தெரியும்;
மாறத் தெரியும்;
வலை வீசத் தெரியும்!
ஆனால் இதைத் தெரியாது!
பந்துக்காய் மிதந்துவரும்;
பாத்திருக்கிறேன்!
குரும்பெட்டி வலையில் படும்;
கழட்டி எறிந்திருக்கிறேன்!
ஆனால்
இதைக் கண்டதில்லை!
•••
ஏனைய பொருட்களோடு
இதனையும் கழட்டி வீசிவிட
மனசுவிடாது–
வீடுவரை கொண்டு வந்து போட்டேன்!
•••
மூன்று நாளாய்
எனது குழந்தைகளுக்கு
விளையாட்டுப் பொருள் அது!
•••
இன்று....
என்னவென்று அறியும் ஆவலில்
ஒரு கல்லில் அதனை வைத்து
இன்னுமோர் கல்லால்
தட்டிப் பார்த்தேன்!
காது அடைக்கப் பெரியதோர் இடி
மயங்கி வீழ்ந்தேன்!
•••
அதிஷ்டவசமாய்
வைத்திய சாலையில்
கண விழித்தேன்–
உடல் முழுதும் கட்டுக்களோடு!
•••
இப்போது
எனக்கும் தெரியும்...
ஒரு உருண்டையும்
அதில் கிளிப்பும் இருந்தால்
அது கைக்குண்டென்று!
•••

மீராவோடை– எஸ்.நளீம்.

## குழந்தைகளின் குற்றப் பத்திரிகை

எங்களை கொஞ்சம்
சுதந்திரமாக–
சுவாசிக்க விடுங்கள்!
**
எங்கள்,
சு(த)ந்திரக் காற்றில்
தூசு கலந்தவர்கள்,
நீங்கள்தான்!
நாங்களோ!...
நிரந்தர சமாதானத்தை
ஆசிக்கும்,
அனர்ந்தரக்காரர்கள்.
**
எம்
மூச்சுக்குழலுக்குள்
முட்டி நிற்பது.
நச்சுக்காற்றுக்குள்,
பேச்சுக்குள்ளும்,
விஷப் பூச்சுக்கள்.
**
இந்த,
புவிமண்டலத்தை
புகைக் காடாக்கியது
உங்களின்,
யுத்தங்கள்;
இனச் சந்தங்கள்!
**
சுதந்திரமாக சிந்திக்க,
சில கணம் தாருங்கள்!
நாம் சந்திக்க,
எதிர்காலம்.
ஏக்கத்தோடு காத்திருக்கிறது.
**
எமக்கு,
சிலுவைகளும், சிதைகளும்
வேண்டாம்;
சன்டைகளும்–
குண்டுகளும், இனிவேண்டாம்;
யுத்த 'சூனியம்' வேண்டும்!
சுத்தமான சூழல், எமை
–சுற்றி வர வேண்டும்!
**
வானத்து நட்சத்திரங்களோடு
விளையாடி,
வானவர்களோடு
கைகோர்த்து,
துப்பாக்கிகளை
துடைப்பானாக்கி,
குண்டுகளை,
மலர்ச் செண்டுகளாக,
கொண்டு வருகிறோம்!
முட்களிலும் மலர்களை
முகிழ்விக்கச் செய்கிறோம்!
அதில்,
உங்களை, மகிழ்விக்கச்
செய்கிறோம்!
**
எங்களை கொஞ்சம்
சுதந்திரமாக,
சுவாசிக்க விடுங்கள்!

கவிஞர் கபீர் முஹம்மத் சிராஸ்– மூதூர்–01.

## விதையாக வீழ்ந்தவர்கள்



இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரின் படைகள் சோவியத் யூனியனுக்குள் புகுந்தன. 1941ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் திகதி சோவியத் யூனியன் மீதான ஆக்கிரமிப்பு யுத்தம் ஆரம்பமானது. ஆறு மாதகாலத்தில் சோவியத் யூனியன் வீழ்ந்துவிடும்: வெற்றி நிச்சயம் என்றார் ஹிட்லர்.

ஜெர்மன் படைகள் புயலாகப் புகுந்தன. முதலில் சோவியத் படைகள் பின்வாங்கின. பல இலட்சம் குடிமக்களைக் கொன்றுவித்தது ஜெர்மன் படை.

பசி, பட்டினி, அடக்குமுறை, சுற்றிவளைப்பு, குண்டு முழக்கங்கள் மத்தியிலும் சோவியத் மக்கள் மனம் தளரவில்லை.

ஜெர்மன் படைகளை சோவியத் தலைநகர்வரை உள்ளே இழுத்துக் கொண்டு, தமது படையணிகளை பெருக்கினார் சோவியத் தலைவர் ஸ்டாலின். மொத்தம் 31 மாதங்கள் சமர் நடந்தது. இறுதியாக சோவியத் படைகளின் கிடுக்குப்பிடித் தாக்குதலில் உள்ளே புகுந்து நிலை கொண்ட ஜெர்மன் படைகள் சிக்கின. 1944 ஜனவரி 27ல் ஜெர்மன் படைகள் தோற்றோடின. 31 மாத சமரில் பத்து இலட்சம் ஜெர்மன் படைகள் அழிக்கப்பட்டன.

ஆனாலும் தங்கள் தாய்நாட்டின் மானம் காக்கவும், ஆக்கிரமிப்பை முறியடிக்கவும் கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி மக்களை இழந்தது சோவியத் பூமி. இறுதியில் வென்றது. அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தம் மூலம் முறியடித்தனர்.

உயிர் இழப்புக்கள். சொத்தழிவுகள் கண்டு விரக்தியில் சுருண்டிருந்தால் சோவியத் மக்கள் ஜெர்மன் படைகளின் பூட்ஸ்கால்களுக்கிடையே அடிமைகளாய் வாழ்ந்திருப்பர்.

படத்தில் காணப்படுவது ஜெர்மன் படைகளால் பலியான குடிமக்கள். இவர்கள் விதையாக வீழ்ந்ததால்தான் வெற்றி விருட்சமாக உயர்ந்தது.

## தேன் கிண்ணம்

## அடையாள அட்டை

மனிதனின் இரத்தத்தை உறிஞ்சும்
அட்டையல்ல–இது
மனிதனை காக்கும் அட்டை
*
ஆடையில்லா மனிதன்
அரைமனிதன்!
(அடையாள) அட்டையில்லா மனிதன்
சிறை மனிதன்!
*
ஆலும் வேலும் பல்லுக்குறுதி!
அடையாள அட்டை உயிருக்குறுதி!
*
ஆழமறியாமல் காலைவிடாதே–அடையாள
அட்டையில்லாமல் சாலை வராதே!
*

ஜி.சுதா–கொழும்பு–06.

## இதயத்து அழைப்பிதழ்

உள்ளத்தின்
உணர்வுகள்–உன்
உணர்வால் என்னை
மெல்ல
அணைத்துக் கொள்கிறது!
***
நீ!
யார் என அறியமுன்!
உனக்கு
முகவரியாய்–நான்
மாறிக்கொண்டேன்!
***
என்
பட்டத்து ராணியே
நீ அமரவேண்டிய
சிம்மாசனம்
என்னுள் உண்டு என
இன்னுமா
கண்டுகொள்ளவில்லை?
***
என்றாலும்...
உன் ஆட்சி
நடப்பதால்தான்–என்
ஆயுளும் நீளுகிறது
என
எனக்குள் ஒரு
நம்பிக்கை!
***
இன்றுமென்ன!
வெண்நரை
இழையோடு முன்–என்
நிலை அறிந்து
உன் நிலை உரையாயோ...
***
வா!
நாமும் கரம்பற்றி
புதுப் பிறவி
கண்டிடுவோம்!

சிறீனிவாசன் சிவா–வட்டவளை.

## பேனா நண்பர்கள்



பெயர்: எஸ். சிவராஜா,
வயது: 21
முகவரி: 5, நவகளனிபுர,
ஊருகொடவத்தை,
வெல்லம்பிட்டிய.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, கிரிக்கெட்.



பெயர்: முஹமட் ராசிக்,
வயது: 19
முகவரி: 136, புத்தளம் வீதி, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: டி. தயாழினி,
வயது: 23
முகவரி: C/O. K. JEYASEELAN MANESSE STR. 72, 8003 ZURICH, SWISS.
பொழுது போக்கு: பாடல்கள், நண்பிகளுக்குக் கடிதம் எழுதுவது.



பெயர்: ரிஹானா ரிஸ்மி,
வயது: 20
முகவரி: ROAD NO.102, HOUSE NO.36, CODE NO-85600, BLOCK NO-20, JELEEB AL SHOYKH KUWAIT.
பொழுது போக்கு: வழமையானவை.

## இந்த வாரம் உங்கள் பலன்

(15.03.1998 தொடக்கம் 21.03.1998 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

மீனம் – சூரியன், புதன், செவ்வாய், சனி.
சிம்மம் – இராகு.
மகரம் – வெள்ளி.
கும்பம் – வியாழன், கேது.

★ சந்திரன்– கன்னி, துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– மனக் கவலை, கடன் தொல்லை. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– தொழில் விருத்தி, பண வரவு. | பகல் | 11 | மணி |
| புதன்– பிரயாண மிகுதி, உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்– வெளியிட வாழ்க்கை கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| சனி– பெரியோர் பகை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–1

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– மன மகிழ்ச்சி, குடும்ப சுகம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்– பலவித பேறு, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 | மணி |
| புதன்– வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| வியாழன்– தொழில் மந்தம், கடன் தொல்லை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி– வீண்குறை கேட்டல், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி– இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்– துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்– பலவித பேறு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்– அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| வெள்ளி– தொழில் மந்தம், உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| சனி– காரியத் தடை, மனச் சஞ்சலம். | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–5

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்– தொழில் மந்தம், கடன் தொல்லை. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– பெரியோர் நன்மை, பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| புதன்– வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 1 | மணி |
| வியாழன்– கௌரவ மிகுதி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வெள்ளி– மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. | 2 | மணி |
| சனி– காரியானுகூலம், பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்– தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் | 11 | மணி |
| செவ்வாய்– பிரயாண கஷ்டம், செலவு மிகுதி. | மு.ப. | 10 | மணி |
| புதன்– தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்– வெளியிடப் பயணம், கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| சனி– வீண் முயற்சி, பயனற்ற செயல். | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– மனக் கவலை, உறவினர் பகை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 | மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| புதன்– பெரியோர் சகாயம், பலவித பேறு. | மு.ப. | 10 | மணி |
| வியாழன்– தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| சனி– தொழில் மந்தம், செலவு மிகுதி. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்–வெள்ளி, அதிஷ்ட இலக்கம்–6

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– தொழில் விருத்தி, பண வரவு. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்– வீண் விரயம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்– பெரியோர் உதவி, புதிய முயற்சி. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி– தொழில் சிறப்பு, கௌரவ மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி– பயனுள்ள செயல், உயர்ந்த நட்பு. | மு.ப. | 10 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| திங்கள்– தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் | 12 | மணி |
| புதன்– முயற்சி பலிதம், கௌரவ மிகுதி. | பகல் | 11 | மணி |
| வியாழன்– துயர் நீங்கும், இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி– அந்நியர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 | மணி |
| சனி– பயனற்ற செயல், மனக் கவலை. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 3 | மணி |
| திங்கள்– பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| புதன்– தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்– மனக்குறை நீங்கும், அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| வெள்ளி– பெரியோர் சகவாசம், பயனற்ற செயல். | பி.ப. | 2 | மணி |
| சனி– தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–புதன், அதிஷ்ட இலக்கம்–5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– உறவினர் பகை, மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்– வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்– தொழில் மந்தம், கடன் படல். | பி.ப. | 2 | மணி |
| புதன்– பெரியோர் நட்பு, பயனற்ற செயல். | மு.ப. | 1 | மணி |
| வியாழன்– வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| சனி– இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–திங்கள், அதிஷ்ட இலக்கம்–7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்– தொழில் விருத்தி, இனசன நன்மை. | பகல் | 10 | மணி |
| செவ்வாய்– அந்நியர் சகவாசம், மனக்கவலை நீங்கும். | பி.ப. | 2 | மணி |
| புதன்– இனசன நன்மை, பயனுள்ள செயல். | பி.ப. | 1 | மணி |
| வியாழன்– தொழில் உயர்ச்சி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– வீண்குறை கேட்டல், மனக்குறை நீங்கும். | பகல் | 12 | மணி |
| சனி– பெரியோர் உதவி, குடும்ப சுகம். | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–வியாழன், அதிஷ்ட இலக்கம்–4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு– பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்– துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்– வெளியிடப் பயணம், மனக் கவலை. | மு.ப. | 10 | மணி |
| புதன்– அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 | மணி |
| வியாழன்– தொழில் விருத்தி, பண வரவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி– பெரியோர் உதவி, பொருள் விரயம். | பகல் | 12 | மணி |
| சனி– தொழில் விருத்தி, உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்–செவ்வாய், அதிஷ்ட இலக்கம்–5



படிப்பகம்

## ஒழுங்கான உறக்கம்

ஒரு சில நாட்கள் சரியாக உறக்கம் வரவில்லை என்றால், அதனால் தொல்லை ஏற்படுவதில்லை. ஆனால் தொடர்ந்து பல நாட்கள் தூக்கம் வராவிட்டால், அது பல நோய்களுக்குக் காரணமாக அமைந்து விடும்.



இரவில் சரியாகத் தூக்கம் வராதவர்கள் கவனிக்க வேண்டியவை:

• பகலில் தூங்குவதைத் தவிர்த்திடுங்கள். பகலில் தூங்குபவர்களுக்கு இரவில் தூக்கம் வருவது தாமதமாகிறது.

• தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள். உடல் ஆரோக்கியமாக இருந்தால் தூக்கம் தானாக வந்துவிடும்.

• தினமும் இரவில் குறிப்பிட்ட நேரத்தில் தூங்கச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அந்தப் பழக்கம் உடலுக்கும் கண்களுக்கும் ஆரோக்கியம் தரும்.

• பகல் முழுவதும் நிறைய வேலை பார்ப்பவர்களுக்கு டென்ஷனும், மன அழுத்தமும் ஏற்படும். இவைகளோடு படுக்கையறைக்குச் செல்லாமல், சிறிது பொழுதை உல்லாசமாகச் செலவழித்துவிட்டுப் படுக்கைக்குச் செல்லுங்கள்.

• இரவில் தாமதமாகச் சாப்பிடக்கூடாது. ஜீரணமாகத் தாமதமாகும் உணவுகளை அதிகம் சாப்பிடாமல் இருப்பது நல்லது. அஜீரணத்தாலும் இரவுத் தூக்கம் பாதிக்கப்படும்.

• தூங்கச் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்புவரை கோப்பி, தேனீர் குடிப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

• காரசாரமான விவாதம், ஆழ்ந்த படிப்பு, கிளர்ச்சியூட்டும் ரீ.வி.படங்கள் போன்றவைகளைப் பார்த்துவிட்டுத் தூங்கச் சென்றால் தூக்கம் பாதிக்கப் படும்.

• அதிகமான உஷ்ணம், அதிக வெளிச்சம், அதிக சத்தம் போன்றவை உங்கள் படுக்கை அறையை நெருங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

• சுகாதாரமான, சுத்தமான, காற்றோட்டமான இடத்தில் படுக்கை அறை இருப்பது நல்லது. படுக்கையும் சுத்தமாக இருக்க வேண்டும்.

• இரவு உணவு சாப்பிட்டபின்பு சிறிது நேரம் நடப்பது தூக்கத்திற்கு நல்லது.

• இரவு சாப்பிடுவதற்கு முன்னால் குளிர்ந்த நீரில் குளித்தால் அல்லது உடலைக் கழுவினால் நன்றாக உறக்கம் வரும்.

• மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தூக்க மாத்திரை சாப்பிடவே கூடாது. செயற்கைத்தனமான தூக்கத்தை வரவழைப்பதைவிட, தூக்கம் ஏன் வரவில்லை என்பதற்கான காரணத்தை அறிவதே நல்லது. □

## காலையில் ஏன் காலில் சக்கரம்?

வேலைக்குச் செல்லும் பெண்களானாலும் சரி, வீட்டில் இருக்கும் பெண்களானாலும் சரி, காலை நேர பரபரப்பு (டென்ஷன்) என்பது தவிர்க்க முடியாததாகும். சரியான திட்டமிடல் இருந்தால், காலில் சக்கரத்தை பூட்டிக்கொண்டு திரிவதுபோன்ற இத்தகைய பரபரப்பைத் தவிர்க்கலாம். இதற்கு விடை கொடுக்க சில டிப்ஸ்:



★ இரவில் அதிகநேரம் கண்விழிப்பதைத் தவிர்த்து, காலையில் வழக்கத்தைவிட அரைமணி நேரம் முன்னதாக எழுந்திருக்கப் பழகிக் கொள்ளுங்கள்.

★ அடுத்த நாள் காலை, சமையலுக்குத் தேவையான அரிசி, பருப்பு, காய்கறிகள் போன்ற அனைத்தையும் தயாராக எடுத்து வையுங்கள். குளிர்சாதனப் பெட்டி இருந்தால் சமையலுக்குத் தேவையான மசாலா வகைகளை முதல்நாளே அரைத்து வைத்து விடலாம்.

★ காலையில் எழுந்ததும், சமையலுக்கு வேக வைக்க வேண்டிய பொருட்கள் அனைத்தையும் சிறிது மட்டும் ஊற வைத்து விடுங்கள். இதனால் சமையல் விரைவாக முடிவதுடன், எரிபொருளும் மிச்சமாகும்.

★ அன்றன்று உடுத்தும் உடைகளை அன்றன்றே துவைப்பது நல்லது. விடுமுறை நாட்களில் சேர்த்து வைத்து துவைத்துக் கொள்ளலாம் என விட்டு விட்டால் பிறகு வேலை மலைப்பாக இருக்கும்.

★ அதேபோல அடுத்தநாள் உங்களுக்கும், குழந்தைகளுக்கும் தேவையான உடைகள் உள்ளாடைகள் போன்றவற்றை முதல் நாளே எடுத்து வைத்து விடலாம்.

★ விடுமுறை நாட்களை, துணிகளுக்கு இஸ்திரி பண்ணுவது, கிழிந்தவற்றைத் தைப்பது, பட்டன்கள் தைப்பது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

★ வேலைக்குச் செல்லும் பெண்ணாக இருந்தால், காலை வேளைகளில் சுலபமான அதே சமயம் சத்தான உணவுகளைச் சமைக்கப் பழகிக்கொள்ளலாம்.

## கண்ணீரில் கரைந்த இரவுகள் 26

ஆண்ட்ரு-சாரா இருவரும் பிரியவேண்டியளவுக்கு மனக் கசப்புக்கள் பெரிதாகின.

எலிசபெத் மகாராணிக்கு முன்னர் பிடித்தமான மருமகளாக இருந்த சாரா, இப்போது பிடிக்காத பிசாசாகிவிட்டாள்.

அதனால் டயானாவை தன் கைக்குள் போட்டுக்கொள்ள நினைத்தார் மகாராணி. மருமகள்கள் ஒன்று சேர்வதை தடுக்கவும் மகாராணி திட்டமிட்டார்.

ஆனால், மகாராணியின் தந்திரம் டயானாவிடம் பலிக்கவில்லை.

மகாராணியான மாமியாரின் குடுமி சும்மா ஆடாது என்பது அத்தனை வருட கால அனுபவத்தில் டயானாவுக்கு தெரியாதா என்ன?

சாராவிடம் முன்பைவிட அதிக நட்பு பாராட்டத் தொடங்கிவிட்டார் டயானா.

ஆண்ட்ரு பற்றி சில அந்தரங்க விவகாரங்களை சாரா தன்னிடம் கூறி கண்ணடிக்கும்போது மட்டும் டயானாவுக்கு பிடிப்பதில்லை.

சாராவுக்கு ஆண்ட்ரூ ஈடு கொடுக்கும் ஜோடியல்ல என்றும், அதனால்தான் எண்ணெய் வியாபாரியான ஸ்ரீவ் என்பவரை அடிக்கடி நாடிப்போகிறாள் சாரா என்றும் பத்திரிகைகள் கிசுகிசுத்தன.



டயானா நோயாளிச் சிறுமியுடன்

டயானாமீது பிரிட்டிஷ் மக்களுக்கு இருந்த அன்பும், அபிமானமும் சாராமீது இருக்கவில்லை.

டயானா போலவே சாராவுக்கும் இரண்டு குழந்தைகள். ஆனால் டயானா தன் குழந்தைகள்மேல் மட்டற்ற பாசம் கொண்ட தாயாக இருந்தார்.

சாரா அப்படியில்லை. பிள்ளைகளை தனியாக விட்டுவிட்டு வெளிநாட்டு பயணங்கள் போய்விடுவாள். இரண்டும் பெண் குழந்தைகளாக இருந்தும்கூட சாரா கரிசனை காட்டாமல் உல்லாசம் தேடி அலைந்ததை பத்திரிகைகளும் விமர்சித்தன.

### வெளியேற்றம்

சாரா தன் ஆண் நண்பர்களை தொடர்ந்து சந்தித்து வந்தாள். 'எண்ணெய் வியாபாரியின் பங்களாப் பக்கம் அடிக்கடி காணப்பட்டாள்' என்று செய்திகள் வெளியாகின.

இனியும் சகிப்பதில்லை என்று சாராவை அரண்மனையில் இருந்து வெளியேறச் சொன்னது அரச குடும்பம்.

இது தொடர்பாக அமெரிக்க 'ரைம்ஸ்' சஞ்சிகை பின்வருமாறு எழுதியிருந்தது:

"பிரிட்டிஷ் இளவரசர் ஆண்ட்ருவை மகிழ்வூட்ட அரச குடும்பத்தில் இணைந்தவர் சாரா.

1986ல் தனது இளம் வயதில் அழகிய பெண்ணாக இருந்தபோதும், அவளுடைய அதிகரித்த உடல் எடையும், தலை அலங்காரமும், உடைகளும் விமர்சிக்கப்பட்டன.

அரச குடும்பத் திருமணங்கள் வெற்றி தரும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகின்றன.

என்றாகிவிட்டது.

தம்பதியர் பிரிந்தாலும் இருவருக்கும் பிறந்த பியற்றிஸ் (3) மற்றும் இயூஜ்னி (2) ஆகிய பெண் குழந்தைகள் தாயாருடன் வசிப்பர் என்றே தெரிகிறது.

சாரா ஆண்ட்ருவை விவாகரத்து செய்துவிட்டு, வேறு மணம்செய்து கொள்ளாமல் இருந்தால் தொடர்ந்தும் யோர்க் சீமாட்டி என்ற அந்தஸ்துடன் வாழலாம்," என்று 'ரைம்ஸ்' எழுதியிருந்தது.

ஆண்ட்ருவைவிட்டு பிரிந்த பின்னர் இன்றுவரை சாரா மறுமணம் புரியாமல் இருப்பதன் இரகசியமும் அதுதான்.

### பாகிஸ்தான் விஜயம்

சாரா அரண்மனையைவிட்டு வெளியேறியபோது, டயானா கவலையுற்றார். சாராவின் கருத்துக்கள், நடைமுறைகள் அனைத்தோடும் டயானாவால் ஒத்துப்போக முடியாவிட்டாலும், தனக்கென்று அரண்மனையில் இருந்த ஒரேயொரு சிநேகிதியை இழப்பது துன்பமாக இருந்தது.

தனிமையில் இருப்பதைவிட வெளியே சென்று நோயாளர்களுடனும், ஏழைகளுடனும் நேரத்தைச் செலவிடுவது மேல் என்று டயானா கண்டுகொண்டார்.

இதற்கிடையே பாகிஸ்தானுக்கு டயானா விஜயம் செய்தபோது, அங்கு குழுமியிருந்த மக்களைக் கண்டதும் டயானாவுக்கு தன் கண்களையே நம்பமுடியவில்லை.

சுமார் 50 இலட்சம் மக்கள் டயானாவைக் காண்பதற்காக குழுமியிருந்தனர்.

டயானாவால் நம்ப முடியவில்லை.

அன்பிலும் அரண்மனையில் பட்ட துன்பங்கள்கூட பஞ்சுபோல பறந்தன.

என்ன நல்ல காரியம் செய்தாலும் அரண்மனையில் மனம் திறந்து பாராட்டமாட்டார்கள்.

மனம் திறந்து பேசுவதுகூட சம்பிரதாயக் குறைச்சல் என்று நினைக்கும் அளவுக்கு இயந்திர மனிதர்களாக, போலிச் சம்பிரதாயங்களின் கலவையாக இருந்தனர் அரச குடும்பத்தினர்.

### எய்ட்ஸ் நோயாளிகள்

இனிமேலும் அரண்மனைக்குள் கிடந்து புழுங்குவதில் பயனில்லை என்பதை டயானா நன்குணர்ந்தார்.

மகாராணி குடும்பம் மனிதர்களை மதிக்கப்போவதில்லை. அதனால் அக்குடும்பத்தைச் சுற்றிக்கொண்டு இருப்பதில் அர்த்தமில்லை. அவர்களிடம் அன்பை நாடுவதிலும் அர்த்தமில்லை என்பது திட்டவட்டமாகத் தெரிந்து போனது.

தனது சேவைகளை விரிவாக்கத் திட்டமிட்டார். மகாராணியிடமோ, சாள்ஸிடமோ கலந்தாலோசித்தால் காரியத்தைக் கெடுத்துவிடுவார்கள் என்பது தெரியாதா என்ன! அதனால் தன் சொந்த எண்ணப்படியே முடிவுகளை மேற்கொள்ளத் தொடங்கினார்.

சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களாக கருதப்பட்ட எய்ட்ஸ் நோயாளிகளின் பக்கம் டயானாவின் பார்வை சென்றது. எய்ட்ஸ் நோயாளிகளின் அருகில் சென்றால்கூட ஆபத்து. எய்ட்ஸ் தொற்றிவிடும் என்றெல்லாம் தப்பான எண்ணங்கள் இருந்த நேரம் அது.

எய்ட்ஸ் நோயாளிகளை எல்லோரும்



ஸ்ரீவ்

புவணா

அருவருப்புடன் நோக்கினர். தீண்டத்தகாத ஜீவராசிகள் போல நடத்தினர்.

எய்ட்ஸ் நோயாளிகளைச் சென்று பார்வையிட்ட டயானா, அவர்களது கட்டிலிலும் ஏறி அமர்ந்து கொண்ட காட்சிகள் பத்திரிகைகளில் பிரசுரமாகின.

உலகமே மூக்கின்மேல் விரலை வைத்து வியந்து போனது. எய்ட்ஸ் நோயாளிகள்

## இதயராணியான இளவரசி

ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

எய்ட்ஸ் என்பது கொடிய வியாதிதான். ஆனால் எய்ட்ஸ் நோயாளியை தொடுவதாலோ, அவருடன் பழகுவதாலோ எய்ட்ஸ் தொற்றுவதில்லை என்பதை நம்பவைக்க டயானாவின் சந்திப்பை எய்ட்ஸ் நோயாளர் நலன்புரி அமைப்புக்கள் பயன்படுத்திக் கொண்டன.

எய்ட்ஸ் நோயாளிகளை டயானா சென்று பார்வையிட்டதைக்கண்டு உலகம் வியந்தது. மகாராணி குடும்பம் மட்டும் மனம் கசந்தது.

டயானாவைக் கண்டதும் சற்று எட்டத்திலேயே நின்று கொண்டனர். எய்ட்ஸ் கிருமிகளை காவித்திரியும் ஒருவரைப்போலவே அவரை நோக்கினர்.

டயானா தெரிந்தும் தெரியாததுபோல் நடந்து கொண்டதுடன், அடுத்துச் செய்த காரியத்தால் அரச குடும்பத்தையே அதிர்ச்சியடையச் செய்தார். குஷ்டரோகம் என்றாலே தொடுவதற்கே அருவருப்புப்பட்டு பலரும் ஒதுங்கிப் போவர்.

ஆனால், டயானாவோ, குஷ்டரோகிகளை சென்று பார்வையிட்டது மட்டுமல்லாமல், அவர்களைத் தொட்டு நலம் விசாரித்தார்.

மகாராணி குடும்பம், 'டயானா உதவாக்கரைதான்' என்று மீண்டும் ஒரு தடவை தம் எண்ணத்தை உறுதிப்படுத்திக் கொண்டது.

'குஷ்டரோகிகளுடன் இளவரசி' என்று புகைப்படங்கள் வெளியாகின.

மகாராணி குடும்பத்தின் மனதில் இருந்து இறக்கிவிடப்பட்டுக் கொண்டிருந்த இளவரசி டயானா, மக்களின் இதயங்களில் குடியேறத் தொடங்கியிருந்தார்.

டயானா....டயானா....டயானா...! பிரிட்டிஷ் மக்கள் தங்கள் இளவரசியை எண்ணி பெருமைப்பட்டார்கள்.

ஒரு ஏழைப் பெண்மணி இப்படி விபரித்தார்: "இவருக்கு முற்பட்ட மகாராணிகளும், இளவரசிகளும் எங்களை விட்டு எங்கோ உயரத்தில் இருந்தார்கள். இவரோ நாங்கள் தொடக்கூடிய தூரத்தில் இருக்கிறார்."

ஆனால் பெரும்பாலும் தம்பதிகள் தனித்தனியாகவே வாழ்க்கை நடத்துகின்றனர்.

அவர்களுடைய கடமைகளும், நண்பர்களும், கவனங்களும் வேறு வேறானவைதான்.

செவிலித் தாய்மார்கள்தான் குழந்தைகளை வளர்க்கிறார்கள். பெற்றோர் தங்கள் குழந்தைகளை கால நேரம் குறித்துத்தான் சென்று பார்க்கின்றனர்.

சாரா தனது கணவர் ஒரு தமாஷான வாழ்க்கைத் துணை என்றே கருதினார். ஆனால் அவர் முற்றிலும் வித்தியாசமானவராக, ஒரு கோல்ஃப் ஆட்டக்காரராக தென்படுகிறார்.

சாரா தன் சிநேகிதியான டயானாவின் வாழ்க்கையுடன் தன் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்தாள்.

டயானாவின் கணவர் இளவரசர் சாள்ஸ் டயானாவிடம் பேசுவதைவிட, மரஞ்செடி கொடிகளுடன் பேசுவதையே விரும்புகிறார் என்பதையும் அறிவார்.

டயானாவுக்கு காதல் லீலைகளில் அத்தனை முன் அனுபவம் இல்லை. ஆனால் சாரா அமெரிக்க எண்ணெய் வியாபாரியான ஸ்ரீவ்வுடன் மொறாக்கோ, ஃபிரான்ஸ் போன்ற நாடுகளுக்கு உல்லாசப் பயணம் சென்றுள்ளாள்.

மகாராணி சாராவை அழைத்து கண்டித்தார். சரிப்படவில்லை. இருவரையும் சட்டப்படி பிரிப்பதைத் தவிர வேறு வழியில்லை



பேர்கி

அதற்கு முன்னர் எங்கும், எப்போதும் இத்தகைய பிரமாண்டமான மக்கள் கூட்டத்தை டயானா பார்த்ததும் இல்லை.

'இத்தனை பேரும் என்னைக் காண வந்தவர்களா?' என்று தன்னையே கேட்டுக் கொண்டார்.

அரண்மனையில் உதவாக்கரை என்று வர்ணிக்கப்படும் தன்மேல் உலக மக்கள் எத்தனை வாஞ்சையுடன் இருக்கிறார்கள், என்பதை எண்ணி நெகிழ்ந்து போனார் டயானா.

அந்த நெகிழ்விலும், மக்களின் பிரமாதமான

(அடுத்த வாரமும் வரும்)


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை DI

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 21-03-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? இராஜகிரிய வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

எம். தர்ஷினி,
97/2, கமத்தவத்த வீதி, வெலிகட,
இராஜகிரிய.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





பிள்ளைக் கனி அமுதே-கண்ணம்மா
பேசும் பொற் சித்திரமே!
அள்ளி அணைத்திடவே-என்முன்னே
ஆடி வருந்தேனே!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# இக்கரைக்கு அக்கரை பச்சை

மான் ஒன்று ஓடையில் நீர் குடிக்கச் சென்றபோது சிங்கத்தால் துரத்தப்பட்டு எப்படியோ தப்பிக்கொண்டது. அன்று முதல் அந்த மான், சிங்கம் என்றாலே பயந்து கொண்டிருந்தது.

எனவே மான் மனிதர்கள் வாழும் நாட்டிற்குள் சென்றால், பயமின்றி வாழலாம் என்று நினைத்து காட்டை விட்டுப் புறப்பட்டது.

மான் சென்று கொண்டிருந்த வழியில் ஆடு ஒன்று காட்டை நோக்கி வேகமாக வந்து கொண்டிருப்பதைப் பார்த்து,

"இவ்வளவு வேகமாக வருகிறாயே, எங்கே?" என்று கேட்டது மான்.

"காட்டிற்குத்தான்!" என்றது ஆடு.

"ஏன்?" என்று கேட்டது மான்.

"காட்டில் பயமின்றி வாழத்தான்," என்றது ஆடு.

"நாட்டில் என்ன பயம்?" என்று கேட்டது மான்.

"மனிதர் பயம்தான்," என்று சொன்னது ஆடு.

"என்ன! மனிதர் பயமா? சிங்கத்தை விட மனிதர்கள் பொல்லாதவர்களா?" என்று வியப்பாகக் கேட்டது மான்.

"ஆமாம். சிங்கத்தை விட மனிதர்கள் மிகவும் பொல்லாதவர்கள். சிங்கம் பசித்தால்தான் நம்மைக் கொல்லும். ஆனால் மனிதர்கள் எம்மைக் கொன்று தின்பதற்காகவே வளர்க்கிறார்கள். சிங்கத்திடமிருந்து தப்பிக்கொள்ளலாம்; ஆனால் மனிதர்களிடமிருந்து தப்பவே முடியாது.

நல்லவேளை இன்று என்னைக் கொல்லப் பார்த்தார்கள். முன்னரே இதை அறிந்து நான் அவர்களிடமிருந்து தப்பிக் கொண்டேன். இல்லாவிட்டால் இந்நேரம் அவர்களுக்கு உணவாகியிருப்பேன்" என்று சொன்னது ஆடு.

இதைக் கேட்ட மானுக்கு சிங்கத்தின் பயம் போய்விட்டது. அதற்குப் பதில் மனிதர்கள் என்றாலே பயம் வந்து விட்டது. எனவே தற்போது இருக்கும் காடே நலம் என்று கருதி, ஆட்டிற்கு நன்றி கூறிவிட்டு மறுபடி காட்டை நோக்கிச் சென்றது மான்.

இக்கரையில் இருந்து பார்த்தால் அக்கரை பச்சையாக இருக்கும். ஆனால் அக்கரைக்குப்போய்ப் பார்த்தால், அக்கரையும் இக்கரையைப் போல்தான் இருக்கும்.



# அதிசயம்-ஆனால் உண்மை!



**தந்திச் செடி:** ← ஆசியாக் கண்டத்தில் காணப்படும் ரெலிகிராப் பிளாண்ட் (தந்திச் செடி) என்ற தாவரத்தின் இலைகள் காற்று வீசாவிட்டால்கூட பரபரவென்று அசைகின்றன.



**கிறிஸ்து சிலை:** ↑ ஸ்பெயின் நாட்டில் உள்ள போர்கோஸ் என்ற இடத்தில் இருக்கும் தேவாலயத்தில் . இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட சிலை ஒன்று உண்டு. இச் சிலையில் உள்ள தலைமுடி, புருவங்கள், தாடி, கை, கால் நகங்கள் உண்மையான நகங்கள், முடி கொண்டு உருவாக்கப் பட்டுள்ளன.



**பரோனஸ் டிமோர்:** → 1751-1829 வரை வாழ்ந்த பரோனஸ் டிமோர் என்ற பெண் எழுத்தாளர் 30 வருடத்தில் 320 நாவல்களை எழுதினார்.



**மீன் 3 தூண்டில் 1:** ← இங்கிலாந்தில் உள்ள அவான் நதியில் 1925ம் ஆண்டு மீனவர் ஒருவர் போட்ட ஒரு தூண்டிலில் 3 மீன்கள் சிக்கின. முதல் மீனை இரண்டாவது மீனும்; இரண்டாவது மீனை மூன்றாவது மீனும் விழுங்க முயற்சித்தே தூண்டிலில் சிக்கின.

# வாரம் ஒரு நாடு



## அல்ஜீரியா

தலைநகர் - அல்ஜீயர்ஸ்
பரப்பு - 23,81,741 சதுரகிலோமீட்டர்
மக்கள் தொகை - 2.79 கோடி
மொழி - அரபி, பெர்பெர், ஃபிரெஞ்சு
எழுத்தறிவு - 52%
சமயம் - இஸ்லாம்
நாணயம் - தினார்
தனிநபர் வருமானம் - 2450 டொலர்

**அமைவிடம்:**

வடமேற்கு ஆபிரிக்க நாடு. வடக்கில் மத்தியதரைக் கடலும்; கிழக்கில் துனீஷியா மற்றும் லிபியாவும்; மேற்கில் மொராக்கோ மற்றும் மேற்கத்திய சகாராவும்; தெற்கில் மௌரிடோனியா, மாலி மற்றும் நைஜரும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

ஃபிரெஞ்சு காலனியாக இருந்த அல்ஜீரியா 1962 ஜூலையில் சுதந்திரம் பெற்றது. தேசிய விடுதலை முன்னணி என்னும் ஒரு கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது. 1967ல் இஸ்ரேலுடன் போர் மூண்டபோது, அல்ஜீரியா, அமெரிக்காவுடனான தனது தொடர்பை விலக்கிக்கொண்டது.

**பொருளாதாரம்:**

நாட்டின் முக்கிய தொழில் கால்நடை வளர்ப்பு. கோதுமை, பார்லி போன்றவை முக்கிய விளைபொருட்கள். எண்ணெய் சுத்திகரிப்பு, சீமெந்து, உருக்கு சார்ந்த தொழிற்சாலைகள் உண்டு.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 21.03.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 236
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


## வர்ணம் தீட்டும் போட்டி இல: 234

**பரிசுக்குரியவர்:**
செல்வி என். தர்ஷனி,
பு/எருக்கலம்பிட்டி மு.த.வித்தியாலயம், நாகவில், பாலாவி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. பிரதாப், புனித அந்தோனியார் மத்.க. வத்தளை. | எம்.எம். நிலுஜான், கரு/ஜீலான் மத்திய.கல்:, ஹேனமுல்லை, பாணந்துறை. |
| ஃபாத்திமா ஃபயாஸா அமீர், அல் ஹிதாயா மகா வித்தியாலயம், கொழும்பு. | ஜெ. சுதர்ஷினி, பது/மொரகொல்ல தமிழ்.வித்தியாலயம், ஹாலி-எல. |
| ஆர். சுரதிஸ், க/கலாபொக்க த.வி. மடுல்கெல. | என். யோகராஜ், நு/ மெதடிஸ்ட் தமிழ் மகா வித்., கந்தபொலை. |
| எம். சிவசங்கர், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா | வி. ஜெயராணி, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. |
| ம. கோமதி, புனித கெப்ரியல் மகளிர் வித். ஹட்டன். | அ. கிருபானந், கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. |

# சுரங்க ரயில்கள்



உலகின் 11 நகரங்களில் சுரங்க ரயில் பாதைகள் இருக்கின்றன. அந்த 11 நகரங்களும் அவை அமைந்துள்ள நாடுகளும், அங்கு சுரங்க ரயில் அமைக்கப்பட்ட ஆண்டுகள் பற்றிய விபரங்களும் வருமாறு:

| நகரம் | நாடு | ஆண்டு |
|---|---|---|
| 1. இலண்டன் | இங்கிலாந்து | 1863 |
| 2. நியூயோர்க் | அமெரிக்கா | 1868 |
| 3. பாரிஸ் | ஃபிரான்ஸ் | 1900 |
| 4. புடாபெஸ்ட் | ஹங்கேரி | 1910 |
| 5. டோக்கியோ | ஜப்பான் | 1927 |
| 6. ஒசாகா | ஜப்பான் | 1933 |
| 7. மொஸ்கோ | ரஷ்யா | 1935 |
| 8. மெக்ஸிக்கோ சிட்டி | மெக்ஸிக்கோ | 1969 |
| 9. சாவ் பாவ்லோ | பிரேஸில் | 1974 |
| 10. சியோல் | தென்கொரியா | 1974 |
| 11. கல்கத்தா | இந்தியா | 1984 |

ஜப்பான் நாட்டில் மட்டும் இரண்டு நகரங்களில் சுரங்க ரயில்கள் ஓடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபலமான தலைவர்கள் இறந்து விட்டால் தேசியக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடுவார்கள். இப்பழக்கம் 1612ம் ஆண்டு ஏற்பட்டது. பிரிட்டிஷ் நாட்டு கப்பல் கப்டன் எஸ்கிமோக்களால் 1612ம் ஆண்டு கொல்லப் பட்டார். அப்போதுதான் முதன் முதலாக பிரிட்டிஷ் கொடி கப்பலில் அரைக்கம்பத்தில் பறக்க விடப் பட்டது. அதன் பின்னர்தான் பிரபலமான தலைவர்கள் இறந்தால் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடும் வழக்கம் கடைப்பிடிக்கப்படுகிறது.

# குடையின் வரலாறு

- ரோமானியப் பெண்கள்தான் முதன் முதலில் குடைபிடிக்கும் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்கள். அவர்கள் வெளியே செல்லும்போது மழையாலோ, காற்றினாலோ கூந்தல் அலங்காரம் கலையாமல் இருக்க சிறு குடைகளைப் பயன்படுத்தினார்கள்.
- முதலில் குடைகள் முரட்டுத் துணியாலும் தோலாலுமே செய்யப்பட்டன.
- துணியால் செய்யப்பட்ட குடைகளை முதன் முதலாகப் பயன் படுத்தியவர்கள் இத்தாலிய மக்கள். இவர்கள் கி.பி. 16ம் நூற்றாண்டில் குடையைப் பயன்படுத்த ஆரம்பித்தனர்.



- 1850ம் ஆண்டுக்குப் பின்னர் கறுப்புத் துணி மற்றும் இரும்புக் கம்பிகளால் குடைகள் தயாரிக்கப்பட்டன.
- 1911ம் ஆண்டுக்குப் பின்னர்தான் பட்டு, நைலோன் போன்ற துணிவகைகளைக் குடைகளுக்குப் பயன்படுத்த ஆரம்பித்தனர்.

# முதல் பத்திரிகை



உலகைக் காட்டும் கண்ணாடியாக இன்று பத்திரிகைகள் விளங்கி வருகின்றன.

கி.மு. 5வது நூற்றாண்டில் ரோம் நகரில் தூர இடங்களில் உள்ள மக்களுக்கு செய்திக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அந்தச் செய்திக் கடிதத்தில் தலைநகரில் நடந்த நிகழ்ச்சிகள் விவரிக்கப்பட்டிருந்தன. இதை கி.மு.60ம் நூற்றாண்டில் ரோமச் சக்கரவர்த்தி ஜூலியஸ் சீசர் ஒழுங்குபடுத்தினார்.

ரோம் அரசின் அறிக்கைகள் பொது மக்கள் பார்வைக்காக சுவரொட்டிபோல் ஒட்டப்பட்டன. இது 'அக்டா து திருனா' என்று அழைக்கப்பட்டது. இதன் அர்த்தம் 'தினசரி நடவடிக்கை' என்பதாகும்.

முதல் பத்திரிகை 1663ம் ஆண்டு இலண்டனில் வெளிவந்தது. இதன் பெயர் 'இன்டெலிஜென்சர்' ஆகும். அமெரிக்காவில் 1690இல் முதன் முதலாக பத்திரிகை வெளியானது. அமெரிக்க புரட்சியின்போது மொத்தம் 37 பத்திரிகைகள் அமெரிக்காவில் இருந்து வெளியாகின.

# குட்டிச் செய்திகள்

★ அமெரிக்காவுக்கு 'ஐக்கிய அமெரிக்க நாடு' என்று பெயரிட்டவர் இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில்.

★ ஃபிலிப்பைன்ஸ் நாட்டில் மொத்தம் 7100 தீவுகள் உள்ளன.

★ நமது உடலின் வெப்பத்தில் 80 சதவீதம் தலைமூலமாகவே வெளியேறுகின்றது.

★ மனித மூளை தன் ஆயுட்காலத்தில் பத்துக்கோடி செய்திகளைச் சேமிக்கும் திறன்கொண்டது.

★ உலகிலேயே மிக அதிகமாகக் கிடைக்கும் உலோகம் அலுமீனியம்.

★ ஜப்பானில் உள்ள ஒருவகை நண்டு, தன் கால்களை 12 அடிவரை நீட்டும் தன்மையுடையது.

★ 'ஜென்டூ' எனப்படும் பெங்குவின் இனப்பறவைகள் தங்கள் கூடுகளைக் கற்களால் கட்டுகின்றன.

★ உலகில் அதிக அளவில் பயன்படுத்தும் காய்கறி வெங்காயம்தான்.

★ ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த நெரால்ட் என்பவர்தான் ஐஸ்கிறீமைக் கண்டுபிடித்தவர்.

# இடி விழுவது எப்படி?



மழைக்காலத்தில், 'இடி விழுந்து மரணம்' என்று பத்திரிகைகளில் செய்திகள் வருவதைப் படித்திருப்பீர்கள். இடி எப்படி விழுகிறது?

'தொபுக்கடீர்' என்று விழுவதற்கு இடி ஒரு பொருள் அல்ல. இரண்டு மேகங்கள் ஒன்றுடன் ஒன்று உரசும்போது இடியும் மின்னலும் ஏற்படுகின்றன.

மேகங்களின் உரசலில் வெளிப்படும் பெருமளவு (ஆயிரக்கணக்கான கிலோ வாட்) மின்சாரம் அப்படியே கீழிறங்கி உயரமான கட்டடங்கள், கோபுரங்கள், மரங்களைத் தாக்கும்.

அதிகளவு மின்சாரத் தாக்குதல் காரணமாக, தாக்குதலுக்குள்ளானவர்கள் மரணமடைகிறார்கள். மரங்கள், குடிசைகள் தீப்பற்றி கருகும். இதையே இடி விழுந்ததாகக் கூறுவார்கள்.




படிப்பகம்

www.padippakam.com

திக் திக் திக்
புதிய தொடர் 02

# நந்தினி 440 வோல்ட்

ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறுவிறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது:



## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"நஞ்சா... என்னத்தைத் தேடறே?"

"எலிம்மா..."

"எலியா...?"

"ஆமாம்மா.... வெளியேர்ந்து எப்படியோ ஒரு எலி நம்ம தோட்டத்துக்குள்ளார பூந்துடுச்சு... நாலைஞ்சு செடிகளை நாசம் பண்ணிடுச்சு. அதைக் கொல்றதுக்காகத்தான் தேடிட்டிருக்கேன்."

"சேச்சே... கொல்லப் போறியா...? பாவம் விட்டுடு.."

"பாவம்ன்னு விட்டுட்டா செடியெல்லாம் நாசமாயிடும்மா... காலையிலேயே பெரிய அய்யா பார்த்துட்டு சத்தம் போட்டாரு.."

அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே- ரோஜாச் செடிகளுக்கு மத்தியில் இருந்த இடைவெளியில்- ஒரு ஜான் நீளத்தில் கன்னங்கரெலென்று அந்த எலி ஓடியது. பார்த்துக் கொண்டிருந்த நந்தினியின் முதுகுத் தண்டில் குறுகுறுவென்று சிலிர்ப்பாய் ஒரு உணர்ச்சி. சுவரோரமாய் ஓடுகிற அந்த எலியைப் பார்த்தாள், நந்தினி.

தோட்டக்காரக் கிழவன் அந்த எலிக்குப் பின்னாலேயே- கடப்பாறையை உயர்த்திக்கொண்டு ஓடினான்.

நந்தினி கத்தினாள்.

"நஞ்சா... அந்த எலியை விட்டுடு! பாவம் கொன்னுடாதே...!"

கிழவன் அவளுடைய குரலைக் காதிலேயே போட்டுக்கொள்ளாமல் கடப்பாறையோடு தொடர்ந்தான். எலி ஊர்ந்து போய் ஒரு பெரிய கல்லுக்குப் பின்னால் மறைய முயன்றும் முடியாமல் வெளிப்பட, கிழவன் கடப்பாறையை உயர்த்தி ஒரு போடுபோட்டான்.

"நச்..."

ஆனால் குறிதப்பிவிட- எலி வந்த திசையிலேயே திரும்பி ஓடியது. கிழவன் கோபமாகி எலியின் பின்னால் மீண்டும் ஓடினான்.

"நஞ்சா.. வேண்டாம்... அதைக் கொன்னுடாதே! உயிரோட புடிச்சு வெளியே எங்கேயாவது கொண்டு போய் விட்டுடு..."

நஞ்சனின் காதில் அந்த வார்த்தைகள் விழுந்தால்தானே...?

ரோஜாச் செடிகளை விலக்கிக் கொண்டு- பார்வையை உன்னிப்பாக்கி- கீழே குனிந்து பார்த்தபடியே கடப்பாறையோடு எலியைத் தொடர்ந்தான்.

சுவரின் எல்லை வரை ஓடிய அந்த எலி- அதற்கப்புறம் எந்தப் பக்கம் ஓடுவது என்கிற திகைப்பில் ஒரு விநாடி நின்று யோசித்துத் திரும்ப-

"நச்"

நஞ்சனின் கையிலிருந்த கடப்பாறை அதன் உடம்பில் பதிய-

'கீச்ச்ச்ச்ச்..' என்ற சத்தத்தோடு தன் உடம்பிலிருந்து இரத்தத்தை நாலா பக்கமும் தெளித்தது அந்த எலி.

கடப்பாறையின் கூர்மையில் ஒட்டிக் கொண்டு ஸ்லோமோஷனில் துடித்த அந்த எலியின் கறுப்பு உடம்பிலிருந்து செஞ் சிவப்பாய் இரத்தம் சொட்ட-

ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்த நந்தினி 'வீச்ச்ச்' சென்ற அலறலோடு- கண்ணின் பார்வைகள் மேல் நோக்கிச் செருகிக்கொள்ள- தளர்ந்து போய்ச் சாய்ந்தாள்.

பாத்ரூமில் குளிக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்த பாரி, நந்தினியின் அலறைக் கேட்டுப் படீரென்று கதவைத் திறந்தபடி வெளியே ஓடி வந்தான்.

➳ ❀ ❀

ஐநூற்றி சொச்ச கிலோ மீட்டர் தூரம் இராத்திரி பூராவும் ஓடி-உடம்பு முழுக்க புழுதியைப் பூசிக்கொண்டு வந்து நின்றது திருவள்ளுவர் பஸ்.

விடிந்தும் விடியாத மசமசப்பான நேரம்.

வீரபத்ரன், பயணப்பட்ட அசதியான உடம்போடு- வலது கையில் ஒரு பெரிய சூட்கேஸையும் இடது கையில் ஒரு சிறிய சூட்கேஸையும் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான்.

வீரபத்ரனுக்கு திடகாத்திரமான சரீரம். அந்த இருபத்தைந்து வயதிலேயே முப்பது வயது உடம்புக்குரிய வலு தெரிந்தது. அகலமான முகத்தில் அரிவாள் மீசை பிரதானமாய்த் தெரிந்தது. கண்களில் இராத்திரி முழுவதும் தூங்காத களைப்புத் தெரிந்தது.

பஸ் ஸ்டாண்ட்டைக் கடந்து தெருவுக்கு வந்தவனைக் காத்திருந்த ஆட்டோ டிரைவர்கள் மொய்த்துக் கொண்டார்கள்.

"எங்கே ஸார் போகணும்...?"

வீரபத்ரன் பதிலொன்றும் பேசாமல் எதிரே தெரிந்த ஸிட்டி பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தான். ஒரு ஆட்டோ டிரைவர் மட்டும் விடாப்பிடியாய்த் தொடர்ந்து வந்தான்.

"வாங்க ஸார். ஆட்டோவில போயிடலாம்....?"

"நான் சொல்ற இடத்துக்கு உன்னோட ஆட்டோ வராது"

"எங்க ஸார் போகணும்...?"

"நரசிம்மநாய்க்கன் பாளையம்...!"

ஆட்டோ டிரைவர் பின்வாங்கினான். "போக பதினைஞ்சு கிலோமீட்டர், வர பதினைஞ்சு கிலோமீட்டர்... மொத்தம் முப்பது கிலோமீட்டர். நீங்க டவுன் பஸ்ஸிலேயே போயிடுங்க ஸார்..."

"தெரியும்... நீங்க வரமாட்டீங்கன்னு... அதான் நான் ஆட்டோவில ஏறலை... இந் நேரத்துக்கு டவுன் பஸ் இருக்கா...?"

"இருக்கும் ஸார்... போய்ப் பாருங்க..."

வீரபத்ரன் நடந்தான்.

அந்த விடியற்காலை வேளையில் கோவை கொஞ்சம் கொஞ்சமாக உயிர் பெற்றுக் கொண்டிருந்தது. டவுன் பஸ்கள் முகப்பு விளக்குகளோடு போத்தனூரையும் ஒண்டிப்புதூரையும் பார்க்கப் போய்க் கொண்டிருந்தன. பழனி போகும் சேரன் பஸ் ஒன்று மெதுவாய் ஊர்ந்து கொண்டிருக்க ஃபுட்போர்டில் நின்றிருந்த கண்டக்டர், "பழனி... பழனி" என்று கத்திக் கொண்டிருந்தார். யாரோ ஒருவர் வேகமாய் ஓடி வந்து, "இந்த பஸ் பழனியா போகுது?" என்று கேட்டார்.

"ஆமாய்யா... ஏறு...ஏறு..."

"இதான் பழனிக்குப்போற மொத வண்டியா?"

"ஆமாய்யா... ஏறு...ஏறு...."

"இதுக்கு முன்னாடி வண்டி கிடையாதா?"

"ஏய்யா... இதான் மொத வண்டின்னு சொல்றேன். நீ அர்த்தமில்லாமே இதுக்கு முன்னாடி வண்டி இருக்கான்னு கேக்கறியே?"

அந்த ஆள் பஸ்ஸில் ஏறாமல் கம்பியைப் பிடித்துக் கொண்டே மேலும் கேட்டார், "கோயம்புத்தூரிலிருந்து பழனிக்கு ஒரு ஆளுக்கு என்ன சார்ஜ் ஆவும்....?"

"ஒம்பது ரூபாயாவும்... ஏறி உட்கார்ய்யா..." கண்டக்டர் எரிச்சலோடு கத்த, அந்த ஆள் ஏறாமல் சொன்னார்:

"அப்போ பதினெட்டு பேர்க்கு நூத்தி அறுபத்திரெண்டு ரூபா ஆவும்...?"

"நீங்க மொத்தம் பதினெட்டு பேர் இருக்கீங்களா...? கூட்டி வாய்யா அத்தனைப் பேரையும்... பஸ் கிளம்பற நேரமாச்சு..."

"இப்ப யாரும் பழனிக்கு போகலைக் கண்டக்டர். வர்ற வாரம் எம் பையனுக்கு பழனியில வெச்சு முடி எறக்கப் போறேன். சொந்தக்கார ஜனம் ஒரு பதினெட்டு பேரைக் கூட்டிட்டுப் போகணும்... அதான் உங்களை விசாரிச்சேன்." அந்த ஆள் சொல்லிவிட்டு எதிரே வந்த மலுமிச்சம்பட்டி பஸ்ஸை நோக்கி ஓட, பழனி கண்டக்டர் 'சாவு கிராக்கி' என்று சொன்னதோடு திருப்தியடையாமல், ஒரு மகா மோசமான கெட்ட வார்த்தையையும் சேர்த்துச் சொன்னார்.

வீரபத்ரன் சிரித்துக் கொண்டே ஸிட்டி பஸ் ஸ்டாண்ட்டைத் தொட்டு நரசிம்ம நாயக்கன் பாளையம் போகும் பஸ்ஸைத் தேடினான்.

32-G நகர்ந்து கொண்டிருக்க ஓடிப் போய் ஏறினான். பஸ்ஸில் நான்கைந்து பேர்களே இருந்தார்கள். கண்டக்டரிடம் காசைக் கொடுத்து டிக்கெட் வாங்கிக் கொண்டே ஜன்னலோரமாய் உட்கார்ந்தான்.

முப்பது நிமிஷப் பிரயாணம்.

பஸ் நரசிம்மநாயக்கன் பாளையத்தில் நின்றபோது விடிகாலை இருட்டு நிறைய கரைந்து போயிருந்தது. பஸ் ஸ்டாண்டில் இருந்த வேப்ப மரத்தில் காகங்கள் ஏக இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன. வடிவேலன் டீ ஸ்டால் அந்நேரத்துக்கே திறக்கப்பட்டு- பாய்லர் கனப்பு சிவப்பாய்த் தெரிந்தது. துடியலூர் சந்தைக்குப்போக வேண்டி சாமந்திப் பூக்கள் கூடை கூடையாய் பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தன. கமல் ஹேர்கட்டிங் சலூனில் கிழவனார் ஒருவர் உட்கார்ந்து தான் வருட காலமாக வளர்த்து வந்த தாடி மீசையை இழந்து கொண்டிருந்தார். வேப்ப மரத்துக்குக் கீழே 'தினத்தந்தி' பேப்பர் சுடச் சுட விற்பனையாகிக் கொண்டிருந்தது.

வீரபத்ரன் சூட்கேஸ்களோடு இறங்கினான்.

தான் இந்த ஊரைவிட்டுப் போன ஒரு வருட காலத்தில் எந்த மாற்றமும் ஏற்படாமல் அப்படியே இருந்த நரசிம்ம நாயக்கன் பாளையத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டான்; நடந்தான்.

பஸ் ஸ்டாண்டில் இருந்த சொற்ப கூட்டமும் அவனையே பார்த்தது. அவனுடைய முதுகுக்குப் பின்னால் யாரோ இரண்டு பேர் பேசிக் கொண்டார்கள்.

"சம்முவம்! போறது யாரு... வீரபத்ரனா?"

"அப்படித்தான் தெரியுது..."

"எங்க போயிருந்தான் இத்தனை நாளும்?"

"யாருக்குத் தெரியும்...?"

"திடீர்னு வந்திருக்கான்... விஷயம் தெரிஞ்சு வந்திருக்கானா? தெரியாமே வந்திருக்கானா..?"

"விஷயம் தெரியாம இருக்குமா...? அதான் பேப்பர்காரன் ஃபோட்டோவோட பத்தி பத்தியா போட்டானே..."

'என்ன சொல்கிறார்கள் இவர்கள்?'

நடந்து கொண்டிருந்த வீரபத்ரன் நின்று அவர்களைத் திரும்பிப் பார்த்தான். பேசிக்கொண்டிருந்த இரண்டு பேரும் வாய்களைக் கப்பென்று மூடிக்கொண்டார்கள்.

வீரபத்ரன் தொடர்ந்து நடந்தான். வாசலைக் கூட்டித் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்த பெண்கள் வீரபத்ரன் வருவதைப் பார்த்ததுமே தண்ணீர் தெளிப்பதை நிறுத்திவிட்டு- ஸ்தம்பித்துப் போய் அவனையே பார்த்தார்கள்.

'ஏன் என்னை இப்படிப் பார்க்கிறார்கள்?'

சூட்கேஸ்களைச் சுமந்தபடியே- அந்த நீளமான தெருவைக் கடந்து மாரியம்மன் கோயில் வீதியைத் தொட்டான். வீதியின் துவக்கத்திலேயே பெரிதாய்க் கட்டப்பட்டிருந்த தண்ணீர் டேங்க்கின் மேல் பஞ்சாயத்தின் சார்பில் பொருத்தப்பட்ட ரேடியோ- 'வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்கு' எதையோ அறிவிப்புச் செய்து கொண்டிருந்தது. தண்ணீர் டேங்குக்குக் கீழே நின்று தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த பெண்கள் வீரபத்ரனைப் பார்த்ததும்- அதுவரைக்கும் பேசிக்கொண்டிருந்த சினிமா விவகாரத்தை விட்டுவிட்டு, அவனைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். கீழ் ஸ்தாயியில் தெளிவில்லாத- கிசுகிசுப்பான குரல்கள்.

(தொடர்ந்து வரும்)

# போர்க்கள அனுபவம்

கியூபாவின் கெரில்லாப் போரில் கள அனுபவம் ஒன்றைப் பற்றி சேகுவேரா எழுதியது இது:

"ஒரு மரத்தில் சாய்ந்து கொண்டு நானும் தோழர் மாண்டேனும் எங்களது குழந்தைகளைப் பற்றிப் பேசிக் கொண்டு எங்களுக்குக் கிடைத்த உணவை- ஒரு கறித்துண்டும் இரண்டு பிஸ்கெட்டுக்களும்- சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் சுட ஆரம்பித்தனர். ஒரு வினாடிக்குப் பிறகு, 82 பேரைக் கொண்ட எங்களது குழுமீது குண்டுமழை பொழிந்தது. என்னிடம் இருந்தது மோசமான துப்பாக்கி. நான் தான் இருப்பதில் மோசமான கருவியை என்னிடம் கொடுக்குமாறு கேட்டு வாங்கியிருந்தேன். நான் எங்களது கடற் பயணத்தின்போது முற்றிலும் ஆஸ்துமா தொந்தரவுக்கு ஆளாகியிருந்ததால் என்னால் சரிவரப் போரிட முடியாது. எனவே, என்னிடம் நல்ல துப்பாக்கிகளில் ஒன்றைக் கொடுத்து வீணாக்க வேண்டாம்- என்றுதான் கூறியிருந்தேன்.

எங்கள்மீது எதிரி தொடுத்த கொடூரத் தாக்குதலை எதிர்த்து நிற்க முடியாதவர்களாய் நாங்கள் இருந்தோம். கிரான்மாவிலிருந்து இறங்கிச் சதுப்பு நிலம் வழியே நடந்து வந்திருந்த எங்களிடம் ஒரு சில துப்பாக்கிகளும், ஒரு கைப்பிடி அளவு வெடிகுண்டுகளும் தான் எஞ்சியிருந்தன. அந்த வெடிகுண்டுகளும் நீரில் நனைந்து நமுத்துப் போயிருந்தன... ஜூவான் அல்மெய்டா என்னிடம் ஓடிவந்து 'என்ன செய்வது' என்று கேட்டது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கரும்புத் தோட்டத்திற்குள் ஓடி விடுவது என்று நாங்கள் முடிவெடுத்தோம். ஏனெனில் அங்கே ஓடி ஒளிந்து கொண்டால்தான் நாங்கள் உயிர்தப்ப முடியும்...!

பிறகு நான், எங்களில் ஒருவர் ஓடிக் கொண்டே தன்னிடமிருந்து குண்டுகளை வீசி எறிவதைக் கண்டேன். அவரை நிறுத்தும் பொருட்டு நான் அவரது கையைப் பிடித்து இழுத்தேன். அவர் திமிறிக்கொண்டு கத்தினார். "நமது கதை முடிந்து விட்டது." அவரது முகத்தில் பயம் அப்பிக் கிடந்தது.

எனது வாழ்க்கையில் முதன் முறையாக, மருத்துவனாகப் பணியாற்றுவதா? அல்லது வீரனாகப் போராடுவதா? எதைத் தேர்வது என்று இந்தமுறை குழப்பத்துக்கு ஆளாகினேன். என்னிடம், மருந்துகள் நிறைந்த முதுகுப் பையும், வெடிகுண்டுகள் இருந்த பெட்டியும் இருந்தன. என்னாலோ ஏதேனும் ஒன்றைத்தான் தூக்க முடியும். நான் அவ்வளவுக்குப் பல ஹீனப்பட்டிருந்தேன். நான் பெட்டியை எடுத்துக்கொண்டு, எனக்கும் கரும்புத் தோட்டத்துக்கும் இடையிலிருந்த வெட்ட வெளியைக் கடந்து ஓடினேன்.

தாக்குதல் தீவிரமாகியது. எந்திரத் துப்பாக்கிகள் தீயைக் கக்கின. எனது மார்பில் ஏதோ கடுமையாக மோதியது. நான் கீழே விழுந்தேன். காயம்பட்டவனின் உள்ளுணர்வுக்குக் கட்டுப்பட்டு, நான் மலைகளிருந்த திசையில் சுட்டேன். எல்லாமே முடிந்து போனதாகத் தோன்றிய அந்த நிமிடத்தில் எனக்குத் திடீரென்று ஜாக் லண்டனின் ஒரு கதை நினைவில் வந்தது. தான் இறக்கப் போவதை அறிந்து கொண்ட அந்தக் கதையின் நாயகன், கம்பீரத்தோடு மரணத்தை வரவேற்கத் தயாராவான்.

அர்பென்டோஸ் என் பக்கத்தில் வந்து விழுந்தார். அவரது உடம்பில் இருந்து இரத்தம் பெருகிக்கொண்டிருந்தபோதும் அவர் தொடர்ந்து சுட்டுக் கொண்டிருந்தார். நான் எனது சக்தியனைத்தையும் திரட்டி எழ முயன்றேன். முடியவில்லை. பாஸ்டினோவுக்கு என்னைத் தூக்கி விடுமாறு சைகை செய்தேன். தொடர்ந்து சுட்டுக்கொண்டிருந்த அவர் எனது பக்கம் திரும்பி, ஆதரவாகத் தலையை அசைத்துச் சப்தமாகச் சொன்னார்: "சகோதரரே! வருத்தப்படவேண்டாம். தைரியமாக இருங்கள்!"

கடுமையான வலியைச் சகித்துக் கொண்டு நான் எனது துப்பாக்கியை உயர்த்தி எதிரிகளை நோக்கிச் சுட ஆரம்பித்தேன். இதுதான் நான் இறப்பதற்குரிய நேரம் என்றால், அதற்குள் எத்தனை பேரை முடியுமோ அத்தனை பேரைக் கொன்று பழி தீர்த்து விட வேண்டும் என்று நான் உறுதி பூண்டிருந்தேன்.



எங்களில் ஒருவர் 'நாம் சரணடைந்து விடலாம்' என்று கூவினார். ஆனால் மறுவினாடியே இடிபோன்ற குரலில் கமிலோ சியன் பியூகோஸ் கர்ஜித்தார். "கோழைகளே! ஒருநாளும் பிடலின் வீரர்கள் சரணடைய மாட்டார்கள்!"

அல்மெய்டா திடீரென்று என்னருகே வந்தார். என்னைத் தூக்கிக் கரும்புத் தோகைகளுக்குள் இழுத்துச் சென்றார். காயம்பட்ட மற்றவர்கள் அங்கே கிடத்தப்பட்டிருந்தனர். பாஸ்டினோ அவர்களது காயங்களுக்கு மருந்து கட்டிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் எதிரிகளின் விமானங்கள் எங்களது தலைகளுக்கு மேலே கர்ஜித்தன.

பயமுறுத்தும் கூச்சல், எந்திரத் துப்பாக்கிகள் உமிழ்ந்த தீ, காயம்பட்டோரின் கதறல்கள், முனகல்கள் இவையெல்லாம் ஒன்றாய்க் கலந்து ஒரே இரைச்சலாய் இருந்தது.

கடைசியாக, விமானங்கள் போய் விட்டன. துப்பாக்கிச் சூடு ஓய்ந்து விட்டது. ரமீரோ வால்டீஸ், சாவோ, பெனிடெஸ், அல்மெய்டா, நான் ஆகிய ஐந்து பேர் மட்டுமே எஞ்சியிருந்தோம். நாங்கள் மீண்டும் ஒன்று கூடினோம். வேறு எந்த நிகழ்ச்சியுமின்றி நாங்கள் தோட்டங்களைக் கடந்து, வெற்றிகரமாகக் காடுகளை அடைந்து அங்கே மறைந்து கொண்டோம். கரும்புத் தோட்டங்கள் இருந்த திசையில் இருந்து ஒரு பெரிய வெடிச் சப்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். சற்று முன்னே சண்டை நடந்த இடத்தை அடர்ந்த புகை மண்டலம் மூடியிருந்தது.

ஒருநாளும் என்னால் அலெக்ரியா டி பியோவை மறக்க முடியாது. அங்கே தான், 1956 டிசம்பர் 5ம் திகதி எங்களது குழு போரில் இறங்கியது. அங்கேதான் நாங்கள் ஆள் பலமிருந்த பாடிஸ்டோவின் படைகளோடு பொருதினோம்.

இந்தப் போரில், பிடலின் ஆட்களில் பாதிப்பேர் மரணம் அடைந்தார்கள்; 20 பேர் கைதானார்கள். கைது செய்யப்பட்டவர்களில் பலர் சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்பட்டார்கள். ஆனால், எஞ்சியிருந்தோர் மறுநாள், சியாரா மலையடிவாரத்தில் ஒரு விவசாயியின் குடிசையில் கூடினார்கள். அப்போது பிடல் கூறினார்: "எதிரிகள் நம்மைத் தோற்கடித்து விட்டார்கள். ஆனால் நம்மை அழித்துவிட முடியாது! நாம் போரிடுவோம்! நாம் இந்த யுத்தத்தில் வாகை சூடுவோம்!" ■


படிப்பகம்

www.padippakam.com




**21**

> பல முன்னணி நடிகைகள் பாகிஸ்தானில் குடியேறி விட்டார்கள். சிலருக்கு வயதாகி விட்டது. புதுமுகங்களை அறிமுகப்படுத்தப் பயம். ஆகவே இப்போது பம்பாயில் முன்னணி நடிகைகள், முன்னணி நடிகர்களைக் காட்டிலும் அதிக சம்பளம் வாங்குகிறார்கள். பிரபல நடிகர் 30,000 முதல் 50,000 வரை வாங்குகிறார்... பிரபல நடிகை 40,000 முதல் 60,000 வரை வாங்குகிறார்.
>
> –ஒரு கட்டுரையில்...'கலை' ஜூலை 1949 இதழில்–

"அப்போ இதுதான் உன் பதிலா மதுமிதா?" என்றார் சாரி.

"ஆமாம் சார். உங்க பையனுக்காக நான் அனுதாபப்படலாம். அதுக்கு மேல என்கிட்டேர்ந்து எந்த உதவியும் எதிர் பார்க்காதீங்க. ஒரு நல்ல மனநல வைத்திய ரால கண்டிப்பாக அவரைக் குணப்படுத்திட முடியும்" என்றாள் மதுமிதா.

சாரி எழுந்து கொண்டார்.

"என் பையனோட ஃபோட்டோவைப் பார்க்கக்கூட நீ தயாரா இல்லையாம்மா?"

"பார்க்கிறதால என்ன சார் பிரயோஜனம்?"

"நான் ஒண்ணுசொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே?"

"சொல்லுங்க சார்"

"பல சினிமா நடிகைகள் திடீர்னு விவாகரத்து பண்ணிட்டு புருஷனையே மாத்திக்கிறாங்க. நீ ஒருத்தர் மேல ஆசை வெச்சிருக்கிற தாத்தானே சொன்னே... என்னோட பிரமாண்டமான ஆப்பிள் தோட்டங்களுக்கு உரிமை உள்ளவளா ஆகப்போறதை நினைச்சுப் பார்த்து உன் மனசை மாத்திக்கக் கூடாதா? ஒரு சினிமா நடிகையை மருமகளா அடைய நான்தான் நூறுதடவை யோசிக்கணும். நானே சரின்னு சொல்றப்ப நீ ரொம்பத்தான் பிகு பண்றியேம்மா..."

மதுமிதாவுக்கு சர்ரென்று கோபம் எகிறியது.

"சினிமா நடிகைன்னா பணத்துக்கு மயங்கிடுவான்னு யார் சார் சொன்னது? சில பேர் அப்படி இருக்கிறதை வெச்சி பொதுவான அபிப்பிராயத்துக்கு வராதீங்க சார். அவளுக்கும் மனசு இருக்கு. விருப்பம் இருக்கு.. ஒரு நடிகையை பொருளா நினைச்சி விலைக்கு வாங்க முயற்சி பண்ணாதீங்க. அவளை ஒரு மனுஷியா முதல்ல மதிக்கத் தெரிஞ்சுக்கங்க. நீங்க போகலாம்."



சாரி அவளை முறைப்பாகப் பார்த்து விட்டு விருட்டென்று வெளியேற, துர்க்கா அவசரமாக அவர் பின்னால் ஓட்டமாக வந்து

## பட்டுக்கோட்டை பிரபாகர்

வராந்தாவில் தடுத்து நிறுத்தினாள்.

"சார். நீங்க எதையும் மனசுல வைச்சுக்காதீங்க. என் பொண்ணு பொழைக்கத் தெரியாதவ. நீங்க உங்க அட்ரஸைக் கொடுத்துட்டுப் போங்க சார். நான் பக்குவமா எடுத்துச் சொல்றேன். எவ்வளவு பெரிய ஆளு நீங்க. உங்களைப் போயி அலட்சியப்படுத்திப் பேசறா பாருங்க!"

"அந்தப் பொண்ணுதான் வேற யாரையோ ஆசைப்படுறதா திட்டவட்டமா சொல்லிடுச்சேம்மா. இதுக்கு மேல நீங்க என்ன சொல்லிச் சமாதானப்படுத்துவீங்க?"

"சொல்லிப் பார்க்கறேன். முடியாமப் போனா எனக்கு வேற ஒரு யோசனையும் இருக்கு சார்."

"என்னம்மா?"

"எனக்கு இன்னொரு பொண்ணு இருக்கா. இனியான்னு பேரு. காலேஜ்ல படிச்சுட்டு இருக்கா. இவளை விட ஜோரா இருப்பா சார். அவ ஃபோட்டோ தர்றேன். உங்க பையன்கிட்ட காமிக்கிறீங்களா?"

சாரி கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்.

"என்னம்மா இது. என் பையன் மதுமிதாவை நேசிக்கிறான்னு தானே நான் என் அந்தஸ்து. கௌரவம் எல்லாம் விட்டுட்டு தேடி வந்து பேசினேன். வேற பொண்ணைக் கட்டி வைக்கிறதுன்னா உலகம் பூரா லட்சம் பொண்ணுங்களை க்யூவில என் பையன் முன்னாடி நிறுத்த மாட்டேனா நான்?"

"அதுக்கில்லை சார். இனியா மதுமிதாவோட தங்கைன்றதால கிட்டத்தட்ட அவ சாயல்ல இருப்பா சார். இன்னும் அழகாத்தான் இருப்பா. கொஞ்சம் வெய்ட் பண்றீங்களா? ஃபோன் பண்ணி இனியாவை வரச் சொல்லட்டுமா?"

"நான் பார்த்து என்ன பண்ணப் போறேன்?"

"இல்லைன்னா அவளை உங்க கூடவே காஷ்மீர் அழைச்சிட்டுப் போங்க. ஒரு வாரம் உங்க வீட்லே அவ தங்கியிருக்கட்டும். எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. உங்க பையன் ராகேஷோட அவ பேசட்டும். பழகட்டும். உங்க பையனுக்கு அவளைப் பிடிச்சிருந்தா அப்புறம் மேற்கொண்டு பேசலாம்."

"இல்லைம்மா. அதெல்லாம் சரியாவராது. மதுமிதாதான் தன் மனைவியா வரணும்னு பிடிவாதம் பிடிச்சு தற்கொலை வரைக்கும் போனவன் அவன். அவனை எப்படி சமாதானப்படுத்துறதுன்னு நான் பார்த்துக்கறேன். வர்றேங்க."

விட்டால் போதுமென்று வேகமாக நடந்தார் சாரி.

ஒரு நீண்ட பெருமூச்சை வெளியேற்றிய துர்க்கா, மீண்டும் அறைக்குள் வந்து மதுமிதாவை வெறுப்பாகப் பார்த்தாள்.

"என்னம்மா பார்க்கறே?"

"உன்னைவிடப் பெரிய முட்டாள் யாரும் இருக்க முடியாதுடி!"

"காசுக்காக எது வேணும்னாலும் செஞ்சா புத்திசாலித்தனமா? அப்படி மனசை மாத்திக்கறதுதான் அறிவாளி செய்ற வேலைன்னு நீ நினைச்சா, நான் முட்டாளாவே இருந்துட்டுப் போறேன்."

"அவர் எவ்வளவு கோடி சொத்து சொன்னாரு கவனிச்சியா?"

"அந்தப் பையன் உன்னை ஆசைப்பட்டிருக்கக்கூடாதான்னு நினைக்கறியாம்மா?"

"ச்சீ! வாயை மூடுடி!" என்று தளர்வாக அமர்ந்தாள் துர்க்கா.

***

**வே**ஷம் கலைத்து சொந்தத் தோற்றத்தில் இருந்த சாரி வாய் விட்டுச் சிரித்தார். அவரின் சிரிப்படங்க தன் நாற்காலியில் மெதுவாக இடம், வலம் அசைந்தபடி காத்திருந்தான் சந்திரசேகர்.

"இப்படி நாடகம் போட்டதில நல்ல அனுபவம் தம்பி! அந்தம்மா என் காஷ்மீர் அட்ரஸ் கேக்கறா. நான் எதைக் கொடுக்கறது? சாமர்த்தியமாப் பேசிட்டு ஓடி வந்துட்டேன்."

"எந்தம்மா? . மதுமிதாவோட அம்மாவா?"

"ஆமாம். பொம்பளையா அவ? பணம் மேல அவ்வளவு வெறி உள்ள ஒருத்தியை நான் பார்த்ததே இல்லை தம்பி. வாய் வார்த்தையா என் சொத்து மதிப்பைச் சொன்னதுக்கே வாய் பிளந்துட்டா. தன் ரெண்டாவது பொண்ணை என் கூடவே அனுப்பி வைக்கிறதுக்கு ரெடி அந்தம்மா!"

"எதுக்கு?"

"அவ காஷ்மீரில ஒரு வாரம் தங்கி ராகேஷோட பேசிப் பழகணுமாம். அவனுக்குப் பிடிச்சிருந்தா கல்யாணம் பண்ணிக்கட்டுமாம். நானே கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொல்லியிருந்தாக்கூட உடனே தயங்காம சரின்னு சொல்லியிருப்பா போலிருக்கு. பணப்பிசாசு!"

"ரெண்டாவது பொண்ணைப் பத்தி எதுக்குப் பேச்சு வந்திச்சு?"

"மதுமிதாதான் முடியாதுன்னு சொல்லிட்டாளே."

"அதை முதல்ல சொல்லுங்க சார். அவ என்ன சொன்னா? மதுமிதாவோட பதில்தானே உங்களுக்கு முக்கியம்? அதுக்காகத்தானே இந்த நாடகம்?"

"கையைக் கொடுங்க தம்பி"

அவன் கையைப் பற்றிக் குலுக்கினார்.

"நீங்க சொன்ன மாதிரியே நடிகையா இருந்தாலும், உறுதியான வித்தியாசமான பொண்ணு. நானும் எப்படி எப்படியோ வார்த்தையைப் போட்டுத் தூண்டில் போட்டேன். கொஞ்சம் கூட அசையலையே. உங்க பையனுக்கு வைத்தியக்கார டாக்டர் கிட்டே வைத்தியம் பாருங்க, நான் ஒருத்தரை நேசிக்கிறேன், அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு ஆணியடிச்ச மாதிரி சொல்லிட்டா!"

"இப்பவாவது மதுமிதாவைப் புரிஞ்சிக்கிட்டீங்களா?"

"உங்க பண பின்னணி தெரிஞ்சி இந்தக் கல்யாணத்தை அவ பண்ணிக்கலைன்னு இப்ப நான் பரிபூரணமா ஒத்துக்கறேன் தம்பி. மண்டையில அடிச்சமாதிரி ஒரு வார்த்தை சொன்னா தம்பி"

"என்ன சொன்னா?"

"இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் என் முடிவுல மாற்றம் இருக்காதுன்னு சொன்னா."

சந்திரசேகர் முகத்தில் பெருமிதம் தவழ்ந்தது.

"நான் எவ்வளவு சொல்லியும் நீங்க ஒத்துக்கலை. அதனாலதான் உங்களுக்கு உணர்த்தறதுக்காக இப்படி செட்டப்பா பேசச் சொன்னேன். இப்போ இந்தக் கல்யாணத்தில நீங்களும் ஒரு சாட்சியா வர்றதில உங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லையே?"

"இல்லை கண்டிப்பா வர்றேன். என் ஆசீர்வாதம் முழு மனசோட உங்களுக்கு உண்டு தம்பி."

"அதுபோதும் எனக்கு!" என்று பெருமூச்சு விட்டான் சந்திரசேகர்.

•••

**க**தவைத் தட்டி விட்டு உள்ளே வந்தான் சந்திரசேகர்.

படித்துக்கொண்டிருந்த நாவலை மூடி ஓரமாக வைத்து புன்னகைத்தாள் மதுமிதா.

ஸ்டூலில் கட்டில் அருகே அமர்ந்து, "டாக்டர் இன்னும் உன்னை நடக்கச் சொல்லலையே மது?"

"வலி இல்லைன்னா நாளையிலேர்ந்து ரூமுக்குள்ளேயே நடக்கச் சொல்லியிருக்காரு."

"வெரிகுட். வலி இருக்கா?"

"ரொம்ப குறைஞ்சிடுச்சு"

கொண்டு வந்த இரண்டு நாவல்களை அவளிடம் கொடுத்தான்.

"நீ கேட்டது இதானான்னு பாரு"

"இதான் சந்துரு"

"அப்புறம்? வேற என்ன விசேஷம்?"

"ஒரு சுவாரசியமான விஷயம் சொல்லணும் சந்துரு".

"சொல்லு"

"இன்னைக்கு காலைல காஷ்மீர்லேர்ந்து கைலாஷ்னு ஒரு பெரிய கோடீஸ்வரர் வந்தாரு"

"உன்னை வைச்சி படம் எடுக்கறதுக்கா?"

"இல்லை. அவரோட பிள்ளைக்கு என்னைக் கட்டி வைக்கிறதுக்கு. அவர் பையன் என்னோட வெறிபிடிச்ச ரசிகனாம். ஒரு கட்டத்தில பைத்தியம் மாதிரி ஆயிட்டானாம். என்னைக் கல்யாணம் செய்துக்கணும்னானாம். தற்கொலைக்கு முயற்சி செஞ்சி காப்பாத்திட்டாங்களாம். பையனோட விருப்பத்தை நிறைவேத்தறதுக்காக இவர் புறப்பட்டு வந்துட்டாரு."

"நீ என்ன சொன்னே?"

"இதென்ன கேள்வி. முடியாதுன்னு தான் சொன்னேன்"

"எந்த வார்த்தைகளால சொன்னேன்னு கேட்டேன். இரு. நானே சொல்றேன். இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் ஒத்துக்க மாட்டேன்னு சொல்லியிருப்பே. கரெக்டா?"

அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள், "அதெப்படி அவ்வளவு கரெக்டா சொன்னீங்க?"

"அவரை அனுப்பிவைச்சதே நான்தான் மது. என் ஆபீஸ்ல வேலை பார்க்கறவர். சாரின்னு பேரு. உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கிறதில அவருக்கு இஷ்டம் இல்லை. உன்னைப் பத்திப் புரிய வைக்க நான்தான் அவரை இப்படி ஒரு நாடகமாடச் சொன்னேன். இப்ப புரிஞ்சுக்கிட்டாரு."

சட்டென்று முகம் மாறி அவனை வெறுப்போடு பார்த்தாள் மதுமிதா.

"அவர் மனசுல உள்ள சந்தேகத்தைச் சரி பண்றதுக்காக இந்த நாடகமா இல்லை, உங்க மனசுலேயே ஒரு சந்தேகம் உண்டா?" என்றாள்.

(தொடரும்)

---

# நில்–கவனி–முன்னேறு

## கவியரசு கண்ணதாசன்

**அ**தோ, அந்த ஆல மரத்து நிழலில், அந்தக் கிழவன் சுகமாகத் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

கடந்து போன காலக்கணக்குகளை ஐந்தொகை போடும் வயது.

கால நெடுஞ் சாலையிலே கடைசி மைல் கல்லிலே் அவன் நிற்கிறான்.

பருவ காலம் படுத்தியபாட்டை இப்போது அவன் எண்ணிப் பார்க்கிறான்.

அந்நாளில் அழகழகாக அலங்கரிக்கப்பட்ட ரோமங்கள் சிக்குப் பிடித்து விட்டன.

பளபள வென்றிருந்த கன்னங்களிலே காலதேவன் முத்திரைக் கோடுகளைப் போட்டு விட்டான்.

வண்டியில் ஏற்றுவதற்காகச் சரக்கு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டது.

மௌன தேவதையின் பரிபூரண ஆட்சியில் அவன் அமைதியுற்றிருந்தான்.

அவனது பிரார்த்தனை எல்லாம் இதுதான்:

"இறைவா!

"சொர்க்கம், நரகம் என்று இரண்டிருப்பது உண்மையானால், என்னை நரகத்துக்குக் கொண்டு போ!

"இங்கே நான் வாழ்ந்த வாழ்க்கைக்கு அதுதான் நியாயம்.



"ஆசை, காதல், அன்பு, பாசம் என்ற சொற்சிலம்பங்களில் எதிலே நான் அதிகம் ஆடினேன் என்பது உனக்குத் தெரிந்ததே!

"இரத்தம் சூடாக இருந்தபோது, சித்தம் கல்லாக இருந்தது.

"நரம்புகள் முறுக்கேறி இருந்தபோது. விரும்பியவை கோடானு கோடி.

"இப்படியொரு முதுமை எனக்கும் உண்டு என்று நான் எண்ணிப் பார்த்ததில்லை.

"ஆன்மா தனது பலவிதப் பயணங்களில் எந்த ஸ்டேஷனில் அதிகம் நின்றதோ, எனக்குத் தெரியாது.

"ஏதோ சில பாவங்களை நானும் செய்திருக்கிறேன்.

"கொதிக்கின்ற வெந்நீர், முடியைத் தள்ளுவதுபோல், துடிக்கின்ற இரத்தம், அச்சத்தை விலக்கியிருக்கிறது.

"செத்துப் போன ஜூலியஸ் சீஸரின் உடைவாளும் செயலற்றுப் போனது போல், முடிந்துவிட்ட பருவமும் செயலற்றுப் போனதே!

"ஆரோக்கியத்தை இனி நான் எதிர்பார்க்க முடியாது.

"உனது அருள் வேண்டியே இந்தத் தவம்.

"விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் முதுமைக் காலம் தவக்கோலமே.

"இறைவா!

"மறுபடியும் நான் பிறப்பதானால், என்னை ஓர் ஆலமரமாகப் பிறப்பித்துவிடு.

"காரணம், சிலருக்காவது நிழல் தந்த வரலாறு அதற்கு இருக்கிறது."

-கிழவனின் வேதாந்த ராகம் இங்கே முடிகிறது.

லோகாயத வாதம் அப்போது சாரமற்றுப் போகிறது. தெய்வ தத்துவமே கண் முன்னால் தோன்றுகிறது.

பரம நாத்திகனும், படுக்கையில் படுத்தபின் இறைவனை நினைக்கிறான்.

அவனது பிரார்த்தனை பலிக்கிறதோ இல்லையோ, ஆத்மா சாந்தியடைந்து விடுகிறது.

அதோ, அந்த மரத்தடியில் கிழவன் தூங்கிக் கொண்டிருக்கிறான்.

நீங்கள் ஏன் அவனை எழுப்ப முயற்சி செய்கிறீர்கள்?

அவன் நிரந்தரமாகத் தூங்கி வெகு நேரமாகிவிட்டது.

---

# ரிலாக்ஸ்

இந்தப் படத்தைப் பார்த்ததும் சேர்க்கஸ் கோமாளி என்று நினைப்பீர்கள். இப்படத்திற்குள் சேர்க்கஸ் காட்சியே உண்டு என்றால் நம்புவீர்களா? அப்படியே பக்கவாட்டாக திருப்பிப் பாருங்கள், தெரியும்!





படிப்பகம்

www.padippakam.com

அலுவலகத்திலிருந்து வீட்டினுள் நுழைந்த தினகரனின் கண்கள் ஆவலுடன் எதையோ தேடின. எதிர்பார்த்தது இல்லை என்றவுடன் முகம் சூம்பிப் போனது.

"அட, என்னங்க, ஆபீஸிலிருந்து எப்ப வந்தீங்க? வந்த சத்தமே கேக்கலியே?"

தினகரனின் மனைவி விமலா, அவன் கையிலிருந்த பையை வாங்கிக் கொண்டாள்.

முகத்தில் வியர்வை முத்துகள். ஏற்கனவே துருத்திக் கொண்டிருந்த முன்பற்கள், சிரித்தபோது, அவள் முகத்தை மேலும் விகாரமாக்கியது.

சிதைந்து போன சித்திரமாக, வசீகரமற்ற அவள் முகத்தைப் பார்க்கும்போதே, உற்சாகம் வடிந்து போகிறது.

'ஏன் வீட்டுக்கு வருகிறோம்!' என்ற எண்ணம் மறைந்து சுவாரசியம் ஒட்டிக் கொண்டது, சமீப காலமாகத்தான்.

அதற்குக் காரணமான சித்ராவைத்தான், அவன் இப்போதும் தேடினான். 'சித்ரா!' அந்தப் பெயரை மனசுக்குள் உச்சரித்த போதே, நெஞ்சுக்குள் சாரலடித்தது.

கடைந்தெடுத்த சிலை போன்ற அவள் தோற்றம், அவன் மனசை வதைத்தது.

விமலாவுடன் ஒப்பிட்டுப் பார்த்து ஏங்க வைத்த அவளது பரிச்சயம், சில நாட்களாகத்தான் ஏற்பட்டிருந்தது.

விமலா காபி, டிபன், எடுத்து வர உள்ளே போயிருந்தாள். முதன் முதலில் விமலாவே சித்ராவை அறிமுகப்படுத்திய அனுபவம், சுவாரசியமானது.

எத்தனை சந்தோஷமான நாள் அது!

❋ ● ○

அன்று படுக்கையைவிட்டு எழுந்திருக்கும்போதே, தினகரனுக்கு உடம்புவலி, தலைவலி ஜுரமும் வருவது போல் ஒரு தளர்வு.

ஆபீஸுக்கு லீவு சொல்லிவிட்டு, வீட்டில் இருந்தான்- வேண்டா வெறுப்புடன்தான்.

இதமாகத் தலைவலி மருந்து தடவ வந்த மனைவியிடம் வள்ளென்று விழுந்து, அவளைத் தவிர்த்தான்.

அவன் கோபத்தில் வெலவெலத்துப்

# மனதுக்கு விருந்து



## அஸ்வினி

போனாள் விமலா. கண்களில் நீர் கோர்த்துக் கொண்டது.

சுருள் சுருளான தலை மயிர், நல்ல கறுப்புமில்லாமல், வெளுப்புமில்லாத கோதுமை நிறம், ஆண்மை கலந்த கம்பீரமான அவன் தோற்றத்துக்குத் தான் எந்த விதத்திலும் பொருத்தமில்லை என்ற நினைப்பே, அவன் கோபத்துக்குக் காரணம் என்பதை உணர முடிந்தது.

பெரியவர்களைத் திருப்திப்படுத்த, நிர்ப்பந்தத்தின் காரணமாக, விமலாவைத் திருமணம் செய்ய நேரிட்டபோது, விமலாவுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி, தினகரனுக்கு ஏற்படவில்லை.

கெச்சலான தேகம், கறுப்பு நிறம், துருத்திய பற்கள், ஒட்டி உலர்ந்த கன்னம், இவற்றின் கலவையான விமலா, தினகரனை எப்படிக் கவர முடியும்?

"ஏங்க, இந்த சூடான காப்பியையாவது குடிங்க. கொஞ்சம் தலைவலி குறையும். மாத்திரையும் வெச்சிருக்கேன்."

விமலா சொல்லிவிட்டுக் காய்கறிக்கூடையுடன், வெளியே கிளம்பினாள்.

● ○

திரும்பி வரும்போது, அவளுடன் சித்ரா.

"ஏங்க, இது சித்ரா. நம்மவீட்டுக்கு அஞ்சாறு வீடு தள்ளி வந்திருக்காங்க. அம்மா மட்டும்தான். அப்பளம், வடாம், பலகாரம் பண்ணி, பொழப்பை நடத்தறாங்களாம். கடைகளுக்கு வயர் கூடை பின்னிக் கொடுப்பாங்க. அக்கா, அக்கான்னு பிரியமா பேசினா. பக்கத்துலதான் வீடுன்னு அழைச்சுட்டு வந்தேன்!"

தென்றலாய் நுழைந்த அந்தப் பெண்ணைப் பார்த்து அசந்துவிட்டான் தினகரன். பாலைவனத்தில் பசுஞ்சோலையாய், அவன் மனத்தில் இனிய உணர்வுகளை எழுப்பியதே அவள் வருகைதான்.

சுநாதமான இசையில் மயங்கிப் போன இரசிகனாய், அவள் அழகில் மயங்கிப் போனான். ஜுரம் நொடியில் மறைந்து, உற்சாக அலை தொற்றிக் கொண்டது.

அதற்குப் பிறகு அடிக்கடி சித்ரா வர ஆரம்பிக்க, தினகரனும், வீட்டில் இருக்கும் நேரத்தை அதிகப்படுத்திக் கொண்டான்.

விமலாவுக்கு கணவனின் உள்மனத்தின் நோக்கம் புரிந்தாலும், அப்படியாவது, 'அவன் வீட்டில் இருக்கிறானே' என்றுதான் மகிழ்ந்தாள்.

சித்ரா எப்போதும்போல் தான் கலகலவென்று பழகினாள். மெல்ல, மெல்ல அவளுக்கும் தினகரன்பால் ஓர் ஈர்ப்பு ஏற்பட்டது. தினகரனும், அவளைத் தனிமையில் சந்திக்கும் சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிக் காத்திருந்தான்.

"அக்கா! அக்கா!"

சித்ரா உள்ளே நுழைந்த நிமிடம், தினகரன் பிரகாசமானான்.

சுவாதீனத்துடன், அவள் சமையலறையில் நுழைந்து, விமலாவுக்கு ஒத்தாசை செய்ய ஆரம்பித்தாள். கண்கள் மட்டும் அடிக்கடி தினகரன் மேல் பார்வையை வீசியது.

தினகரன் அன்று அலுவலகத்திலிருந்து வந்தவுடனேயே, காபி கொடுத்தவள் ஏறிட்டுப் பார்த்தபோது, விமலா தலைகுனிந்தாள்.

"உங்ககிட்டே ஒரு முக்கியமான விஷயம் பேசணும். இனிமேலும், நாம கண்ணாமூச்சி ஆட்டம் ஆடறதுல அர்த்தமில்லே. எப்படியும் உங்க மனசை, என் அன்பால மாத்திடலாம்னு நினைச்சது, விழலுக்கு இறைத்த தண்ணியாயிடுச்சு. என்னை நானே ஏமாத்திக்கவும் விரும்பலே.

உங்களுக்கு ஏத்த ஜோடியா நான் நிச்சயமா இல்லை. இதை நான் உணர்ந்திருந்தாலும், பேராசையால, இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிச்சேன். அது எவ்வளவு முட்டாள்தனம்னு இப்போ நல்ல புரிஞ்சுக்கிட்டேன். அதுக்குத் தண்டனையும் அனுபவிக்கிறேன்.

சித்ராவைப் பத்தி ஓர் அபிப்பிராயம் உங்க மனசுல இருக்குங்கிறது எனக்குத் தெரியும். அவ உங்களுக்கு ஏத்த ஜோடி தான். அவளையே நீங்க கல்யாணம் பண்ணிக்க நான் மனசார சம்மதிக்கிறேன்.

ஆனா, நான் இங்கே இருக்க மாட்டேன். என்னோட வாழ்க்கையை நடத்த ஒரு ஜீவனாம்சம் கொடுத்திடுங்க. உங்க நினைப்போடயே நான் காலத்தை ஓட்டிவிடுவேன்!"

அதுநாள்வரை அடக்கி வைத்திருந்த உணர்ச்சிகள் வெடித்துச் சிதற, அவளது கண்களில் அருவியாகக் கண்ணீர். உள்ளத்துப் போராட்டத்தினால் உடல் ஆடியது.

சற்று நேரம் திக்பிரமை அடைந்த தினகரன், மெல்ல நிதானத்துக்கு வந்தான்.

இப்போதும் கணவனுக்காகத் தன்னையே அழித்துக் கொள்ளத் துணியும் அவள் குணம்...

அங்கேதான் விமலா உயர்ந்து நின்றாள்.

'அழகான மனைவி கண்களுக்கு மட்டும் தான் விருந்தாகிறாள். ஆனால் அன்பான, பண்பான மனைவி, மனதுக்கே விருந்தாகிறாள்.'

எங்கோ படித்த வரிகள் நினைவுக்கு வர, விமலா, தினகரனின் மனத்துக்கு விருந்தானாள் இப்போது!

---

ரகுவிடம் இருந்து வந்திருந்த கடிதத்தைப் பார்த்து புன்னகைத்தாள் திவ்யா. ரகு அவளின் நீண்ட நாள் காதலன். அவளைத் திருமணம் செய்வதற்காகவே வெளிநாடு போய், நான்கு வருடங்களுக்குப் பிறகு மீண்டும் நாளை நாடு வருவதாக கடிதத்தில் எழுதியிருந்தான் ரகு.

கடிதத்தை வாசித்த திவ்யாவுக்கு உச்சி குளிர்ந்தது. 'எவ்வளவு நாட்களுக்குப் பிறகு ரகுவைச் சந்திக்கப்போகிறோம். நாளை ரகு நாடு வரப்போகிறார். அந்த அழகான முகத்தைப் பார்த்து, அன்பாகப் பேசி

# முகத்திரை

எத்தனை நாட்கள் ஆகின்றன? நாளையப் பொழுதை அவருடன்தான் கழிக்க வேண்டும் என்று நினைத்தவளுக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது. அம்மாவிடம் சென்று விசயத்தை சொல்லி விட்டு, ரகுவுடைய வரவுக்காய்க் காத்திருந்தாள் திவ்யா.

வாசலில் கார் சத்தம் கேட்டு, தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த திவ்யா, அவசரமாக ஓடி வந்தாள். ரகுவை வரவேற்க அவள் மனம் துடித்துக் கொண்டிருந்தது. வாசல் படிக்கு வந்து காரைப் பார்த்தாள். 'காரிலிருந்து இறங்கி ஒரு வாலிபன் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்!' யார் அவன்? முகமெல்லாம் இப்படி விகாரமாக இருக்கிறதே! பார்க்கவே பயமாக இருக்கிறது. ரகுவென்று சொல்லிக்கொண்டு வேறு யாராவது வருகிறானோ?' அவனைப் பார்த்தவளுக்குப் பயம் பற்றிக் கொண்டது.

"யார் நீங்க? உங்களுக்கென்ன வேணும்?" பயத்தினால் நடுங்கியவாறே கேட்டாள் திவ்யா.

"என்ன அடையாளம் தெரியல்லியா? நான்தான் திவ்யா ரகு!" என்றான் ரகு.

"நீங்களா? நிச்சயமா இருக்காது. நீங்க பொய் சொல்றீங்க!"

"இல்ல திவ்யா நான்தான் ரகு. நான் வேல செய்யும்போது ஏற்பட்ட ஒரு விபத்தில என் முகம் அடிபட்டதால இப்படி ஆயிடுச்சி. அதனால... உன்னால அடையாளம் காண முடியல்ல. அது சரி திவ்யா. நம்ம கல்யாணத்த எப்போ வச்சிக்கலாம்."

"கல்யாணமா? உங்களோடயா? உங்களப் பார்க்கவே எனக்கு அருவருப்பா இருக்கு. உங்களக் கல்யாணம் செஞ்சிக்கிட்டு நான் எப்படி சந்தோசமா வாழ்றது ரகு?"

"திவ்யா! நான் உன்ன உயிருக்குயிராக் காதலிக்கிறேன் திவ்யா!"

"நான் காதலிச்சது உங்கள இல்ல. என் அழகான ரகுவ."

"அப்போ... நீ என்ன என் அழகுக்காகவா காத



## நிந்தவூர் எம்.ஹிதாயத்

லிச்சே? என் மனசுக்காக இல்லயா?"

"ஆமாம்! நான் காதலிச்சது என் ரகுவோட அழகான முகத்துக்காகத்தான்! இப்படி அகோரமான முகத்துக்காக இல்ல."

"ரொம்ப தேங்ஸ் திவ்யா. உன்னோட காதலச் சோதித்துப் பார்க்கணும் என்கிறத்துக்காகத்தான் இந்த மாதிரி வேஷம் போட்டுக் கொண்டு உன்ன சந்திக்க வந்தேன். நாளைக்கு கல்யரணம் ஆகி நீ என்னோட குடும்பம் நடத்தும்போது எனக்கேதாவது ஏற்பட்டு என் முகத்துக்கு இப்படியொன்னு ஆகிட்டா அப்புறம் நீ என்ன சந்தோசமா நடத்துவாயா இல்லயா என்பதச் சோதிக்கத்தான் இப்படியொரு வேஷம் போட்டேன். உன்னோட வேஷம் கலஞ்சு போச்சு. இனிமேல் உன்னோட வாழ நினைக்கிறதில அர்த்தமே இல்ல. நான் வாறேன் திவ்யா."

என்றவன், தன் முகத்தில் போட்டிருந்த போலித் திரையை அகற்றி விட்டு, அங்கிருந்து நகர, கலங்கிய கண்களோடு அவனையே பார்த்து நின்றாள் திவ்யா.

---

அம்மா எந்தச் சமயத்திலிருந்து எனக்குச் சிநேகிதியாய் மாறினாள் என்று எனக்குச் சரியாய் நினைவில்லை. எதனால் என்னை பிள்ளையாய் நடத்தாமல், சிநேகிதனாய் நடத்த ஆரம்பித்தாள் என்றும் புரியவில்லை. தன் பெற்றோரால் வெகுவாக அடக்கி அடக்கி வளர்க்கப்பட்ட காரணத்தாலோ, அல்லது கணவனால் ஒரு சுகமும் படவில்லை என்பதாலோ, இனி பிள்ளைதான் என்ற உணர்வினாலோ.... சரியாய்த் தெரியவில்லை- இதுபற்றிக் கேட்டால் மட்டும், அம்மாவிடமிருந்து ஒரு இதழ்பிரியாத புன்னகைதான் விடையாய்க் கிடைக்கும்.

அழகும் குணமும், பண்பும் அம்மாவிடம் குறைவற இருந்தும்கூட, அப்பாவின் புத்தி கோணலாய்ச் சென்றது.

இன்னொரு பெண்ணுடன் அவருக்கிருந்த தொடர்பை ஊரே கிசுகிசுத்தது. அது நிச்சயமாய்த் தெரிந்த ஒரு நாள், அம்மா சற்று நேரம் பிரமை பிடித்ததுபோல் இருந்தாள். நிறைய யோசித்தாள். ஒரு நல்ல மனோநிலையில் அவருக்கு மென்மையாக அவர் தவறை உணர்த்த முயற்சி செய்தாள்.

அந்த மென்மையை மதிக்கும் அளவுக்கு அவரிடம் மனிதத்தன்மை இல்லாத காரணத்தால், மூர்க்கத்தனமாக அவரால் தாக்கப்பட்டாள். அவர் அடித்த அடியில், அவள் உதடு கிழிந்து இரத்தம் வழிந்தது எனக்கு நன்கு நினைவிருக்கிறது. அன்று அவர் அடித்த காரணம் புரியவில்லை.

அதற்குப் பிறகு, அம்மாவின் முகத்தில் சோகத்தைத் தவிர, வேறெதையும் நான் கண்டதில்லை. ஆயினும், அம்மா அழுது நான் பார்த்ததில்லை. அந்தச் சோகத்திலும் ஓர் உறுதி படர்ந்திருக்கும் அவள் முகத்தில்.

தவறு அம்பலத்துக்கு வரும்வரைதான், மனிதன் நல்லவனாய் வேஷம் போடுவான் போலும்! அப்பா போட்ட வேஷமும் கலைந்தது. விஷயம் வீட்டுக்குத் தெரிந்துவிட்ட பிறகு துணிச்சல் அதிகரித்தது. அதற்குப் பிறகு அப்பா வீட்டுக்கு வராத இரவுகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அப்படியே வந்தாலும், காரணமின்றி அம்மாவை ஏசுவதும் பேசுவதும் அடிப்பதும் துவைப்பதுமாய்... அம்மா சகலத்தையும் அழுகையின்றித் தாங்கிக் கொண்டாள். ஒருகால், தனிமையில் அழுதாளோ என்னமோ? யார் முன்பும் அவள் அழுது நான் பார்த்ததில்லை.

ஒரு நாள் அம்மாவிடம் ஏதோ பேப்பரை நீட்டிக் கையெழுத்து கேட்டார். அம்மா அதைப் படித்துப் பார்த்துவிட்டு, அவரையே ஒரு கணம் உற்றுப் பார்த்தாள். பிறகு பேனா வாங்கி நிதானமாகத் தன் கையெழுத்தை அழுத்தமாகப் போட்டு அவரிடம் கொடுத்துத் தன்னை அவரிடமிருந்து சுதந்திரப்படுத்திக் கொண்டாள். அதற்குப் பிறகு, அப்பா வரவேயில்லை. எங்கே போனார்; எப்படியிருக்கிறார் என்று எங்களுக்குத் தெரியாது.

"அப்பா எங்கேம்மா? வரமாட்டாரா?" என்று ஒரு இராத்திரியில் அம்மாவிடம் நான் மெல்லக் கேட்டேன்.

"வரமாட்டார் சங்கரா! உனக்கு அப்பா வேணுமாடா கண்ணா? அப்பாட்ட கொண்டு விடட்டுமா?"

"விட்டுட்டு நீ வந்துடுவாயா? எங்கூடயே இருப்பாயா?"

"வந்துடுவேன் கண்ணா. நீ யாராவது ஒருத்தர்கிட்டதான் இருக்க முடியும். உனக்கு அப்பா வேணும்னா, உடனே கொண்டு விடறேன். இல்ல நான்தான் வேணும்னா இனிமே அப்பாவைப் பத்திக் கேட்காதடா சங்கரா!"

"கேட்கமாட்டேம்மா. எனக்கு நீ போதும்!"

அம்மா என்னை அணைத்துக் கொண்டு, முதன் முறையாகக் கண் கலங்கினாள். அது ஆனந்தக் கண்ணீராயிருக்கலாம்.

அதற்குப் பிறகு, அம்மா பல வேலைகள் செய்து பணம் சம்பாதித்தாள். எத்தனை

# அம்மா

வேலையிருந்தாலும்கூட, எனக்கென்று நேரம் ஒதுக்கி என்னைக் கவனித்தாள். நான் கொஞ்சம் வளர்ந்த பிறகு, என்னோடு நிறையப் பேசினாள். கற்பகாம்பாளின் காசு மாலை அழகு முதல், நம் நாட்டு அரசியல்வரை எங்கள் பேச்சில் அடிபடாத விஷயம் கிடையாது.

"அப்பா ஏம்மா நம்பளை விட்டுட்டுப் போய்ட்டார்?" என்று அதே பதினைந்து வயதில் நான் கேட்டேன்.

அம்மா யோசித்தாள்.

"உனக்கு இஷ்டமில்லன்னா சொல்ல வேண்டாம்மா."

"இல்லடா சங்கரா. நான் சொன்னா உனக்குப் புரியுமான்னு யோசிக்கிறேன்."

"புரியலைன்னா சொல்லிடறேன். விட்டுடுவோம்; நீ விளக்கிச்சொல்ல வேண்டாம்! சரியா?"

அம்மா சிரித்தாள். "இவ்ளோ தூரம் பேசறவனுக்குப் புரியுமான்னு யோசிச்சதே தப்பு!" என்றாள்.

எனக்கும் சிரிப்பு வந்தது.

"ராமாயணம் தெரியுமோல்லியோ உனக்கு?"

"தெரியுமே!"

"எங்க சொல்லு பார்ப்போம்."

"தசரத மகாராஜாவுக்கு நாலு பிள்ளைகள். இராமன்தான் மூத்தவன். ராமனுக்கும், சீதைக்கும் கல்யாணம் ஆனதும், பட்டாபிஷேகம் பண்ண ஏற்பாடு பண்றார் தசரதன். கைகேயி, அதைத் தடுத்து வரம் வாங்கி, ராமனைக் காட்டுக்கு அனுப்பிடறா. ராமனும், சீதையும் காட்டுக்குப் போக, அவர்களோட லஷ்மணனும் போறார். காட்டிலே சீதையை இராவணன் தூக்கிட்டு போக, ராமன் பரிதவிக்கிறார். அப்புறம் சீதையை அனுமாரோட உதவியால கண்டு பிடிச்சு இராவணனை வதம் பண்ணிச் சீதையை மீட்டுத் திரும்பிவரார்!...."

"கரெக்ட். இந்தக் கதையோட சிறப்பு என்ன தெரியுமா? ராமர் சீதையைத் தவிர, வேற ஒரு பொண்ணைத் திரும்பிக்கூட பார்க்காம ஏக பத்தினி விரதனா இருக்கறதுதான். அதுக்குப் பதிலா ராமன் சூர்ப்பனகைகிட்ட மயங்கியிருந்தான்னா, இன்னிக்கு ராமாயணமும் இல்ல, ராமனை யாரும் உசத்தியா கொண்டாடியும் துதிக்கமாட்டா. உங்கப்பா ராமனா இல்லாததுதான் காரணம்டா சங்கரா. சூர்ப்பனகைதான் உசத்தின்னார்; சரி, அவளோடயே போய் சந்தோஷமாயிருங்கோன்னு அனுப்பிட்டேன். நான் பண்ணினது தப்பாடா?"

"தப்பில்லம்மா. ஆனா, நீ சொல்ற மாதிரி காவியத்து ராமனும், ரொம்ப உசத்தியில்லம்மா. கடசில சீதையை சலவைக்காரன் ஏதோ சொல்லிட்டான்னு காட்டுக்கு கர்ப்பிணியா அனுப்பி வெச்சுட்டானே? அதனால, எனக்கு அவனையும், பிடிக்கலை. ராமன் ஏம்மா அப்படிச் செஞ்சான்?"

"தெய்வம் சாதாரண மனுஷன்னாத்தானே



## வித்யா சுப்பிரமணியம்

பொறந்தது சங்கரா? அதனாலதான் சாதாரண மனுஷ குணத்தை கடசியில வெளிப்படுத்திதோ என்னமோ? தப்பு பண்றதுதானே மனுஷ குணம்னு அப்படிச் செஞ்சுதோ என்னமோ?"

"அப்புறம், அவர் சீதை மேல வெச்சிருந்த அன்புக்கு என்ன அர்த்தம்மா...? அப்போ அந்த அன்பெல்லாம் சும்மாவா...? நிஜமான அன்பு இப்படி ஒரு தண்டனையை அவளுக்குத் தர விட்டிருக்குமா? அவ தீ குளிச்சு, தன்னை நிரூபிச்சதுதான் உலகத்துக்கே தெரியுமே, அப்புறம் ஏன் சலவைக்காரன் பேச்சை பெரிசு பண்ணனும்?"

'கடவுளே, எத்தனை தீர்க்கமாய் இந்த வயசில் இந்த பிள்ளை யோசிக்கிறது?' என்று பிரமித்தாளோ என்னமோ? என் கேள்விக்கு விடை சொல்ல முடியாமல் திகைத்தாள். என்னுடைய இந்தச் சந்தேகத்திற்கு இன்றுவரை சரியான விடை எனக்குக் கிடைக்கவில்லை.

"உனக்கு அவரைப் பார்க்கணும்னு தோன்றாதாம்மா? வேணும்னா சொல்லி...."

"வேண்டாம்டா..." -அம்மா குறுக்கிட்டாள்.

"ஒரு நாள், என்னைத் தேடி தானே வருவார். எனக்கு நம்பிக்கையிருக்கு. தப்போ, சரியோ அவருக்கு உன்னைப் பெத்துட்டேன். அந்த பெத்த கடனுக்கு சந்தர்ப்பம் கிடைச்சா, அவருக்கு பெரிசா ஏதாவது செஞ்சுடுடா சங்கரா. உன் பிறந்த கடனைத் தீர்த்துடு."

அம்மா என்ன சொல்ல வருகிறாள் என்று நான் புரிந்து கொள்ளும் முன்னரே, அம்மா அங்கிருந்து அகன்று பூஜை அறைக்குள் சென்று அமர்ந்து கண் மூடிக்கொண்டாள். இனி அவளைக் கலைப்பது கடினம் என்பதால், நானும் என் அறைக்குச் சென்றுவிட்டேன்.

அதற்குப் பிறகு, ஒரு வாரம் கழித்து, அம்மா உடல் நலமிழந்து படுக்கையில் வீழ்ந்தாள். உழைத்து உழைத்துச் சலித்த தேகம் ஓய்வுக்கு ஆசைப்பட்டுவிட்டது போலும். தன் உணர்ச்சிகளை உள்ளுக்குள்ளேயே அடக்கிக் கொண்டாளோ என்னமோ, அவள் உடல் நிலை ஓரளவுக்குமேல் அதைத் தாங்க முடியாமல் நலிவடைந்துவிட்டது. மண்டைக்குள் ஏதோ ஒரு இரத்த நாளம் வெடித்து அம்மாவை 'கோமா'வில் தள்ளியது. நான் சின்னப் பிள்ளையைப்போல் தலையிலடித்துக் கொண்டு அழுதேன். என் பசி, பணி அனைத்தையும் மறந்து அவளருகிலேயே தவமிருந்தேன்.

யாருக்கும் கஷ்டமின்றி,

> "சலவைக்காரன் ஏதோ சொன்னான் என்பதற்காக சீதையை கர்ப்பிணியாக காட்டுக்கு அனுப்பிவைத்தானே ராமன். எனக்குப் பிடிக்கவில்லை"

மூன்றே நாளில் நினைவு திரும்பாமலே அம்மாவின் சுவாசம் நின்றது. உயிர்த் துடிப்பு அடங்கியது. ஏற்கனவே, கண்ணீர் வற்றிவிட்ட நிலையில், நான் பிரமை பிடித்தவன்போல், அவள் சடலத்தையே வெறித்துப் பார்த்தபடி எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தேனோ? நண்பர்கள் சிலர் என்னைத் தடவிக் கொடுத்து மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைக் கவனிக்கச் சொன்னபோது, உயிரற்றவன் போல் எழுந்தேன்.

இடுகாட்டில் சிதைமேல் அவளைப் பார்த்தபோது, மளுக்கென்று ஏதோ உள்ளே உடைந்து கண்ணீர் பெருகியது.

"ஐயிரண்டு திங்களாய் அங்கம் எல்லாம்
நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச்
செய்ய-இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனக முலை
தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?"

உள்ளே பட்டினத்தார் உயிர்த்தெழுந்தார். சிதைக்குத் தீ மூட்டினேன்.

'வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ?'

மயக்கம் வந்தது. இழந்தது என் தாயை மட்டுமில்லை; என் சிநேகிதியை; என் குருவை;... இன்னும் எத்தனையோ ஸ்தானம் வகித்தவளை அல்லவா, இழந்திருந்தேன்?...

சுடுகாட்டிலிருந்து தனியனாய்ப் புறப்பட்டேன். நான் வந்த வழிக்கு நானே தீயிட்டுவிட்டு! எதிரே மற்றோர் பிணம் வந்தது- சுற்றிலும் காக்கிச் சீருடைகள் புடை சூழ.

அனாதைப் பிணம் என்று யாரோ உரக்கச் சொன்னதும்-பிணத்தின் முகம் பார்த்தேன்- என் தகப்பன்! என் கால்கள் ஆணி அறைந்தாற்போல் நின்றன.

"எப்படி?" விசாரித்தேன். சாலை-விபத்தாம். பிணத்தை வாங்கிச் செல்ல யாரும் முன்வரவில்லையாம். பாதியில் வந்தவள், பாதியிலே சென்றதால், அனாதையாய், வந்த இடம் நோக்கிப் புறப்பட்டு விட்டவரைப் பார்த்துச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

என் தாயின் சிதைக்கு சற்றுத் தள்ளிதான் அவரைக் கிடத்தினார்கள்.

"ஒரு நாள் என்னைத் தேடி வருவார்டா சங்கரா!"

இதைத்தான் சொன்னாயா அம்மா?

"பிறந்த கடனுக்குச் சந்தர்ப்பம் கிடைச்சாப் பெரிசா ஏதாவது செஞ்சுடுடா!"

கடவுளே...! நான் பாய்ந்தோடிச் சென்றேன்; காக்கி உடுப்புகளிடம் பேசினேன்.

தாயின் சிதையிலிருந்து கனிந்து எரிந்த ஒரு கொள்ளியை உருவிக் கொண்டேன். அவர் நெஞ்சில் தீயிட்டேன். எனக்கு அழுகை வரவில்லை.

"முன்னை இட்ட தீ முப்புரத்திலே;
பின்னை இட்ட தீ தென் இலங்கையிலே;
அன்னையிட்ட தீ அடிவயிற்றிலே;
யானும் இட்ட தீ மூழ்க மூழ்கவே!...."

பிறந்த கடன் தீர்ந்தது. அம்மா அகமகிழ்ந்திருப்பாள். அவள் ஆத்மா குளிர்ந்திருக்கும். அவள் காருண்யம்தான். அவர் சிதையில் தீயாய் எரிகிறது! அவருக்கு அது தெரியுமா?

அம்மாவை மீண்டும் ஒரு முறை பார்க்கத் தோன்றியது. வேண்டாம்! எரிவதைப் பார்க்க வேண்டாம்! நான் புறப்பட்டேன்.

"வீற்றிருந்தாள் அன்னை: வீதிதனில்
இருந்தாள்;
நேற்றிருந்தாள்; இன்று வெந்து நீறு
ஆனாள்!"

பாதி வழியிலேயே நான் சரிந்து உட்கார்ந்து வாய்விட்டு அழ ஆரம்பித்தேன்.

"அ...ம்...மா!... ஆ...ஆ!...."



படிப்பகம்

www.padippakam.com

# காலமெல்லாம் காதல் வாழ்க



கிட்டாதாயின்
வெட்டென மறக்கலாம்!
எட்டாதாயினும்
காதலியை மறக்கலாமா?

பிரிந்தவன் வருந்தினான்.
துயரத்தில் அழுந்தினான்.

இன்னமும்
வருடம் ஒன்று
பாக்கியிருக்கிறது!
வணிக விடயமாக
கடல் கடந்தவன்
மறுபடி திரும்பும்
நாளை விரைவில்
வரும்படி அழைத்தான்!

எப்போது மீண்டும்
அந்த முகம்
காண்பேனோ?

இப்போது அங்கே
அவள்
என்ன செய்து கொண்டிருப்பாள்?

இப்போது
அவள்
என்னை நினைத்திருப்பாளோ?

இப்போது
அவள்
எனக்காக பிரார்த்திப்பாளோ?

உண்ண நினைத்தால்
உன் நினைப்பு
உண்ண முடியவில்லை!

உறங்க நினைத்தால்
உன் நினைப்பு
உறங்க முடியவில்லை!

மூச்சுக் காற்றாய்
உன் நினைப்பு
மோகம் முட்டுதடி!

முத்தம் இல்லாத
தினங்கள் எல்லாம்
திகட்டிப் போனதடி!

உன் மூக்கை
உரசா நாட்களெல்லாம்
சிறுத்துப் போனதடி!

சங்குக் கழுத்தில்
சரசம் செய்ய
ஆசை வந்ததடி!

பொங்கு தனத்தில்
புரளும் எண்ணம்
போதை தந்ததடி!

தங்கக் கால்களை
கொழுவிக் கொள்ள
கால்கள் தேடுதடி!

தத்தித் தத்தித்
தவழ்ந்த கரங்கள்
தாகம் கொள்ளுதடி!

ஒற்றி ஒற்றி
அறிந்த உதடு
ஆவல் கொள்ளுதடி!

வெற்றி வெற்றி
என்று கலந்தோம்!
நெற்றிகள் முட்ட
உச்சிகள் தொட்டோம்!

நினைக்க நினைக்க
இனிக்குதடி!
நெஞ்சுக்குள்ளே
தேன் சிந்துதடி!

சின்ன இடையில்
கிள்ளிய போது
சின்னப் பூவாய்
புன்னகை பூத்தாய்!

கன்னம்மீது
கைவிரல் ஊர
கண்களை மூடி
புருவம் துடித்தாய்!

கைகள் பரவி
திரைகளை விலக்க
காவிய நாயகி
ஓவியமானாய்!

ஈர இதழ்களில்
ஊறிய உதடுகள்
தீரும் வரைக்கும்
தேனைக் குடித்தன!

அமுதைப் பழிக்கும்
அற்புத சுவையடி!

உலகில் இல்லாத
அற்புத சுனையடி!
எந்தக் கூட்டிலும்
இல்லாத தேனடி!

பஞ்சினும் மெல்லிய
பளிங்கு இதழடி!

நினைவுகளில்
புழுங்கிக் கொண்டிருந்தான்!
கனவுகளிலும்
புலம்பிக் கொண்டிருந்தான்!

தூங்காமல்கூட
கனவு வரும் தெரியுமா?
அது காதலின்
விசித்திரம்!

செவ்விதழ் மின்ன
கருங்குழல் ஆட
மை விழி துள்ள
முன்னிரு மொட்டுக்கள்
கண்ணிரண்டை அள்ள
விண்ணிலிருந்து வந்த
தேவதைபோல
மயிலாள் வந்தாள்!

'பன்னிரு கையும்
பன்னிரு கண்ணும்
என்னிடமில்லையே'
அவன் ஏங்கிப் போனான்!

"உன்னிரு கையும்
உன்னிரு கண்ணும்
போதும் போதும்!
மெல்லத் தொடங்கி
மெல்ல முடிக்கலாம்!"
அவள் தைரியம் சொன்னாள்!

"தோள்கள் தேய்ந்தாச்சு
தேகம் நூலாச்சு! -

## இலக்கிய நயம்

ஏன் இளைத்தீர்
என்னுயிரே
ஏன் இளைத்தீர்?"
என்றாள் கவலையாய்.

நீ மட்டும் என்னவாம்
முழுநிலவாய் கண்டேன்,
தேய் பிறையாய்
ஆச்சுதடி இன்று
உன் தேகம்!"

"பெருமூச்சின் வெப்பத்திலே
மெழுகாக உருகிப்போனேன்!
பெரும் பிரிவு தாங்காமல்
கடுகாக உடல் சிறுத்தேன்

உன் கைகள் தழுவாமல்
உடல் தளர்ந்தேன்!
உன் க்ண் இரசிக்காமல்
எழில் இழந்தேன்!
உன் முத்தம் இல்லாமல்
ஒளியிழந்தேன்!

**தருவது ரசிகன்**

உன் மூச்சு கலக்காமல்
உயிர் பாதி பறிகொடுத்தேன்"

அவள் சொல்ல
அவன் உயிர் துடித்தது!

"வா! உயிரே!
உன் உயிரை
நான் பருக,
என் உயிரை
நீ பருகு!

அதரத்தின் வழியாக
ஊறுகின்ற அமுதத்தில்
உயிரும் உண்டு
உறிஞ்சத் தா!"

அவளை
இழுத்தணைத்தான்.
இதழ் பறித்தான்!

"சூரியக் கள்ளன்
தாமரை இலையின்
பனித்துளிகளை
உறிஞ்சுவது போல,
காதலக் கள்வன்
இதழ் ஈரமெல்லாம்
உறிஞ்சிக் கொண்டானோ?"

அவள் வியந்தாள்.
அவனும் வியந்தான்!
"சுவை, சுவை
புதுச் சுவை!" என்றான்.

"புதுச்சுவையா?
எல்லா இதழுக்கும்
இருக்கும் சுவைதான்!" என்றாள்.

"இல்லையடி கண்ணே!
நீ பேசும் மொழி மென்மை
அது தேன் மொழி!
நீ வீசும் புன்னகை வெண்மை
உன் பற்கள் வெண்முத்துக்கள்!
தேன்மொழியில் கலந்து
வெண் முத்தில் ஊறி
இதழ் தரும் அமுதம்
பாலும் தேனும்
கூடிக் கலந்த சுவை!"

அவள் வெட்கித்தாள்
"காலமெல்லாம் காதல்
வாழ்க, கலந்திருப்போம்
காதல் வெல்க"
என்றாள் மனதுக்குள்!
எல்லாம்
அவன் கனவுக்குள்!

பாலொடு தேன்கலந் தற்றே
பணிமொழி
வாலெயிறு ஊறிய நீர்"
அதிகாரம்: 113 குறள்: 1121

---

*ஸ்போர்ட்ஸ்*

## புதிய தெரிவாளர்



முன்னாள் அவுஸ்திரேலிய அணித்தலைவர் அலன் போர்டர், அவுஸ்திரேலிய அணியின் டெஸ்ட் போட்டித் தெரிவாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இத்தெரிவுக் குழுவில் போர்டருடன் ட்ரவர் ஹோன்ஸ், அன்ட்ரு ஹில்டிச் ஆகிய இருவரும் உள்ளனர்.

"வீரர்களைத் தெரிவு செய்வதற்காக எடுக்கும் முடிவுகள் கடினமாக இருக்கப்போகின்றன. தற்போது அவுஸ்திரேலிய அணிக்காக டெஸ்ட் போட்டியில் விளையாடிவரும் மார்க் டெய்லர், இயன் ஹீலி, ஸ்டீவ் வோவ், மார்க் வோவ் போன்றவர்கள் என்னுடன் விளையாடியவர்கள்," என்று கூறியுள்ளார் போர்டர்.

156 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியிருக்கும் போர்டர், அவற்றில் 93 போட்டிகளுக்குத் தலைமை தாங்கியுள்ளார். இவர் டெஸ்ட் போட்டிகளில் 11,174 ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒருநாள் போட்டிகள்

ஓய்வுபெற்ற இலங்கை- இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கலந்து கொள்ளும் 5 ஒருநாள் போட்டிகள் இந்தியாவில் இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளில் பங்கேற்க இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களின் அணி சம்மதமளித்திருக்கின்றது.

இந்தியாவின் முன்னாள் கிரிக்கெட் வீரர்களுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் இப்போட்டிகள் ஏப்ரல் 14முதல் 23 வரை நடைபெறவிருப்பதாக இவ்வமைப்பின் பொதுச் செயலாளர் தெரிவித்திருக்கிறார். இதற்கு இலங்கை அணி ஒப்புதலளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

## 18 மாத தடை

இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை, போதைப் பொருள் பயன்படுத்தும் கிரிக்கெட் வீரர்களைக் கண்டுபிடிக்கக் கடுமையான பரிசோதனைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

இங்கிலாந்தின் டெஸ்ட் ஆட்டக்காரரான இடதுகைப் பந்துவீச்சாளர் ஃபில் ஃப்னெல் போதைப் பொருள் பாவித்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதைத் தொடர்ந்து, பரிசோதனைக்கு அழைக்கப்பட்டபோது, அவர் அதற்கு உடன்பட மறுத்துவிட்டார்.

இதற்குத் தண்டனையாக இவர் 18 மாதங்களுக்கு போட்டிகளில் ஆட முடியாதெனத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து- விளையாடி முடிந்த பின்னர் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளை, முன்கூட்டியோ அல்லது இடைநடுவிலோ நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மினி உலகக் கோப்பை

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இவ்வருடம் ஒக்டோபர்-நவம்பர் மாதங்களில் ஷார்ஜாவில் மினி உலகக் கோப்பைக்கான போட்டியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவிருக்கிறது.

இக்காலத்தில் இந்திய அணி ஸிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ளது. மினி உலகக் கோப்பை போட்டியில் தடங்கல்கள் ஏற்படாவண்ணம் இவ்விரு அணிகளுக்கிடையேயான போட்டி அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

1. தொடக்க ஆட்டக்காரராக இருந்து 10வது ஆட்டக்காரர் வரை சகல நிலைகளிலும் துடுப்பெடுத்தாடிய இந்தியவீரர் யார்?
2. இந்தியா தனது முதல் டெஸ்ட்டை யாருடன், எங்கு, எப்போது விளையாடியது?
3. அடுத்தடுத்து மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுக்களை (ஹட்ரிக்)யும் எல்.பி.டபிள்யூ. முறையிலேயே வீழ்த்திய வீரர் யார்?
4. இந்திய அணிக்காக அதிக டெஸ்ட் போட்டிகளுக்குத் தலைமை தாங்கியவர் யார்?
5. ஷார்ஜாவில் முதலாவது போட்டி எப்போது நடைபெற்றது?

**விடைகள்**

1. வினு மன்கட்
2. இங்கிலாந்துடன் லோட்ஸில் 1932ல் விளையாடியது.
3. பாகிஸ்தான் வீரர் அக்கிப் ஜாவிட்.
4. சுனில் கவாஸ்கர். 47 போட்டிகளுக்கு.
5. 1983 ஏப்ரல் மாதம் நடந்தது.

---

## சிந்தியா பதில்கள்

★ சிந்தியா! தமிழகப் பத்திரிகைகள்கூட ரஜினியின் பிரசாரத்தால் தி.மு.க. அணிக்கு சார்பாக இம்முறையும் அலைவீசும் என்றே கூறிவந்தன. நீர் மட்டுமே ரஜினியின் பிரசாரத்தால் இம்முறை அதிக பயன் ஏற்படாது என ஆருடம் கூறியிருந்தீர்! அது எப்படி?

சி.ரங்கநாதன், மட்டுநகர்.

அப்படி ஒன்றும் விசேஷ ஞானம் தேவையில்லை. கடந்த தமிழகத் தேர்தலில் அ.தி.மு.க.வை எதிர்க்க ஒரு சக்தி தேவைப்பட்டது. அந்த நேரத்தில் ரஜினியின் பிரவேசம் முக்கியத்துவம் பெற்றது. தற்போது ஜெயலலிதா ஆட்சியில் இல்லை. ஜெயலலிதாவின் ஊழல் பற்றி பேசிப் பேசியே மக்களை சலிக்கவைத்தது தி.மு.க. தவிர தி.மு.க ஆட்சியில் பெரிய சாதனைகளும் ஒன்றுமில்லை. ம.தி.மு.க., பா.ம.க. கட்சிகள் கடந்த தேர்தலில் கணிசமான வாக்குகளைப் பெற்றிருந்தன. எனவே விருப்பு வெறுப்பற்ற ஆய்வை தமிழக பத்திரிகைகளும் மேற்கொண்டிருந்தால் உண்மை தெரிந்திருக்கும்; தற்போதைய அதிர்ச்சிக்கு இடமிருந்திருக்காது!

★ சோனியா எதிர்காலத்தில் பிரதமராவாரா?

எம்.யோகன், கனடா.

இத் தேர்தல் வெள்ளோட்டம்தான். அடுத்த தேர்தலைத்தான் குறிவைத்திருக்கிறார் என்று தெரிகிறது! பாரதிய ஜனதா ஆட்சி அமைத்து அற்ப ஆயுளில் கவிழுமானால், காங்கிரஸ் மட்டுமே நிலையான ஆட்சியைத் தர முடியும், "சோனியாவே பிரதமர்" என்ற கோஷங்கள் செல்லுபடியாகும், என்று சோனியாவின் ஆலோசகர்கள் கணக்குப் போடக்கூடும்.

★ சமயோசித புத்தி என்றால் என்ன? ஒரு உதாரணம் கூறுங்களேன்?

செல்வி எஸ்.நர்மதா, கொழும்பு-08.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஃபிரஞ்சு மேதை வோல்டேர், 1770ம் ஆண்டில் ஒருநாள் ஃபிரான்சிலிருந்து பிரிட்டனுக்குப் போனார்.

அந்தக் காலத்தில் பிரிட்டனுக்கும், ஃபிரான்சுக்கும் இடையே பயங்கரப் பிரச்சனை. ஃபிரான்சு நாட்டவர்கள் தாழ்ந்தவர்கள் என்றும், ஃபிரான்சு நாட்டவரின் கால் தம் மண்ணில் படுவது பாவம் என்றும் நினைத்தனர் பிரிட்டிஷ்காரர்கள்.

ஆனாலும் ஒரு முக்கிய காரியத்திற்காக பிரிட்டனுக்குப் போயாக வேண்டிய கட்டாயம் வோல்டேருக்கு.

வோல்டேர் வருகிறார் என்று தெரிந்ததும், பிரிட்டிஷ் வெறியர்கள் அவரை நகருக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். விரட்ட ஆயத்தமாகினர்.

"தாழ்ந்த நாட்டவனை இங்கே வர விடாதீர்கள்! தூக்கில் போடுங்கள்!" என்று கூச்சல் எழுந்தது.

அப்போது வோல்டேர் பதற்றப்படாமல்: "நண்பர்களே! உங்களைப் போன்ற மேன்மைமிகுந்த ஆங்கிலேயர்களில் ஒருவனாக என்னைப் படைக்காமல் கடவுளே என்னை ஏற்கனவே தண்டித்துவிட்டபின்னர், நீங்கள் வேறு தண்டிக்க வேண்டுமா?" என்று கேட்டார்.

அவ்வளவுதான்: ஆங்கிலேயர்கள் தாமாக அவருக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றனர்.

★ முதல் டெஸ்டில் (அவுஸ்திரேலியாவுக்கு எதிராக) இந்திய அணியின் ஆட்டம் பற்றி என்ன கூறுகிறீர்?

பி.சுரேஸ்குமார், கொழும்பு-06.

முதல் இன்னிங்ஸில் கோட்டை விட்டதை இரண்டாவது இன்னிங்ஸில் அபாரமான ஒன்றரை சதம் மூலம் ஈடுகட்டிய சச்சினின் ஆட்டம் செம தூளப்பா!

★ கிளிநொச்சி நகர் பற்றிய சண்டைச் செய்திகள் முரசில் மட்டும் வேறுவிதமாக வெளியானதே? என்ன காரணம்?

என். பார்த்திபன், கொழும்பு-11



கிளிநொச்சி நகரில் உள்ள பாடசாலையில் புலிகள் நிலைகொண்டிருந்த காட்சி

இங்குள்ள படம் பதில் சொல்லும்! முரசு பொய் சொல்லாது!

★ டியர் சிந்தியா! கனவு காண்பதிலேயே இன்பம் காண்பவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

மு.கஜேந்திரா, திருமலை.

சமீபத்தில் படித்த கதை:

வெள்ளைக்காரர், ஜப்பானியர், இந்தியர்- இந்த மூவரும் ஒருநாள் சந்திக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சின்ன அல்வா துண்டு கிடைக்கிறது. மூவரும் பங்கு போட்டுக் கொள்ள முடியாத சின்னத் துண்டு.

அதனால் அவர்கள் ஒரு முடிவுக்கு வருகிறார்கள். "இப்போது இந்த அல்வாவை ஒரு பாத்திரத்தில் மூடிவைப்போம். இன்றிரவு தூங்கும்போது மூவரில் யாருக்கு அற்புதமான சிறந்த கனவு வருகிறதோ, அவருக்கே இந்த அல்வாத் துண்டு...!" என்று தீர்மானிக்கிறார்கள்.

மறுநாள் காலையில் தங்கள் கனவைப் பகிர்ந்து கொள்ள மூவரும் அல்வா இருக்கும் பாத்திரத்தைச் சுற்றி அமருகிறார்கள்.

முதலில் வெள்ளைக்காரர்: "நேற்றிரவு என் கனவில் கடவுள் வந்தார். தன் பூந்தோட்டத்துக்கு அழைத்துச் சென்று அற்புதங்களைக் காண்பித்தார்," என்றான்.

அடுத்து ஜப்பானியர்: "நேற்றிரவு என் கனவிலும் கடவுள் வந்தார். ஆனால் அவரை நான் என் பூந்தோட்டத்துக்கே அழைத்துப் போய் அவருக்கே பல அற்புதமான விஷயங்களைக் காண்பித்தேன்," என்றான்.

கடைசியாக இந்தியர் பேச ஆரம்பித்தார். "நேற்றிரவு என் கனவிலும் கடவுள் வந்தார். ஆனால் நாங்கள் பூந்தோட்டத்துக்கு எல்லாம் போகவில்லை! கடவுள் என்னைப் பார்த்து, 'அடேய் முட்டாளே!... எதிரிலேயே இவ்வளவு இனிமையான அல்வாத் துண்டை வைத்துக் கொண்டு கனவு காண்கிறாயே. முதலில் தூக்கத்தை விடு. உடனே எழுந்து போய் அல்வா துண்டை சாப்பிடு' என்று கடும் கோபத்துடன் கட்டளையிட்டார்". என்றான்.

மற்ற இருவரும் பாத்திரத்தைத் திறந்து பார்த்தனர். அல்வாத் துண்டைக் காணோம்!

★ சிந்தியா! ஜெய லலிதாவுக்கு மீண்டும் வெற்றி முகம் தெரிவதாக சொன்ன ஒரே ஆள் நீர் தானப்பா! மை போட்டுப் பார்த்தீரா? மந்திர தந்திரம் தெரியுமா?

திருமதி வித்யா கணேஷ், மட்டுநகர்.

உங்களை மாதிரி ஆட்களால்தானப்பா மந்திர தந்திர மாந்திரீக ஆசாமிகள் தோன்றுகிறார்கள். கருணாநிதியும் ஊழலில் கொடி கட்டிப் பறந்தவர்தான்! பாமர மக்களுக்கு எம்.ஜி.ஆர். சொல்லித் தெரிந்த உண்மை அது! ஆகவே ஜெயலலிதா பற்றி கலைஞர் பாடிய ஊழல் புராணங்கள் எடுபடவில்லை! கடந்த தேர்தலில் ஜெயாவை மக்கள் நிராகரித்ததுகூட ஊழல் காரணமாக அல்ல! ஆடம்பர உலாக்கள், ஆடம்பர திருமணம் என்பவைதான் உடனடி வெறுப்பை ஏற்படுத்தின. ஜெயலலிதாவை சிறையில் தள்ளியது மூலம் ஆடம்பர செல்வியை அப்பாவி செல்வியாக- அந்தோ பரிதாபமாக அதே மக்கள் நினைக்க வைத்தது கலைஞர் செய்த தவறு! இனி, கலைஞர் ஆட்சிக்கு கஷ்டகாலம்தான்! குறித்து வையுங்கள்! செல்வி மீண்டும் முதல்வராவார்!

★ ஷேன் வோர்னின் பந்து வீச்சை இந்திய அணி விளாசித் தள்ளிவிட்டதே?

கே.ஜெமீமா, மருதானை.

இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் சஞ்சய் மஞ்ச்ரேக்கர் இப்படிச் சொல்லியிருந்தார்: "ஷேன் வோர்ன் நல்ல பந்துவீச்சாளர்தான். ஆனால் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் அவருடைய ஸ்பின்னை ஈஸியா ஆடிவிடுவார்கள்."

சித்து, ராகுல் திராவிட், சச்சின், அசாருதீன் நால்வரும் ஆடிய ஆட்டத்தை பார்த்தவர்கள் சஞ்சய் மஞ்ச்ரேக்கரின் வாய்க்கு சர்க்கரை போடச் சம்மதிப்பார்கள்.

★ பாரதிராஜாவின் புதிய கதாநாயகி முன்னுக்கு வரக்கூடியவரா?

எம்.தினேஷ், வவுனியா.

பாரதிராஜா மெருகூட்டித்தந்த ராதிகா, ரேவதி, ராதா ஆகியோருடன் ஒப்பிட்டால் ரியா டம்மிதான்!

★ இன்றைய அரசியல்வாதிகளின் அடிப்படையான பொதுவான குணம் என்ன?

எல்.என்.இஸ்மாயில், மாத்தளை.

பொய்!

★ சிந்தியா! மறக்கக்கூடாதது எது?

ஆ.சரவணபவன், பண்டாரவளை.

ஞாபக சக்தி!

★ டியர் சிந்தியா! 'பொன்மனம்' பார்த்தீரா?

செல்வி வி.தயாளினி, கொழும்பு-06.

முற்பாதி கலகல. பிற்பாதி பொலபொல. (கண்ணீர்)



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி

## தலைவாயில் கதவோரம்

உலகின் கண் எண்ணற்ற உயிரினங்கள் தோன்றுகின்றன; ஒரு குறிப்பிட்ட காலம்வரை வாழ்ந்து மடிகின்றன. தொன்று தொட்டு நடந்து வரும் நியதி இது.

எண்ணற்ற இவ்வுயிரினங்களுள் மனிதன் மட்டுமே சிந்தித்துச் செயலாற்றும் திறனைப் பெற்றிருக்கிறான்.

ஆதிகாலத்தில் மிருகங்களைப் போலவே வாழ்ந்த மனிதன் காலப்போக்கில் மாற்றமடைந்தான். சிந்தனையின் மூலம் அறிவு வளர்ச்சி பெற்றது அறிவு வளரவளர அவனுடைய ஆற்றல்களும் பெருகின.

நல்லது எது, கெட்டது எது என்று ஆராய்ந்து பார்க்கும் தன்மையும் வளரலாயிற்று. தீயனவற்றைத்தவிர்த்து நல்லனவற்றை ஏற்று வாழும் பண்பினை மேற்கொள்ளத் தலைப்பட்டான்.

இன்பமயமான காலத்தை மகிழ்ச்சியாக ஏற்பதைப் போன்று, துன்பதுயரங்களையும் சவாலாக ஏற்று எதிர்கொள்ளத் தொடங்கினான்.

### நன்னெறிகள்

சிந்தனைக்கு இடம் தந்த மனிதன், தானும் தன்னைச் சார்ந்தவர்களும் நல்ல முறையில் வாழ்வதற்கேற்ற வழிமுறைகளைத் தேடலானான். தான் வாழும் சுற்றுச் சுழலுக்கேற்றவாறு வாழ்வதற்கான சில கருத்துக்களைத் தொகுத்தான்.

இவ்வாறு தொகுக்கப்பட்ட கருத்துக்கள்- மார்க்கம், மதம், கோட்பாடு, நெறிமுறைகள் என்று விரிவடையலாயின. மனித வாழ்க்கை செம்மையாக அமைய வேண்டும் என்பதற்காகவே இந்நடைமுறைகள் வகுக்கப்பட்டன. இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் இக்கோட்பாடுகள் மாற்றமடைந்து வந்துள்ளன.

இவ்வாறு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த பேரறிவாளர்கள் தொகுத்த நன்னெறிகள் இன்றைய மனிதனுக்கும் உரிய வழியினைக் காட்டிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு தொகுக்கப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டது 'பைபிள்' எனப்படும் திருவிவிலியமாகும். இன்றும் கோடானுகோடி மக்களுக்கு நன்நெறிகாட்டும் திருமறையாகத் திகழ்கிறது.

இன்று உலகில் வாழும் அத்தனை மொழிகளிலும் இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. திருவிவிலியத்தைக் கையிலேந்தும் ஒவ்வொருவரும் ஓர் இறைச் சின்னத்தைத் தாங்குவது போன்ற உணர்வுடன் காணப்படுவர். பைபிளை வாசிப்பவர்கள் ஏனைய சாதாரண கதைகளையோ கட்டுரைகளையோ படிப்பது போன்றல்லாமல் தெய்வீகக் கருத்துக்களைக் கற்பது போன்ற உணர்வினைப் பெறுகிறார்கள்.

இறை ஆணையால் தொகுக்கப்பட்ட கோட்பாடுகளைக் கொண்ட இத்திருமறையின் பொதுமைக் கருத்துக்களை முரசு வாசகர்களின் படைப்பதற்கான ஆணையை நாம் பக்தியுடன் ஏற்றுள்ளோம். 'அவனருளால் அவன் தாள் வணங்கி' நாம் ஏற்றுள்ள அச்சீரிய இப்பணி சிறக்க வாசகர்களாகிய உங்கள் அனைவரின் ஒத்தாசையையும் வேண்டுகிறோம்.


பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனும் இரு பெரும் அங்கங்களைக் கொண்டது திருவிவிலியம். இவை ஒவ்வொன்றும் கரை காணமுடியாத பெருங்கடலுக்கு ஒப்பானவை. இப்பெருங்கடலுள் மூழ்கி, கருத்துச் சிப்பிகளைத் தேடி, விலை மதிக்க முடியாத முத்துக்களைச் சேர்த்து முத்தாரமாகத் தொகுத்தெடுப்பது என்பது உண்மையில் பகீரதப் பிரயத்தனம்தான்.

இறை மீது கொண்ட இறவாப் பெரு நம்பிக்கையே துணையாக நின்று தூண்டும் என்கிற திடத்தோடு பணி தொடருகிறோம். அதேவே முரசு வாசகர்களின் தூண்டுகோலும் துணை நிற்கும் என்ற நம்பிக்கையுமுண்டு.

கிறிஸ்தவனாகப் பிறக்காத ஒருவனுக்கு கிறிஸ்துவக் கருத்துக்களை உரிய பக்குவத்தோடு தேடித்தர முடியுமா, என்ற வினாவும் எழலாம்.

பூமியில் பிறக்கும்போது எவரும் எந்த மதத்துக்கும் உரியவனாகப் பிறப்பதில்லை. பெற்றார் காட்டும் வழியினைப் பின்பற்றி வளர்வதனால்தான், அவர்கள் கடைப்பிடிக்கும் மதக் கோட்பாடுகளை பிள்ளையும் கடைப்பிடிக்கிறது.

ஒரு சைவக் குடும்பத்தில் பிறந்த குழந்தை ஒரு கிறிஸ்தவ குடும்பத்திலோ அல்லது ஓர் இஸ்லாமியர் வீட்டிலோ வளர்ந்துவர நேர்ந்தால், தனது பிறப்பால் தொடர வேண்டிய சைவ நெறியை இயல்பாகவே மறந்து விடுகிறது. ஆகவே பிறப்பு மட்டும் ஒருவருடைய மதக் கோட்பாடுகளுக்கு உரித்துடையதாகாது.



இராஜகுமாரன்

### கிறிஸ்தவத்துடனான தொடர்பு

**சைவ** மதக் கோட்பாடுகளுடன் உறவு பூண்ட குடும்பத்தில் பிறந்தவன்தான் நான். இருப்பினும் இளம்பிராயத்தில் மட்டக்களப்பு மத்திய கல்லூரியில் சேர்ந்த போது, அங்கு எங்களுக்கு ஆசிரியராக வாய்த்த முதறிஞர் ஆர்.என்.சேதுகாவலர் அவர்கள் பைபிள் கதைகளைச் சுவைபடச் சொல்லுவார்.

பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகளையும் புதிய ஏற்பாட்டில் இயேசு பெருமானின் வாழ்க்கை வரலாறுகளையும் அப்பெரியார் வாயிலாகக் கேட்டு இதயத்தில் பதித்தவர்களில் நானும் ஒருவன்.

பெந்தக்கோஸ்த சபையைச் சேர்ந்த போதகர்கள் மாதத்தில் இருதடவைகள் எமது இல்லத்துக்கு வந்து செபம் செய்வார்கள். சைவர்களுக்கு உரித்தான- பெரும்பாலான விரதங்களை அனுஷ்டிப்பவரும், அதிகாலையிலெழுந்து காலைக்கடன்களை முடித்துவிட்டு, ஒரு மணி நேரமாவது தேவார திருவாசகங்களைப் பாடிக் கொண்டிருப்பவருமான எனது அன்னையார் மேற்படி பெந்தக்கோஸ்த சபையினரை வரவேற்று உபசரித்து அவர்கள் நடத்தும் செபக் கூட்டங்களில் கலந்து கொள்வார். மட்டக்களப்பிலுள்ள ஒரு பிரபலமான சைவக் கோயிலின் பிரதான பூசகராக இருந்த ஒரு பிராமணக் குருக்களின் மகனும் மகளும் பெந்தக்கோஸ்த சபையில் சேர்ந்திருந்தனர். இவர்களும் செபம் பண்ணுவதற்கான குழுவில் இணைந்து எமது இல்லம் வருவார்கள். கிறிஸ்தவ கீதங்களை அக்குழுவினருடன் சேர்ந்து சிறுவனான நானும் பாடி மகிழ்வேன்.

எமது இல்லத்தின் அருகே குடியிருந்த ஒரு கிறிஸ்தவக் குடும்பத்திலுள்ள அண்ணனும் தங்கையும் ஞாயிறு தோறும் மத்திய கல்லூரிக் கருகிலுள்ள கிறிஸ்தவ தேவாலயத்துக்குச் செல்லும்போது, சிறுவனாகிய நானும் ஒட்டிக்கொள்வேன். அங்கு நடைபெறும் போதனைகளும் என் உள்ளத்தில் பதிந்துவிடும்.

மட்டக்களப்பு அர்ச் மரியாள் தேவாலயத்தில் அக்காலத்தில் பாஸ்க்கைத் திருப்பாடுகள் தொடந்து பல நாட்கள் நடைபெறும். அப்போது ஃபிரெஞ்ச் நாட்டுப் பாதிரிமாரே கத்தோலிக்கத் திருச்சபையின் பராமரிப்பினை ஏற்றிருந்தனர்.

பாஸ்க்கைத் திருப்பாடுகள் காட்சிகளில் ஈடுபடுத்தப்படும் திருச்சொரூபங்களை ஃபிரெஞ்சு நாட்டிலிருந்து கலைஞர்களைத் தருவித்து உருவாக்கியிருந்தார்கள்.

இவை மிகவும் தத்ரூபமாக காட்சிகளில் தோன்றும், இச்சொரூபங்களின் 'நடிப்பினை' எடுத்துக்காட்டாகச் சொல்வதானால் சிலுவை சுமந்து செல்லும் இயேசு பெருமானின் திருச்சோரூப்ம் தெருக்களில் பவனியாக எடுத்துச் செல்லப்படும்போது, அருகில் வரும் தூதர்கள் சவுக்கால் அடித்தால், அச் சொரூபம் ஒரு தடவை தடுமாறி விழுந்து மீண்டும் மேலே எழும். சிலுவையில் அறையப்பட்டுள்ள இயேசுவின் திருச்சொரூபம்-உயிர்பிரியும் போது ஒரு தடவை மேலே எழுந்து துடித்து, தலையை இடது புறம் சரித்து உடலையும் தளர்த்திவிடும். இத்தகைய காட்சிகள் இன்றும் மனதில் பசுமையாகப் பதிந்துள்ளன.

ஃபிரெஞ்சு நாட்டுக் கலைஞர்களுடன் இணைந்து செயலாற்றியவர் திரு. செல்லத்தம்பி என்பவர். சொரூபங்கள் செய்வதில் உள்ள நுணுக்கங்களை இளைஞனாக இருந்த செல்லத்தம்பி நன்றாகப் பழகிக் கொண்டார். தான் கற்ற தலை நுணுக்கங்களை அடிப்படையாக வைத்து மட்டக்களப்பு அருள்மிகு ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவிலில் நடைபெறும் சூரசம்மாரத்துக்கேற்ற சூரபத்மனின் உருவத்தை உருவாக்கினார். அரை நூற்றாண்டுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட இந்தச்சூரனின் சொரூபம் இன்றும் சூரசம்மார விழாவில் பயன்படுத்தப்படுகிறது. சூரன் போர் நடைபெறும்போது பல பக்கமும் சுலபமாக இச்சூரன்- திரும்புவார். சூரனின் தலை வெட்டப்படும்போதும் தானாகவே தலை உடலைவிட்டு முறிந்து தொங்கும். இத்தகைய நுணுக்கமான சூரனின் சொரூபம் இன்றும் புதுமையான தொன்றாகவே கருதப்படுகிறது.

திரு. செல்லத்தம்பியின் கலைத்திறனை மெச்சிய பலர் அவரை 'ஜப்பான்' செல்லத்தம்பி என்றே அழைப்பார்கள். இவருடைய சீடரான ஸ்ரீபன் ஓடாவியாரும் பல நுணுக்கமான கலை அம்சங்களைச் செய்தவர் என்பதை இத்தருணத்தில் நினைவுகூருதல் பொருந்தும்.

இதே போன்றே மேலும் பல்வேறு காரணங்களால் கிறிஸ்தவக் கருத்துக்களில் எனது ஈடுபாடு ஆழமாக வேரூன்றியிருக்கிறது. கிறிஸ்தவக் கோட்பாடுகள் மட்டுமல்லாமல் ஏனைய மதக் கோட்பாடுகளைத் திறந்த மனத்துடன் அறிய முற்பட்டு வருகிறேன்.

எமது முயற்சியில் பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகளைச் சற்றுச் சுருக்கமாகவும் புதிய ஏற்பாட்டிலுள்ள அம்சங்களைச் சற்று விரிவாகவும் தொடரலாம் என்று எண்ணுகிறேன். எல்லாவற்றுக்கும் வாசகர்களாகிய உங்களின் ஒத்தாசையே எமக்குத் துணையாக வரவேண்டும் என்பதே எமது அவா!

(தொடர்ந்து வரும்)

### இராமாயணப் போட்டி: 123

சரியானவிடை:- முத்து மாலை

எஸ். ராஜா,
ள்ளுவர் வித்தியாலயம், தெளிவத்தை, பதுளை.

2. எம்.கே. டீன்,
81/83, பிரதான வீதி, பலாங்கொடை.

வசந்தகுமார்,
லாவலை தோட்டம், உடலநிரிஎல்லை,
ரத்தினபுரி.

4. கே.[illegible].வி. ஆனந்த சர்மா,
ஸ்ரீ கதிர்சன் கோவில், பிரதான வீதி,
மாவனெல்லை..

5. தி. தற்சொருபவதி, 25, A.U.C.குவாட்டஸ், மன்னார் வீதி, வவுனியா.

---

(ஜெயலலிதா வெற்றிப் பெருமிதத்துடன் அசைந்து வருகிறார். உடன்பிறவா சகோதரி சசி "அக்கோய்...." என்றபடி ஓடிவருகிறார். ஜெயலலிதா வெற்றிக் கோப்பையை உயர்த்திப் பிடித்தபடி எம்.ஜி.ஆர். ஸ்டைலில் கைகளைவீசி பாடுகிறார்)

என்றும் துன்பமில்லை, இனிச் சோகமில்லை
பெறும் இன்பநிலை வெகு தூரமில்லை
இனி வழக்கும் கணக்குமில்லை.
கோட்டில் கேட்டிடும் கேள்விகளில்லை.
கொடும் சிறைக்கும் விலங்குக்கும் வேலையில்லை.

(பாடலைக் கேட்ட சசி துள்ளுகிறார். ஜெயாவைக் கட்டிக்கொண்டு பாடுகிறார்)

இன்று நமதுள்ளமே-பொங்கும்
புதுவெள்ளமே
எலக்ஷன் வெற்றியிதே- இனி இன்பம்
ஏந்தி வருமே

(சசி வாய்விட்டு சிரிக்கிறார். போயஸ் தோட்டம் அதிர்கிறது. அதனை இரசித்து ஜெயா பாடுகிறார்)

டெலிபோன் மணிபோல
சிரிப்பவள் இவளா?
எலக்ஷன் நியூஸ்போல்
இருப்பவள் இவளா?

(சசி தொடர்கிறார்)

மழைத்துளி தெறித்தது
எனக்குள்ளே குளித்தது
நினைத்தது பலித்தது
எலக்ஷனில் ஜெயித்தது.

(ஜெயா தொடர்கிறார்)

நாளை நமதே- இந்த
முப்பதும் நமதே!
பி.ஜே.பி. வந்து
கலைஞரை கவிழ்த்தால்
நாளை நமதே! அந்த
ஆட்சியும் நமதே!

## வெற்றிக் கீதம்



## தோற்றோர் பாடினால்....

போனதே போனதே
முப்பதும் வீணிலே
போனதே போனதே!

(கலைஞர் பாடிக்கொண்டிருக்க மூப்பனார் வருகிறார். கலைஞர் பாய்ந்து சென்று அவரை கட்டிப் பிடித்துக்கொள்கிறார்)

காகித ஓடம் கடல் அலைமீது
போவதுபோல இருவரும் போவோம்!
ஆதரவின்றி ஆழ்ந்திடும் ஓடம்
அதுபோல் ஒன்றாய் மூழ்குதல் நன்றாம்.

(மூப்பனார் மூக்கைச் சிந்துகிறார்)

கோஷமும் போட்டு கொடிகளும் ஏற்றி
வேனிலே ஏறி வீதியைச் சுற்றி
எலக்ஷனில் நின்று எல்லாம் இழந்து
தோல்வியை ஏந்தி துடித்துப் போனோம்!

(இருவரும் குலுங்குகிறார்கள்)

உன்னைக் கண்டு நான் வாட
என்னைக் கண்டு நீ வாட
கண்ணீரும் கதை சொல்லும் தேர்தல் சதி
ஊரெங்கும் ஜெயிக்கும்
ஆனந்தம் நமக்கு

காணாத தூரமடா- காணாத தூரமடா...

(கலைஞர் தன் கறுப்புக் கண்ணாடியை கழற்றித் துடைத்துக் கொள்கிறார்)

நெஞ்சமும் கனலாகி
நீறாகும்போது
நிம்மதி என் வாழ்வில்



இனி ஏது?
நாற்பதும் நமதென்று
சொன்னவரெங்கே?
கருத்துக் கணிப்பாக
மொழிந்தவரெங்கே?
கருத்துக்குள் நடந்த
கணிப்புக்கள் எல்லாம்
கனவாகிப் போனதடா...
கனவாகிப் போனதடா..

## வை.கோ. பாடல்



தேர்தலிலே தோல்வியுற்றார்
தலைவரொருவர்
தோற்ற பின்னே அமைதி
எங்கு பெறுவார்?-காலம்
போன பின்னே-அமைதி
எங்கு பெறுவார்?

(தொண்டர்கள் ஆடி மகிழ்கின்றனர் வை.கோ.தொடர்கிறார்)

நன்றி கெட்ட மனிதருக்கு
அஞ்சி நிற்க மாட்டோம்
நாவினிக்க பொய்யுரைக்கும்
பேரை நம்பமாட்டோம்-என்று
கூறுவோமடா! ஒன்று
சேருவோமடா
வீறுகொண்டு சிங்கம் போல்
முன் ஏறுவோமடா!

(வை.கோ.வை ஊர்வலமாக தோளில் தூக்கிச் செல்கின்றனர்)

நெஞ்சினைப் பிளந்தபோதும்
நீதி கேட்க அஞ்சிடோம்!
நேர்மையற்ற பேர்களின்
கால்களை வணங்கிடோம்
காலி என்றும் கூலி என்றும்
கேலி செய்யும் கூட்டமே
காத்து மாறி அடிக்குது-நீர்
எடுக்க வேணும் ஓட்டமே!"

## எம்.பிகள் விலை உயர்வு

இந்தியாவில் எம்.பிகளின் மவுசு அதிகரித்ததை அடுத்து எம்.பிகள் விலை முன்பிலும் பல மடங்காக உயர்ந்துள்ளது.

மேலும் தட்டுப்பாடு ஏற்பட்டால் விலை உயரும் வாய்ப்பு உண்டு எனக் கருதி பல எம்.பிக்கள் பதுக்கலாகியுள்ளனர்.

இதனையடுத்து எம்.பிகள் தட்டுப்பாட்டால் இந்திய நாடாளுமன்றத்தில் கடுமையான பற்றாக்குறை நிலவுகிறது.

கட்சித் தலைவர்கள் சூட்கேஸ்களும் கையுமாக கறுப்புச் சந்தையில் எம்.பிகளை வாங்க போட்டி போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.



'ஓடி விளையாடு பாப்பா
ஒரு கட்சியில் இருக்காதே பாப்பா
கூடு விட்டு கூடு பாய் பாப்பா
ஒருகொள்கையை நாடாதே பாப்பா'

என்று பாரதியார் பாடலை தமக்கேற்ற விதத்தில் எம்.பிகள் பாடித்திரிவதைக் கேட்கக் கூடியதாக இருக்கிறது.

தேர்தல் முடிவு வெளியானதும் மார்க்கெட் நிலவரம் சூடுபிடிக்கும் என்று தெரிந்து உடனடியாக தலைமறைவான எம்.பிகள் பாடு கொண்டாட்டம். அவர்கள் யார் கண்ணிலும் படாததால் அவர்களின் விலை விண்ணை எட்டிக்கொண்டிருக்கிறது.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்

www.padippakam.com





அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு–06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# மேல்நாட்டு மருமகள்



இந்தியத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன. என்னதான் இந்தியாபற்றி உருக்கமாக பேசினாலும் தன் கணவர்மீது கொண்ட காதல்தான் சோனியாவை காங்கிரசுக்கு ஆதரவாக வாக்குவேட்டையாடத் தூண்டியது.

போபர்ஸ் ஊழல் மிகத் தெளிவான ஒன்று. அப்படி மிருந்தும் ஆதாரம் இருந்தால் வெளியிடுங்கள் என்று சவால் விட்டார் சோனியா. அப்பேச்சு சோனியாவும் வழக்கமான 'அரசியல்வாதி'தான். அரசியலில் புரட்சிபண்ண வந்தவரில்லை என்பதைக் கோடிட்டுக் காட்டி விட்டது.

சோனியாவைவிட பிரியங்காவுக்கு வளமான எதிர்காலம் இருப்பதாக கூறலாம்.

பிரியங்காவுக்கு தன் பாட்டி இந்திராவின் சாயல் கைகொடுக்கும்.

இந்திரா காலத்திலும் காங்கிரஸ் தோல்வி கண்டிருக்கிறது. ஆனாலும் மறுபடி வென்று ஆட்சியைப் பிடித்தார் இந்திரா. ஆனால் ராஜீவ் காந்தி காலத்தில் மறுபடி வீழ்ந்த காங்கிரஸ் இதுவரை எழவே இல்லை. எழுவதற்கும் ராஜீவ் குடும்பத்தைத்தான் நம்பி இருக்கிறது.




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# என்ன இது?



சிலவகை மீன்கள் நீரிலும் தரையிலும் வாழக்கூடியவை. தரைக்கு வந்துவிட்டு மீண்டும் நீர்க்குச் சென்றுவிடும் சலமந்தரா (விஞ்ஞானப் பெயர்) என்று அவ்வகை மீனினம் அழைக்கப்படுகின்றது. தவளையும், சலமந்தரா என்கின்ற மீனினமும் மட்டுமே தரையிலும் நீரிலும் வாழும் இயல்பு கொண்டவை.

இது பழைய கண்டுபிடிப்பு. சமீபத்தில் 1980ஆம் ஆண்டு நடுப் பகுதியில் பிரேசில் நாட்டில் தரையில் மட்டும் (ஒரு துளி நீர்கூட தேவையில்லை) வாழும் அதிசய மீனினம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

பூனைபோன்ற முகத்தோற்ற முடையதும் சிறிய சிவப்புப் புழுப் போன்ற வடிவம் கொண்டதுமான இந்த மீன்கள், ஆற்றோரங்களிலுள்ள காய்ந்த இலைச் சருகுகளில் வாழ்கின்றன.

ஆற்றில் நீர் மட்டம் உயர்ந்தால் இச்சருகுகளில் நீர் படும், உடனே இம்மீன் திடும்மென்று குதித்து நீரற்ற பகுதிக்குச்சென்றுவிடும்.

இம்மீனினத்தின் விஞ்ஞானப் பெயர்: ஃப்ரியரோபியஸ்வோக்கேரி. நீரில்லாமல் வாழக்கூடிய உலக அதிசய மீன் இன்றுவரை இதுதான்.

நீர் இன்றி மீன் வாழுமா? கண்ணே நீயின்றி நான் வாழ்வேனா? என்று கடிதம் எழுதும் காதலர்கள் இனி வேறு விதமாக எழுதுதல் அறிவுள்ள செயல்.

# கைகளில் ஏந்தி

கிறிஸ்தவர்களின் புனிதநாட்களில் ஒன்றாகக் கருதப்படுவது தபசுக்காலம் (தவக்காலம்). அதாவது திருநீற்றுப் புதன் முதல் ஈஸ்டர் பெருநாள் (யேசு உயிர்த்தெழுந்த ஞாயிறு) வரையான 40 நாட்களே தபசுக்காலம் எனப்படும். கிறிஸ்தவர்களில் ரோமன் கத்தோலிக்கப் பிரிவைப் பின்பற்றுபவர்களே இத் தபசுக் காலத்தில் உபவாசமிருப்பதை அதிகம் கடைப்பிடிக்கின்றனர். இந்த நாட்களில் முட்டை, மாமிசம், கொழுப்பு, மதுபானம், புகைத்தல் போன்ற பாவனைகளைத் தவிர்க்க வேண்டும் என்பது சம்பிரதாயம்.

முட்டை கொழுப்பு இவைகளைத் தவிர்த்த 'பான்கேக்' தயாரிக்கப்பட்டு அவைகளை சொஸ்பான்களில் ஏந்தி இக்காலங்களில் அவற்றினைத் தயாரித்தவர்களால் பான்கேக் ஓட்டப் பந்தயங்கள் நிகழ்த்தப்படும்.

இதுவரைகாலப் பந்தயங்களில் பான்கேக்கை கீழே விழுத்தாமல் 384 மீட்டர் தூரம் (420 யார்) 59.5 செக்கன்களில் ஓடிச்சாதனையாளரான பெண்மணி நான்ஸ்ரிக்லான்ட் என்பவர்தான். 19 பெப்ரவரி 1985ல் அவுஸ்திரேலியாவின் தலைநகரங்களில் ஒன்றான மெல்போனில் இடம்பெற்ற பந்தயத்திலேயே அவர் உலக சாதனை படைத்தார். 'பான்கேக்' சகிதம் பந்தயத்தில் கலந்து கொண்ட பெண்களைத்தான் காண்கிறீர்கள். விரதகாலம், கையில் 'பான்கேக்', வாசம் வயிற்றைக் கிள்ளும், மனதைக் கட்டுப்படுத்துவதுகூட சாதனைதானுங்களே!





# இருமுறை

இது வித்தியாசமான போட்டி. மூக்கைப் பொத்திக்கொண்டுதான் நேரில் கண்டு களிக்கவேண்டும். சேறும் சகதியும் நிறைந்த ஒரு நிலத்தில் ஒரு கால்வாயை அமைத்து அதனூடாகச் சுழியோடி நீச்சலடிக்கும் போட்டி ஒன்று 9 வருடங்களுக்கு முன்னர் பிரிட்டனில் வேல்ஸ் மாநிலத்தைச் சேர்ந்த லான் விட்டயிர்ட் என்ற இடத்தில் தொடங்கியது.

இது இப்பொழுது ஒரு பிரசித்தமான உலகளாவிய விளையாட்டுப் போட்டிகளில் ஒன்றாகிவிட்டது. 1989ல் சமூகசேவை மையம் ஒன்றினை அமைப்பதற்காக இப்போட்டி மூலம் பணம் சேர்த்தனர்.

அதே வருடமும், 1994ம் ஆண்டிலும் இப்போட்டியில் ஸ்ரீவ் மெடலின் என்பவரே வெற்றி பெற்றார். 60 மீட்டர் (197 அடி) நீளமுள்ள இக்கால்வாயை முகமூடியும் கவசமும் அணிந்து இருதடவைகள் நீந்த வேண்டும். இக்கால்வாய்க்குள் அட்டைகளும் பூச்சிகளும் உள்ளன. இவற்றிலிருந்து பாதுகாக்கவே கவசம் அணிகின்றனர். ஆறுவருடமாக் நடைபெறும் இந்த சாக்கடை நீச்சல் போட்டியில் இருதடவை வென்ற சாதனையாளர் என்ற பெருமையை ஸ்ரீவ் மெடலின் பெற்றுள்ளார்.

அரசியல்வாதிகள் கலந்து கொண்டால் சுலபமாக ஜெயிக்கக்கூடும். சாக்கடை நீச்சல் பழக்கமானதுதானே.

# 1வது பிறந்தநாள் வாழ்த்து

02.03.1998



செல்வி அன் றுக்சினி றோபேட்

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த றோபேட் றுக்சினிதேவி தம்பதியினரின் இனிய மகள் **அன் றுக்சினி** தனது 1வது பிறந்தநாளை SWITZERLANDல் LUZERNநகரில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடினார். இவரை அன்பான அப்பா, அம்மா, சித்தப்பா, பிரியமான பெரியப்பா, பெரியம்மா, செல்லமான பிரவீனா அக்கா, நிரோஷன் அண்ணா, இனிய மாமா, மாமி இலங்கையிலுள்ள அன்பான அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பா, அத்தை, அன்ரிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார், அண்ணாமார், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தினார்கள்.

தகவல்- எஸ்.றோபேட்

# பலம்

1997ம் ஆண்டு கங்குலிக்கு அமோகமான ஆண்டு. கடந்த ஆண்டு நடைபெற்ற சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் குவித்திருக்கிறார்.

பங்களாதேஷின் சுதந்திரக் கிண்ணப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் கங்குலியின் அபார ஆட்டம் இரசிகர்களை கவர்ந்தது. அணியை வெற்றிக்கு இட்டுச் சென்றது. 139 பந்துகளை சந்தித்து 124 ஓட்டங்களை குவித்தார் கங்குலி.

கனடாவில் சகாரா போட்டிகளில் நான்கு ஆட்டங்களில் 'மேன் ஆஃப் தி மேட்ச்' ஆக தெரிவானதும் குறிப்பிடத்தக்க சந்தோசம். 'தனது உதடுகளை இறுக மூடியபடி, கன்னங்கள் சுருங்க, வருகிற பந்தை மிக உன்னிப்பாக கவனித்து, நம்பிக்கையுடன் எதிர்கொண்டு இவர் விளாசும்போது வங்காளத்தின் புலி நகர்வதைப்போலக் காணப்படுகிறார்.' என்று பத்திரிகைகள் புகழுகின்றன.

சகல துறை ஆட்டக்காரர். ஆனாலும் "சிறந்த துடுப்பாட்ட வீரன் என்று பெயரெடுக்கவே ஆசை!" என்கிறார்.

இந்தியாவில் வங்காள மாநிலம் கால்பந்தாட்டத்திற்கு பெயர்போனது. கங்குலியும் ஆரம்பத்தில் கால்பந்தாட்டத்தில் ஈடுபாடு காட்டினார். தான் படித்த பாடசாலையின் கால்பந்தாட்ட அணிக்கு கப்டனாகவும் இருந்தார். கிரிக்கெட்டில் ஈடுபடத் தொடங்கியபின்னர் கால்பந்தாட்டத்தை விட்டுவிட்டார். இரண்டு தோணியில் கால் வைப்பானேன்? அதுவும் சரிதான்.

இந்திய அணிக்கு ஒருநாள் கப்டனாக வரப்போகிறார் கங்குலி என்பதை இப்போதே குறித்துவைத்துக் கொள்ளலாம். ஒருநாள் போட்டிகளில் பொறுமையாக ஆடுகிறார் என்று முதலில் குறை இருந்தது. தற்போது அக் குறையையும் நிவர்த்தி செய்துவிட்டதால், ஒருநாள் போட்டிகளில் முதலில் களமிறங்கும் துடுப்பாட்ட வீரராக தூள் கிளப்பி வருகிறார்.

கங்குலி காளி பக்தர். அவர் மறக்காமல் தன்னுடன் எடுத்துச் செல்லும் படங்கள் இரண்டு. ஒன்று காளியின் படம். இன்னொன்று தன் மனைவி டோனாவின் படம்.





இப்பத்திரிகை கொழும்பு கிராண்ட்பாஸ் ... 5ஆம் இலக்கத்தில் ... 29, வெல்லவீதி ... அச்சகத்தில் மார்ச் 15 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்